உ

சிவமயம்.

# சரசோதிமாலை.

தம்பைமாநகரத்தில் அரசுபுரிந்திருந்த

**பராக்கிரமவாகுமகாராசன்**

கேட்டுக்கொண்டபடி

பிரமகுல திலகராகிய

தேனுவரைப்பெருமாள் என்று வழங்கும்

**போசராசபண்டிதர்**

இயற்றியது.

இஃது,

யாழ்ப்பாணம்

நல்லூரைச் சார்ந்த கொக்குவில்

சோதிடர்

**சந். இரகுநாதையராலும்**

ஷையூர் சு. நடராசையராலும்

பல பிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்தது.

ஷையூர்

ச. இ. சிவராமலிங்கையரால்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

சௌமியஞு கார்த்திகைமீ.

# நூலாசிரியர் பெயர் முதலியன.

உரைத்தசகவருடமுறுமாயிரத்திருநூற்
றொருநாலெட்டினிலிலகுவசந்தன்னிற்
றரித்திடுவைகாசிபுதன்பனையினாளிற்
றம்பைவளர்பராக்கிரமவாகுபூப
னிருந்தவையிற்சரசோதிமாலையீரா
றெய்துபடலநூற்றொன்பான்முப்பானான்காம்
விருத்தமரங்கேற்றினனாற்போசராச
விஞ்சைமறைவேதியனாம்புலவரேறே.

உ

# முகவுரை.

இச்சாசோதிமாலை இற்றைக்கு ஐஞ்ஞூற்றெண்பத்திரண்டு வருடங்களுக்குமுன்னே தம்பைமாநகரத்தில் அரசுபுரிந்திருந்த சூரியவம்மிசத்தரசனாகிய பராக்கிரமவாகு என்னும் மகாராசனது கேள்விப்படி அவன் சமஸ்தான ஜோதிஷராகிய போசராசபண்டிதரால் இயற்றப்பட்டு அவ்வரசனவைக்களத்தரங்கேற்றப்பட்டது. இந்நூல் சோடசகருமப்படலமுத னட்சத்திர தெசைப்படலம் இறுதியாகிய பன்னிரண்டு படலங்களையுடைத்தாய், முதல் ஒன்பதுபடலங்களாலும் சங்கிதாஸ்கந்தத்தையும், ஏனை மூன்று படலங்களாலும் சாதகஸ்கந்தத்தையும் தொகுத்தும் விரித்தும் விளங்கக் கூறுகின்றதாகலின், இது சைவ வைஷ்ணவர்கள் யாவர்க்கும் பெரும்பயன்றருவதொன்றாம். இது காலாந்தரத்திலே கரலிகிதங்களாலாகிய வழுக்களினாற் பிரதிதோறும் மாறுபட்டுக்கிடந்தமையிற் சிறிதும்பயன்படாதாயிற்று. இதுகாறும் இதனை ஒருவருந் திருத்தி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்த முயலாமையானும், இன்னுஞ் சிறிதுகாலஞ் செல்லின் இறந்தொழிந்துவிடுமாகலானும் லோகோபகாரங்கருதி நாம் இந்நூலைப் பற்பல பிரதிரூபங்களைக்கொண்டொருவாறு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்துவேமாயினேம்.

இங்ஙனம்,

கொக்குவில்:
கர வரு
பங்குனி மீ கஉஉ

சந். இரகுநாதையர்.
சு. நடராசையர்.

# படல அட்டவணை.


| படலம். | பக்கம். | படலம். | பக்கம். |
|---|---|---|---|
| க-வது. சோடசகருமப்படலம் | ௩ | எ-வது. தெய்வவிரதப்படலம் | ௫உ |
| உ-வது. ஏர்மங்கலப்படலம் | க௫ | அ-வது. குணாகுணப்படலம் | ௪௬ |
| ௩-வது. பலகருமப்படலம் | உ0 | ௯-வது. சுபாசுபப்படலம் | ௬எ |
| ௪-வது. அரசியத்படலம் | உ௪ | க0-வது. நாழிகைப்படலம் | அ0 |
| ௫-வது. யாத்திரைப்படலம் | உ௬ | கக-வது. சாதகப்படலம் | அஉ |
| ௬-வது. மனைசெயற்படலம். | ௩௩ | கஉ-வது. நக்ஷத்திரதெசைப்பட | ககஉ |

கணபதிதுணை.

# சரசோதிமாலை.

### விநாயகவணக்கம்.

பூமேவுமாதுதினமும்புணர்பொற்பமைந்த
மாமேகவண்ணன்மருகோன்மதமாமுகத்தோன்
பாமேவுசெஞ்சொற்புலவோர்கள்பரவியேத்துந்
தேமேவுசெந்தாமரைத்தாளிணைசென்னிசேர்ப்பாம். (க)

### திருமால்வணக்கம்.

வேதத்தினுண்மைப்பொருளாய்விதியாய்விரிந்த
பூதத்தினெங்குஞ்செயலாய்ப்பொருள்யாவுமாகி
யோதத்தினம்போருகக்கண்டுயிலுத்தமன்பொற்
பாதத்தைநாளும்பணிந்தன்புடனேத்துகிற்பாம். (உ)

## பாயிரம்.

வேறு.

பூமாதுமேவுதோளான்பொற்கமலத்துவாழு
மாமாதுசேருமார்பன்மாமணிநாடனெங்கோன்
காமானுஞ்செங்கைவள்ளல்கதிரவன்மரபில்வந்தோன்
பாமாலைசூடுமீளிப்பராக்ரமவாகுபூபன். (க)

தம்பைகாவலவன்வாசத்தாதகிமாலைமார்பன்
செம்பொன்மால்வரையில்வெற்றிச்சினப்புலிபொறித்தவேந்த
னம்புராசியினைமேனாளமுதெழக்கடைந்தமாயன்
கும்பமார்முலையார்மார்பன்கோரவாம்புரவிவீரன். (உ)

வாரணமெட்டும்பாம்புமகிழ்வுறவளர்ந்ததோளான்
கோரவெஞ்சமரில்வென்றுகுலவியவாகைவாளான்
சேரலர்மகுடரத்நந்தேய்வுறச்சிவந்ததாளான்
பேருலகனைத்தும்வாழப்பிறந்தபூராடநாளான். (ங)

நீதியும்பொறையுமன்புநெறியுமோர்வடிவமானோன்
கோதிலாயிரமாமத்தகுஞ்சரத்தானைராசன்
மேதகுகருணைதன்னால்விளங்குமாமுனிவன்றந்த
தாதுவின்பூசையாலுஞ்சதக்கிருதனையதக்கோன். (ச)

திங்கண்மும்மாரிபெய்யச்சிறந்துயர் தருமமோங்கப்
பொங்குசீர்ப்பிரந்துவீசப்போற்றுசெங்கோல்விளங்கப்
பங்கயத்தாரோர்வாழ்த்தப்பாவலர் துதிக்கமிக்க
மங்கலவளமேகூடமன்னவர்வணங்கிச்சூழ. (ரு)

சேனையும்பொருளும்வாழ்வுமேன்மையுஞ்சிறப்புஞ்சீருந்
தானமுநெறியுமோங்கத்தன்னுடனுதித்துவாழு
மானநால்வாகைவேந்தருந்திசைமுழுதுங்காக்க
மானவேற்றருமனென்னமாநிலம்புகழவாழ்ந்து. (சு)

கனகமாமகுடஞ்சூடிக்காசினியனைத்துங்காக்குந்
தனிமதிக்குடைக்கீழ்ச்சிங்காசனத்தின்மேலினிதிருந்து
மனுநெறிநடாத்திவாழுமங்கலவாண்டோரேழி
லினியசோதிடநன்னூலைத்தமிழினாலியம்பென்றோத. (எ)

புண்டரீகத்தார்மார்பன்புகழ்ச்சரசோதிமைந்தன்
மண்டலமெண்ணுந்தேனுவரைப்பெருமாளென்றோது
பண்டிதபோசராசன்பரவுநற்குருவைப்போற்றித்
தண்டமிழ்விருத்தப்பாவாற்சரசோதிமாலைசெய்தான். (அ)

## அவையடக்கம்.

கூறுசொற்புன்சொலேனுங்கொள்கையின்பொருணலத்தால்
வீறுசேர்கேள்விமிக்கோர்மீக்கொளற்பாலதாகுஞ்
சேற்றெழநடந்துசென்றுந்தேனுகர்சுரும்புமொய்க்கு
நாறுசெங்கழுநீர்கொய்யுநலமெனப்புவியின்மாதோ. (கூ)

வேறு.

பன்னாண்மொழிந்தவெனதுகவிப்புன்சொற்பரந்துநிகழ்ந்திடவே
நன்னாவலர்தஞ்செழுஞ்சொற்கணனிமேதினியிற்சிறந்துளவா
லன்னாவலர்கட்குபகாரம்யான்செய்தமையாலம்புவிமே
லென்னாலுரைசெயிந்நூலினைதஞ்சிறிதுமுரையாரே. (க0)

முன்னூலுணர்ந்தமுனிவோர்கண்முதலோர்மொழிந்தசோதிடமாம்
பன்னூல்விளங்கும்பொருளதனைப்பார்மேனிகழும்படியாக
வன்னூலுரைத்தநெறிவழுவாதாராய்ந்தூசிநுழைவழியின்
மென்னூல்செல்லுஞ்செயல்போலத்தமிழ்நூலிதனைவிளம்பலுற்றேன். (கக)

பற்றுங்கருப்பர்தானமுதற்பரவுங்கருமமெண்ணிரண்டு
மற்றுங்கருமம்பலவகையுமருவுங்குணமுமுறையொழுங்குஞ்
சுற்றுங்கோளின்பலாபலமுந்துலங்குங்குறியுஞ்சுபாசுபங்கண்
முற்றுஞ்சிறந்ததொகையாக்கிமுறையால்யானுமொழியலுற்றேன். (கஉ)

பாயிரமுற்றிற்று.

முதலாவது

# சோடசகருமப்படலம்.

———:o:———

## கருப்பாதானம்.

வேதாகமங்களுரைநூலின்விளம்புங்காலந்தனிலுரைத்த
வாதானத்தினியல்பதனையறைந்தநெறியின்முறையனாக
மீதாகியமந்திரமருந்துமேன்மைதீர்த்தநீர்பெறவே
போதாரளகமங்கையர்க்குப்புகலுங்கருப்பமுளதாமே. (க)

## வேறு.

பன்னியசிறப்பினாலேபைந்தொடியாரைச்சேர
நன்னுதலார்கள்பூத்தநாண்முதனாலுந்தீதாம்
பின்னர்ப்பன்னிரண்டுநாளிற்பேசியகருப்பமுண்டா
மன்னநாளொற்றைபெண்ணாமாணதாமிரட்டைநாளே. (௨.)

அத்தநற்சதயஞ்சோதியனுடமந்தத்தினோ
டுத்தரக்கூட்டமோணமுரோகிணிமூலநன்றாஞ்
சித்திரைபுநர்தம்பூசஞ்செழும்பரிமானவிட்ட
மத்திமம்வெள்ளிபுந்திமதிகுருவாரமாமே. (௩)

யாடுவாவிருத்தையாறும்பக்கமட்டமிசென்மங்க
ளாடுதேண்மகரங்கும்பமாகியநான்குந்தீதா
நாடுமொன்றெட்டுத்தூய்மைநண்ணுறக்கங்குறன்னிற்
கூடுமாதானத்திற்குக்கூறினார்முனிவரன்றே. (௪)

மங்கைசென்மத்தோடாயமூன்றுபத்தாறின்மன்னுந்
திங்களைச்செவ்வாய்வந்துசேர்ந்திடிற்றெளியநோக்கிற்
பொங்குசீர்மலடியன்றேற்புகன்றமூப்பிளமையன்றேற்
றங்கிடுங்கருப்பமென்றுதக்கவர்கூறினாரே. (௫)

உதயமோடொன்பதைந்தினுயர்குணவியாழனிற்க
மதிசுபக்கோட்கணோக்கிமருவியகுணங்களேற
விதமுறுமுதயந்தீக்கோள்விளங்கியேநோக்காதாயி
னிதமுடன்கருப்பமுண்டாயினிதினிற்பெறுவரன்றே. (௬)

## புங்ஸவனம்.

மூன்றுறுகருப்பந்தன்னின்மொழிந்திடுமாதமூன்றி
லிந்துசேர்க்குணங்களேறவிருத்தைநீண்மிதுனஞெண்டு
†பைந்தொடிநீத்துப்பூசம்பரவுமோணத்திற்சோமன்
புந்திபொன்புகர்வாரத்திற்புங்ஸவனத்தைச்செய்யே. (௭)

---

† பைந்தொடி-கன்னி.

### சீமந்தம்.

மாதர்முற்கருப்பந்தன்னின்மாதநான்கெட்டிலாறிற்
போதனற்றிங்கள்வெள்ளிபொன்னவன்வாரமாகுந்
தீதுறு ‡ தெரிசம் † பக்கச்சித்திரையிருத்தைதன்னோ
டோதுதேள்சிங்கநீக்கியுரைத்தமுற்பகலிற்கொள்ளே. (௮)

### விட்டுணுபலி.

மானிருபூசமந்தமாயனுத்தரங்களத்தந்
தேனுறுமலரோனுளிற்சீமந்தகருமமாமா
லீனமிலெட்டாமாதத் § தேறுபன்னிரண்டோரேழி
லானரோகிணியோணத்திலரியமால்பலியாமன்றே. (௯)

### சூதிகாக்கிருகப்பிரவேசம்.

வேறு.

வாசிநீள்புநர்தமுத்தரங்கள்விதிமாயனத்தமுதன்மூன்றுநாள்
வீசுமானனுடமந்தநாளினில்விளம்பிருத்தைமுடிவெட்டுடன்
மாசிலாவிரவிபௌமன்வாரமொடுமன்னுதேள்குடமகற்றியே
பேசுமிக்கநெறியோடுமங்கையர்கள்பேற்றகம்புகுதனன்றரோ. (௧௦)

### சாதகருமம்.

வேறு.

பிறந்தநற்பிள்ளைதன்னைப்பிதாவினன்மகிழ்ந்துநோக்கி
நிறைந்தநற்கடன்களெல்லாநீங்கலாவன்பினலே
சிறந்திடுமுகூர்த்தம்யாவுந்தெரிந்துநூன்முறையினெண்ணி
யறைந்தகாரியங்கள்செய்யலாகுமக்கணத்திற்றனே. (௧௧)

### பஞ்சாயுதந்தரித்தல்.

வேறு.

அஞ்சாகியநாடனிலன்புடனே, நெஞ்சாரநிறைந்தமுகூர்த்தமதிற்,
பஞ்சாயுதமாம்பணிபாலகனுக், கெஞ்சாதுதரித்திடலாமிகவே. (௧௨)

### நாமகரணம்.

வேறு.

பெற்றநாட்பத்தீராறிற்பேற்றகந்தூய்மையாக்கி
யுற்றகோளுச்சநட்பினோங்கியமுகூர்த்தந்தன்னிற்
குற்றமாமிருத்தையோடுகுலவுபத்திரையுந்தீதாம்
கற்றறிபுதன்பொன்வெள்ளிகலைமதிவாரமாமே. (௧௩)

உத்தரமூன்றுஞ்சோதியுரோகிணிமுதலவைந்து
மத்தமாலாதிமூன்றுமனுடமுமகமுமாகுஞ்
சுத்தமோரெட்டதாகுஞ்சொற்றிரராசிநன்றும்
புத்திரர்க்கினிமையோடுபொருந்துபேரிடுவதற்கே. (௧௪)

---

‡ தெரிசம்-அமாவாசி. † பக்கச்சித்திரை-௪, ௬, ௮, ௯, ௧௨, ௧௪-ம் திதிகள்.
§ ஏறுபன்னிரண்டு-பூர்வபக்கத் துவாதசி.

### நாமாக்ஷரம்.

அகரமாடரிதேளாகுமரிவைமீனிகரமாகு
மூகரநீண்மிதுனம்வில்லாமோங்காரங்கும்பமாகு
நிகரிலேகாரத்திற்சூநீள்விடைஞெண்டுகோலாம்
பகருமக்ககரமாதிபலவகைநெறியிற்கொள்ளே. (௧௫)

### பாலூட்டல்.

சென்மத்திலிரண்டாநாளிற்சிறந்தநாண்முப்பத்தொன்றீ
னன்மைக்கூறுனகோட்கணலமுறுமுகூர்த்தந்தன்னிற்
றுன்மைப்பார்தனக்குநேரேசொல்லியபூசைசெய்து
பன்மைப்பாலருக்குச்சங்காற்பாலினைப்பருக்கனன்றே. (௧௬)

### கன்னவேதனம்.

ஓதுபன்னிரண்டாநாளினுரைக்குமெண்ணிரண்டாநாளின்
மாதமாறேழினெட்டின்மருவுமுற்பகலினன்றும்
‡ பாதிநாட்பக்கந்தானும்பானுசேய்சனியுந்தீதாங்
கோதிலாவரியுந்தேளுங்கும்பமுங்கொள்ளாரன்றே. (௧௭)

பூசமுத்தரங்களோணம்புனர்தமான்றலையவிட்ட
மீசநாளத்தமந்தமினியசித்திரையுநன்றும்
வீசசீருவாவிருத்தைவிளம்பினுரில்லைகண்டாய்
காசணிமுலையினுளேகன்னவேதந்தனக்கே. (௧௮)

### சூரியசந்திரகோதரிசனம்.

மாதமோர்மூன்றினன்றுய்மருவியமுகூர்த்தந்தன்னி
லாதவன்றன்னைக்கண்டுற்றந்தநாளனுகூலத்திற்
றீதிலாமாதநாலிற்றிங்களைப்பசுவைக்கண்டாற்
கோதிலாநன்மைசேய்க்குக்கூடுமென்றியம்பினுரே. (௧௯)

### அன்னப்பிராசனம்.

வேறு.

ஆறொடிரட்டைவருமாதமைந்தனதின்மேலுமொற்றைமகளா
மேறோதுபக்கமிதிலிந்துபுந்தியெழில்வெள்ளிசெம்பொனினிதா
மாறுறிரண்டொடிருநாலிருத்தையபரான்னமந்தியுடனே
கூறுமீனம்விடுதேளினோடுகுறிதூய்மைபத்தின்மிகவே. (௨௦)

வேறு.

பைத்தபாம்பனலங்கேட்டைபவனனுட்பரணிமூல
நித்தனுண்மகமுப்பூரநீக்கவேநின்றநாட்க
ளுத்தமம்புதன்சேய்வெள்ளியொன்பதெட்டேளிற்றீதாம்
பத்தியோடிதனைக்கொள்ளிற்பாலர்தமுணவுக்காமே. (௨௧)

ஓதுபொன்கதிர்மால்வெள்ளியொன்றுமூன்றிரண்டுநாலிற்
றீதிலாநெறியினிற்கத்திங்கணல்வினைகள்செய்ய
மேதகுபாலர்க்கூட்டின்விளம்புவதென்கொல்விண்ணோ
ராதரமெய்துமாழியமுதெனநன்மையாமே. (௨௨)

---

‡ பாதிநாட்பக்கம்-ஒருபகலிலே உ. நக்ஷத்திரம் உ. திதி வந்தநாள்.

## கிரகபலி.

### வேறு.

இரவிதனக்குயர்கிழக்கினிலவிலைபிற்றிரிகடுகுடன்பொற்சோறும்
வருமதிக்குவிளவிலைபின்வாயுவினிற்றயிருடன்வெண்சோறுமாற்
றரைமகனுக்கெண்ணெயுடன்செஞ்சோறுந்தருகடம்பிற்றயங்குதெற்கி
னுரைபுதனுக்கெழில்வேம்பினுயர்வடக்கிற்சர்க்கரைபாற்சோறுநெய்யே. ()

கனகனுக்குப்பொற்சோறுமரசிலையிற்கருதியவீசானந்தன்னி
வினியபுகர்தனக்கெரியில்வெண்ணெயுடன்வெண்சோறுமேற்றபுன்கிற்
சனிதனக்குநரரிறைச்சிதன்னுடனேகருஞ்சோறுலிலையின்மேற்கிற்
சினவரவந்தனக்கன்னங்குகைதையிலாந்திகழ்நிருதித்திசையிலன்றே. (௨௪)

## அரைஞாண், ஆடைதரித்தல்.

### வேறு.

மன்னுமோராண்டிற்பானுமாதாந்தம்பிறந்தநாளி
னன்னெறியுடனீராட்டிநாடியசாந்திசெய்து
பின்னர்நல்லோரைதன்னிற்பிள்ளைசீர்வாழ்நாளேறப்
பொன்னரைஞாணும்பூட்டிப்புதியநற்றுகிலுஞ்சாத்தே. (௨௫)

## சௌளகருமம்.

ஒன்றுமூன்றைந்தாமாண்டினுரைத்தமுற்கூறுசெல்லத்
துன்றுபொன்வெள்ளிதோன்றச்சொல்லுமுத்தராயணத்தி
னன்றுமுற்பக்கந்தன்னின்ஞாயிறுமந்தன்சேயு
மொன்றுமீராறுமாறுமிருத்தையெட்டுவாவுந்தீதே. (௨௬)

அத்தமான்றலையவிட்டமசுபதிகடைநாளோணஞ்
சித்திரைபுநர்தம்பூசஞ்சீருறுத்தரங்கள்சோதி
வைத்திடுசகடுசெக்குமத்திமம்வரிவிற்கும்பந்
தத்தரிமறிமேதணீத்துத்தக்கநற்சௌளஞ்செய்யே. (௨௭)

சொல்லியநோயாஞ்சிங்கந்துன்பமாமாடுதேளேற்
கொல்லுமக்குலத்தைக்கும்பங்கொற்றவர்முனிவாம்வில்லு
நல்லதாங்கோணின்றுலுநாடியகும்பந்தீதா
† மல்லதுமிகவுந்தீதாமறைந்திடுசௌளத்திற்கே. (௨௮)

* சூரியன்மாதமொன்றுஞ்சொற்சனிமாதமேழும்
பார்மகன்மாதமெட்டும்பகுதியாற்குறையும்வாணு
ளாரியன்புந்திவெள்ளியம்புலிபத்துமைந்துஞ்
சீரியபன்னொன்றேழுஞ்செவ்விதினேறுமன்றே. (௨௯)

### வேறு.

எண்ணெய்தேய்த்துமிரும்புனலாடியு
முண்ணுநல்லமுதுண்டணிபூண்டுமேற்
பண்ணும்பூசற்பயணத்தினும்வெறு
மண்ணிடத்தும்மயிர்வினைதீதரோ. (௩௦)

---

† அல்-இரா. * இக்கிரகங்களுதயத்தில் நிற்பின்.

வேறு.

ஒன்றுதனச்சேதமதாநான்கின்மாதாவோராறுசகோதரமெட்டுற்றபாரி, பொன்றிடுமொந்தானியங்களளியுமொன்பான்புகலீராறெனிற்கிளைகள்போக்குமீரேழ், துன்றியநங்கைக் காகாவுவாக்கள்வந்த தாயதினந்தனிற் சௌளந்தொடங்கிச்செய்தா, னன்றிதருதந்தையுடன் பிதிர்க்குச்சேத நரகமுறுமென முனிவர்நவின்றிட்டாரே. (௩௧)

வேறு.

ஆறுகார்த்திகையுமெட்டுரோகிணியுமைந்ததாகியமகங்களுங்
கூறுசீர்பரவுமனுடமூன்றிஞெடுகுலவுமுத்தரமொர்நான்குமே
லீறிலாதமயிர்வினையொராண்டதிலிவ்வகைப்படியியற்றிடி
ஞறுதாமரையயன்புரந்திடினுநாசமாய்விடுவர்திண்ணமே. (௩௨)

வேறு.

பானுவிற்பிணியதாக்கும்பனிமதியழகுமேவு
மானசேயாயுட்குன்றுமரும்புதனரசர்நோக்கா
மானிலம்புகழாம்வெள்ளிமறையவன்வாழ்வதாகு
மீனமாஞ்சனியிற்கேடாமியம்பியமயிர்வினைக்கே. (௩௩)

பரிதியின்மறையோர்க்காகும்பார்த்திவர்க்கவனிசேயாங்
கரியவன்வணிகரோடுகருதுசூத்திரர்க்குநன்று
மிரவிசேய்காரிவெள்ளியேழிலேற்றீமையெய்துங்
கருதியமயிர்நகம்பற்கருமங்கடமக்குமாதோ. (௩௪)

இசையுறுவெள்ளிசெம்பொனிலக்கினமீரைந்தெய்திச்
சசியொருநான்கினிற்குஞ்சக்கரயோகந்தன்னில்
விசையவேல்விழியினுளேவிளம்பியசௌளஞ்செய்யி
னசைவிலாவாழ்வுஞ்சீருமாண்மையுமெய்துமன்றே. (௩௫)

வேறு.

கும்பமதிகான்மாதங்கோளரிவின்முற்பாதிகுளிர்முக்காலா
‡ மம்பனையவிழிமுழுதுமில்வாழ்வான்சௌளமெனவறையலாகா
நம்பியவர்செய்திடுகின்யமதூதரவர்பிதிர்க்குநவிரையூட்டிக்
கும்பியெனுநரகினிடைவீழ்த்திடுவரெனமுனிவர்கூறினரே. (௩௬)

வேறு.

வந்துதான்க்ருப்பமுற்றூல்வகையினுற்சௌளஞ்செய்யின்
முந்துறுகருப்பங்கேடாமுடிவுபின்பிதாவுக்கெய்துந்
தந்தைதாய்சன்மநாளிற்றக்கவாண்பெண்சேயானோர்
நந்துமக்கருமஞ்செய்யினசமுந்துயருமாமே. (௩௭)

தன்னருந்தந்தைசென்மநாளினிற்றனையனானோன்
மன்னியபயணம்போகின்மயிர்வினைமுறையிற்செய்யி
னின்னலும்பயமுமுற்றுமிடர்களுமெய்துங்கண்டா
யன்னைதன்சென்மநாளுமக்களுக்குமனையதாமே. (௩௮)

---

‡ அம்பனையவிழி - புரட்டாதி.

## வித்தியாரம்பம்.

உரைக்குமாண்டைந்திற்பானுவுத்தராயணத்துநிற்க
வருக்கன்மால்வெள்ளிசெம்பொனம்புலிவாரநன்று
மிருத்தையாறுவாவொன்றெட்டோடெண்ணுபிற்பக்கந்தீதாந்
திரத்துறுமிராசிநீக்கிச்சிறந்தநற்பகலிற்கொள்ளே. (௩௯)

ஈசன்மால்புநர்தமத்தமிரேவதியனுடஞ்சோதி
வாசிசித்திரைநன்னுளின்வாணிநன்முன்னேற்குற்ற
பூசனைமுறையிற்செய்துபுகழ்ந்துநற்குருவைப்போற்றிக்
காசினிமீதுகற்குங்கல்விகடொடங்கனன்றே. (௪௦)

சொற்புனைகுருவேநாசஞ்சொல்லியவெட்டாம்பக்கங்
கற்றவர்நாசமென்பகருதுபன்னுன்கிற்கண்டாய்
நற்பதினைந்தாம்பக்கநாடியகல்விக்காகா
பொற்புறுமொன்றாம்பக்கம்புகன்றிலர்விஞ்சைக்கன்றே. (௪௧)

அந்தியிற்பன்மூன்றென்னுந்திதியினி ‡ லரையோடேழாய்த்
தந்தநாழிகைநாலானசங்க்ரமங்கல்விக்காகா
விந்துவாரத்தினல்லோரியம்பபரான்னநந்தன்னின்
முந்துநூற்கல்வியாவுமுடித்திடனன்றதாமே. (௪௨)

கன்னியேயுதயமாகக்கருதியபுதனுநிற்க
வன்னவன்வாரமேவுமத்தநாண்மூன்றாங்காலின்
மன்னியசோமனெய்தமருவியவிஞ்சைகற்கப்
பன்னுவார்நாவின்வாழப்பாமகள்விரும்புமன்றே. (௪௩)

வேறு.

இந்துமேதையிலக்கினமேவவே, புந்திவாரம்புதனுறுகூற்றிலே
முந்துவிஞ்சைதொடங்கிடின்முன்னமே, வந்துநாவிற்கலைமகள்வாழுமே. ()

## உபநயனம்.

வேறு.

அறைதருமுதலாண்டெட்டில்வேனிலந்தணர்க்காமன்னர்க்
குறுமுதிர்வேனிலாகுமாண்டுபன்னொன்றுதன்னின்
மறுவிலாக்கார்காலந்தான்வணிகருக்கீராறாண்டிற்
குறிசுபமிரண்டைந்தொன்பானுயமேழ்குருநின்றாலே. (௪௫)

முந்துபக்கத்திற்செம்பொன்மொழிபுகருதித்துத்தோன்றப்
புந்திபொன்வெள்ளிவாரம்பொருந்துநாளிராசிநன்று
மந்தமெட்டிருத்தைவிட்டியாடுதேளரிமான்கும்ப
மந்தனீளிரவிசெவ்வாய்மருவியவிராசிதீதே. (௪௬)

வேறு.

பூசமானயனவிட்டமோடுகேடையுத்தரங்கள்புநர்தத்துடன்
வாசிமாலனுடமத்தமாதியொருமூன்றுவந்தபகறன்னிலே
யோசைவேதநெறியோடுசாகையுடனேமமானவைவிளங்கவே
பூசுராதியர்சிறந்தமார்பினிடைபூணுநூலிடவிசைப்பரே. (௪௭)

---

‡ அரையோடேழாய்த்தந்தநாழிகைநாலு - ௩௦ நாழிகை.

வேறு.

கனகனீள்வெள்ளிமேதைகரியவனடைவினாலே
நனிபுகழிருக்கோடெண்ணுநான்மறையதிபராமா
லனையவர்பகைநீசத்தையகன்றுநட்பாட்சியுச்ச
மினியகேந்திரங்களெய்தின்யாவையுநன்மையாமே. (சஅ)

## உபாகருமம்.

ஆவணிமாதமாதலரும்புரட்டாசியாதல்
பாவையேபதினைந்தாதல்பஞ்சமியத்தமாத
ரூவறுமுற்பக்கத்திற்றக்கவாறங்கமோடு
மேவுபாகருமஞ்செய்யவிளம்பினார்முனிவர்மாதோ. (சகூ)

## வேதவாரம்பம்.

வேறு.

அத்தமோடுரைசெய்மூன்றரன்புரவியனுடமோணமிருபூசமா
னுத்தமங்கடையொடுத்தரங்கள்விதியோதுபானுமதிமத்திமம்
பத்தியானதிரராசிசேய்சௌரிபாடிருத்தையொடுவாவிடச்
சுத்தமேழினுறநன்றுநற்பொழுதுதூயநான்மறைதொடங்கவே. (ருo)

## வேதவிரதம்.

வேறு.

கருதியசௌளத்தோதுங்காலநாண்முகூர்த்தந்தானே
குருகுலவாசிபெற்றுக்குலவுகோதானஞ்செய்தங்
கருநெறிமுனிவர்கூறுமானநால்வேதநோன்பைப்
புரிவதற்கினியதாகும்பூசல்வேல்விழியினாளே. (ருக)

## சமாவர்த்தனம்.

கையிருபூசமோணங்கடைவிதியுத்தரங்க
டுய்யமானனுடநாளிற்சொல்லுவாவொன்றிருத்தை
† மையுறுமரிதேள்கும்பமந்தன்சேய்வாரநீத்துத்
துய்யநற்சமாவர்த்தனந்தான்றுலங்கிடச்செய்தனன்றே. (ருஉ)

## விவாகத்திற்குத் தசப்பொருத்தம்.

செப்புநாட்கணங்கண்மாகேந்திரமொடுமங்கைதீர்க்கந்
தப்பிலாயோனிராசிராசியிற்றலைவர்தம்மோ
டொப்பிலாவசியநன்னூலுரைதருவேதையாக
மைப்புயலளகமாதேமருவியபொருத்தம்பத்தே. (ருங)

## நாள்.

மங்கைமுச்சன்மமாதிமருவுமொன்பானுணீத்துத்
தங்கியவொற்றைநாட்கடலைவனாளாகிற்றீதா
மங்கவர்சன்மராசிக்கட்டமராசிநாட்க
டிங்கள்வாண்முகத்தாய்வைநாசிகமிவைமிகவுந்தீதே. (ருச)

† மை - மேடம்.

வேறு.

ஓரிராசியுடனிரண்டெய்திளுற், றீரமுந்துநாட்செல்வனுக்காகுரு
வேர்கொள்பின்னரிரரசியினெய்திய, சீரிரண்டோட்செய்கையுமஃதரோ. ()

வேறு.

பொருவற்றமகங்கடைபூசமுற, மரிமிக்கவுரோகிணியாதிரைநா
ணிரை § யுத்தரமுன்விடநின்றவையு, மிருவர்க்கொருநாளிவையுத்தமமே. ()

கணம்.

வேறு.

ஆதியனுடங்கையரிசோதியிருபூசமந்தமொடுமொனினியதேவகணமாகும், பூதமரணேடுதிரளுத்தரம்விரிஞ்சன்பூரவகைமானிடகணஞ்சதயமூல, மோதுமகநாகமெரிசித்திரையவிட்டமொண்சுழகுகேட்டையெனரக்கர்கணமாகுந், தீதுநரரோடசுரர்தேவர்நரர்நன்றுந்தேவரொடரக்கரிடர்செவ்வைமிகுமொன்றே.

## மாகேந்திரம்.

வேறு.

அரிவைநாளுக்குநாலேழையிரண்டுடன்பன்மூன்று
பரவுமீரெட்டுப்பத்தொன்பதினுடனிருபத்தைந்தா
மிருபதோடிரண்டாநாட்களிறைவனுளாகவெய்திற்
றிரைகடற்புவியின்மாகேந்திரமெனும்பொருத்தமாமே. (௫௮)

## ஸ்திரீதீர்க்கம்.

வேறு.

பாவைநாளுக்கொருபதின்மூன்றின்மேன், மேவுநாயகன்மேதகுநாள்வரிற்
பூவைதீர்க்கமதானபொருத்தமாங், கோவைமுத்தெனக்குலவியமூரலாய். ()

## யோனி.

வேறு.

வாசியானைமறிநாகமோடுபெணிவலியநாய்வெருகுவண்கடாப்
பூசையாகுவெலியேறுமேதியுறுபுலிகடாப்புலியொண்மான்கலை
பேசுநாய்கவியிகழ்ந்ததேனுவொடுபெண்குரங்கொடரிபெட்டைமா
வாசில்கோளரிநல்லாவினேடுபிடியாதிநாண்முதலயோனியே. (௬0)

வேறு.

புலியுமாவும்புரவியுமேதியு, மெலியும்பூனையும்யானையுஞ்சிங்கமுங்
கலையுநாயுங்கவியுடன்மேடமும், பலருமெண்பகைபாம்பினெடாகுவே. (௬௧)

## இராசி.

வேறு.

ஏந்திழையிராசிக்கேழேலினியதாமதற்குமுன்னேற்
சாந்துயராகும்பின்னேற்றரும்பலனன்றதாகு
மாய்ந்தவாறெட்டிராசியாயின்வெந்துயராமென்பர்
காந்தளைமுனிந்தசெங்கைக்கலைமதிமுகத்தினுளே. (௬௨)

---

§ உத்தராடம், உத்தரட்டாதி.

வேறு.

அலவன்சிலையுமரிமீனுமணங்குங்குடமுமடைவுடனே
துலையும்விடையுமறிதேளுஞ்சுறவுமியாழுமிடராகுஞ்
சிலையுமெருதுந்துலாமீனுஞ்சிறந்தமகரமரிநேரே
யிலகுமறிபெண்வருதேளோடிரட்டைகடகங்குடநன்றே. (௬௩)

உரைசெயாறெட்டுயிர்கேடாமோரைந்தொன்பான்சேய்நாசம்
விரவுமிரண்டீராறேதம்வேறாமிராசிமற்றவைநன்
றிருவரிராசிக்கெட்டாறுமொன்பதைந்துமெய்திடினும்
பரவும்வசியமேகாதிபதிநட்பாகிற்கொளனன்றே. (௬௪)

## இராசியதிபதி.

வேறு.

வெந்திறலரியேறாடுமெல்லியல்சிலைகோல்கும்ப
மூந்துகோளாதியெண்ணமூலமுக்கோணமாகுந்
தந்தமவிடத்துக்குச்சத்தலைவரோடெட்டைந்தொன்பா
னந்தநாலிரண்டோர்நட்பாமடையலார்மற்றையோரே. (௬௫)

மிக்கசேய்வெள்ளிபுந்திவெண்மதியருக்கன்மேதை
தக்கபார்க்கவன்சேய்செம்பொன்சனிசனிவியாழனாக
வொக்கவேமேடமாதியுறையகமீராறுமான்
மைக்குழன்மயிலேயன்னோர்மருவுநட்பினியதாமே. (௬௬)

## வசியம்.

அரிதேளுநற்கோன்ஞெண்டுமரிவையுஞ்சாபந்தேளும்
வருகோலுமிதுனமீனுமகரமுமங்கைஞெண்டுங்
கருமீனுமேடமோடுகலசமுமறியுமானு
மிருமேடமாதியெண்ணவிராசியின்வசியமாமே. (௬௭)

## இரச்சு.

குதிரைநாட்கவைநாட்காலாங்குறங்கதாம்பரணிபூச
முதரநூல்புநர்தந்தீயாமுரோகிணியரனுங்கண்டந்
துதியுறுதலைநூன்மானுஞ்சொல்லுமிவ்வொன்பானாளுங்
கதிகொண்முச்சன்மமாதிகணக்கினாலெண்ணிக்கொள்ளே. (௬௮)

நாயகன்மங்கைநாட்களொன்றிலேநண்ணிவந்தாற்
றீயபோக்காகும்பாதஞ்செழுங்குறங்கத்தநாசஞ்
சேய்கெடுமுதரமாகிற்றிகழ்கழுத்தரிவைநாச
மாயநற்றலைவன்சாவாமறைதருசென்னிதானே. (௬௯)

## வேதை.

மறுவின்முக்கோணமோடுவரைகணந்நாலவாக்கி
யறுவகையாகமேவுமாழியின்முதனாளாதி
நெறியினாலெண்ணும்போதுநேர்வரையுற்றநாட்கள்
செறிதருதீமைசெய்யுஞ்செப்புநாள்வேதையாமே. (௭௦)

### வாயசபலி.

இவ்வகைப்பொருத்தமாதியெண்ணுபல்பொருத்தங்கொண்டு
செவ்வையான்முற்பக்கத்திற்சிறந்தநல்லுச்சிப்போதில்
வௌவியபலிவைத்தெண்ணும்வாயசநிமித்தத்தோடு
வெவ்வயிற்கண்ணினுளேவேறுநற்குறியுங்கொள்ளே. (எக)

### விவாககாலநியதி.

வேறு.

கும்பமகண் ஞெண்டுசிலையிற்பரிதிநீக்கிக் கூறுமுயர்வெள்ளிகுருகோதற விளங்க, வம்புலிநிறைந்தகலையோடுகுணமெய்தவட்டமியிருத்தைதெரிசத்துடனகற்றிப், பைம்பொன்மதிவெள்ளிபுதன்வாரமிதுனங்கோல்பாவையினிதென்பர்சிலையோடுவிடைகும்பம், வெம்புமரிகர்க்கடக மத்திமமதாகு மேன்முகமதாகிவருராசிகளுநன்றே. (எஉ)

வேறு. கரமோடுசோதிமகமுத்தரங்கள்கடைநாள்விரிஞ்சனனுடம்
வரமூலமானின்மகள்சன்மநாளின்வருமேழுதாய்மையுறவே
திரமானவோமமுதலானசாந்திசெறிமங்கலங்கள்பெறவே
யிரவானநேரமிகவேவிவாகமினிதென்பநீலமயிலே. (எங)

வேறு. ஓரைநாலைந்தாறேழிலுயர்குருவெள்ளிபுந்தி
சூரியன்றிங்களெய்திச்சேய்சனிசொன்மூன்றெய்தச்
சீருறுவிவாகஞ்செய்யிற்செல்வமுஞ்சிறப்புஞ்சேயு
மேருடன்விளங்கநூறாண்டினிதுவீற்றிருப்பர்மாதோ. (எச)

ஓதுமூன்றாயமொன்பானோரையிற்செவ்வாய்மந்தன்
வேதியன்வெள்ளிநிற்கவிவாகமேசெய்வாராயிற்
றீதிலாவாழ்வுஞ்சீருஞ்சேய்களுஞ்சிறப்புமெய்திப்
பூதலந்தன்னினுளும்புகழ்பெறவிருப்பரன்றே. (எரு)

செம்பொனுலோன்சேயோரைசிறந்தபத்திலாபமேவக்
கம்பநீர்ப்புவனிமீதுகருதியவிவாகஞ்செய்யிற்
பைம்பொனுட்டரசர்கோமான்பராக்ரமவாகுபூபன்
றம்பைநாட்டாரைப்போலத்தலைமையும்வாழ்வுமாமே. (எசு)

### நாலாநீர்.

வேறு. செறிசீர்விவாகநாளாதிதினமோர்மூன்றுசென்றதற்பி
னெறியாலோமந்தனைச்செய்துநேரேவிவாகந்தனக்கோது
முறையாலுளநாட்டிதிவாரமுகூர்த்தமோணஞ்சதயத்தி
னறைவார்குழலாருடன்புரிந்துநண்ணுஞ்செயறானினிதாமே. (எஎ)

### தெருட்சி.

வேறு.

மாதர்முதற்பூப்பினுடன் வன்னிகொம்புவண்சிகரி படும்புடைவை வட்டமாயிற், பீதகநற்புதல்வர்மிகப்பேறாம்வானிற் பிறைநிகரிற்குறுகிடுநாட்பிறங்குநாலு, கோதகலுங்கோணமெனிற்பகைவர்க்கேடாங்கோல்போலவரின்மானங்குலவுங்கோபங், கீதமுறுவண்டுபலபோலத்தோன்றிற்கேடின்றிச்சுகமுறுமாங்கிளக்குங்காலே. (எஅ)

வேறு.

ஆதிநாளொடைந்துநாளுமன்பனுக்குநண்பளா
மேதமற்றவீசனுளொடேழுநாளும்வேசியாந்
தீதுசெய்யுமத்தமோடுசெப்புமெட்டுநாட்களு
மோதுமுத்தராடமாதியேழுமுத்தமங்களே. (௭௯)

வேறு.

எரிமுதநான்குமூன்றுயவசித்தோடெண்ணும்போது
புரிகுழன்மயிலேயுண்ணுட்புறத்துநாள்வகையெட்டாமால்
வருமகவெய்துநோயாம்வாழ்வுறுமகவுக்கேடாந்
திருவுறும்விதவையாநற்சிறப்புறுநெறிகேடாமே. (௮௦)

வேறு.

ஒன்றிவீறையாவிகெடுமின்பமதிரண்டிலோதுதிருமூன்றிலுறுநான்கின்
மிடியைந்திற், றுன்றுமகவேழிணையொடெட்டழிவுசேய்க்காந் துன்பமுறுமா
திலிணையாறுதுயர்பத்து, நன்றுபதின்மூன்றுபதினொன்றினிமையெய்துநாடு
நவமிக்கழுகைநன்றுமிகவேழா, நின்றபதினைந்துநனிதந்தைபதிவாழ்வா நீடி
தியினல்வருபலன்களிவையன்றே. (௮௧)

வேறு.

இந்துவாரத்திற்கற்பாமின்பமாம்வெள்ளிதன்னிற்
புந்தியின்மகப்பேறெய்தும்பொன்னிலெனப்பொருளுமுண்டா
மந்தனிலனைத்துங்கேடாமரணமாந்தலைவன்சேயிற்
சுந்தரப்பரிதிதன்னிற்றோன்றியமகவுசாமே. (௮௨)

வெள்ளிபொன்புந்திவாரம்வீடுதயங்கள்கூறேற்
றள்ளருமகவோடின்பந்தக்கசீர்வாழ்வாமென்ப
ரெள்ளருமதியக்கூறேலேந்திழைப்பேறுமேனை
யுள்ளவர்கூற்றையெல்லாமுரைத்திலர்நன்மையென்றே. (௮௩)

ஆயவோரைக்கோரேழிலருக்கனேல்விதவையாகுஞ்
சேயுறிற்கருப்பக்கேடாஞ்செழும்புதன்மகவுண்டாமா
லேயபொன்வெள்ளிமேன்மையின்பஞ்சேய்வாழ்வதாகுங்
காய்பணிநிற்கிற்றீதாங்கரியவன்கலகங்காணே. (௮௪)

கதிருதயத்திற்றீதாங்கன்னியேபேறுந்திங்கள்
புதனுயர்மகவாஞ்சேயேற்பொலிதருகருப்பக்கேடா
நிதிபுகழ்வாணுட்செம்பொனேரிலாவெள்ளியெய்திற்
பதிகெடுதுயராமந்தன்பாம்புறின்மரணமாமே. (௮௫)

மறியிடரேறுபோகமருவும்யாழ்மகவுவாழ்வாஞ்
செறிகுளிர்குலங்களீனஞ்சேய்கெடுஞ்சிங்கம்பெண்கோ
றிரமுறுமின்பவாழ்வாந்தேள்சிலைநெறிகேடாவாள்
சுறவொடுகும்பந்துன்பஞ்சொல்லுமீன்கோபியாமே. (௮௬)

மாலையிற்றீயதாகுமத்திமமுச்சிப்போதிற்
காலையேநன்றாமென்பகங்குலுமஃதேகண்டாய்
ஞாலுமேன்மதிசிறந்துநற்கருமங்கள்செய்து
சாலவுஞ்சுகத்திலெய்திற்றரும்பலமினியதாமே. (௮௭)

மருவருமளகபாரமங்கையர்தெருண்டநாளிற்
பொருவருங்குற்றமெல்லாம்போதவேயெய்தினாலுங்
குருபுகர்தத்தம்வீடுகூடியேயுதயமானாற்
பரிதிவானவனைக்கண்டபனியெனவகலுமன்றே. (௮௮)

மங்கலவளத்தான்மேவுமனைதனிற்காவலோடுந்
தங்கியவிரவுமூன்றுதவிர்ந்தபினாலாநாளி
னங்குளநெறிகள்குன்றாதடிநிலையேற்றிப்பின்னர்ப்
பொங்குமஞ்சனநீராட்டிப்பொலிவுறுமணங்கள்செய்யே. (௮௯)

## தமர்நீங்குதல்.

வேறு.

சினைதயாவருநற்சித்ரைமாசந்திகழ்சித்திரைநாண்முன்னரையின்
மதியேயுதிப்பக்கன்னிதனைமருவுமஞ்சணீராட்டித்
துதிசேர்பஞ்சவனநூலாற்குளிகையாட்டியரைசுற்றின்
விதியாற்குமருநீங்கியபின்விரவுமனைதன்வாழ்க்கையாமே. (௯0)

## பிரிந்தநாயகனோடு நாயகியைச்சேர்த்தல்.

திங்கட்கிழமைச்சித்திரையிற்சீராரத்தமெழுந்துதிப்ப
மங்கைக்கியைந்தநீராட்டிமணஞ்சேர்கலவைமுலைபூசி
யங்குச்சேராதிகழ்ந்தேகுமாணோடுருகிற்கூட்டிடவே
பொங்கிப்பரந்தநேசமொடுபொருந்திநாளும்வாழ்வாரே. (௯௧)

## அக்கினி ஆதானம்.

வேறு. உரைசெயும்வசந்தகாலத்துத்தராயணத்தின்மிக்க
குருபுகருதித்துத்தோன்றக்கோதிலாமாதந்தன்னி
லருமதிபொன்சேயுச்சமாட்சிநட்பெய்தினன்றா
மருவியவிருத்தைஞெண்டுமகரமீன்கும்பந்தீதே. (௯௨)

சகடுமான்கேட்டையத்தந்தக்கவுத்தரங்களோடு
திகழ்நலவிசாகநாளிற்றிங்களாதித்தன்மேதை
புகர்குருவாரநன்றாம்பொங்கெரியாதானத்தை
நிகழறுதொழிலும்வல்லோர்நெறியினாற்புரிவதற்கே. (௯௩)

வெங்கதிர்வென்றிசீராம்வெள்ளிதானியங்களெய்துந்
திங்களிலனைத்துநன்றாஞ்சேய்பகையச்சமுண்டாம்
பங்குவில்லனைத்துங்கேடாம்பரவுபொன்புந்திதன்னி
லங்கியின்சடங்குசெய்யிலறம்பொருளின்பமாமே. (௯௪)

வேறு. முந்துங்கருப்பாதானமுதன்மொழியுங்கருமநெறியொழுங்கி
னர்ந்துதரிமால்பலியுடனேநண்ணுங்கருமமெட்டகற்றத்
தந்தகருமம்பதினாறாய்த்தமிழ்நூல்விளங்கப்புவிமீது
வந்ததேனுவரைப்பெருமாண்மறையோர்திலகன்மொழிந்தனனே. ௯௫

## சோடசகருமப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௧௦௯.

# இரண்டாவது

# ஏர்மங்கலப்படலம்.

---:*:---

### பூமிப்பிரவேசம்.

வேறு.

சோதிபூசமினவுத்தரம்பரணிசூலிசித்திரைமகத்துடன்
றீதிலாவனுடநாளின்மேதைகுருதிங்கள்சேய்வருதினங்களி
னேதமற்றவிடைநண்டுதேளினிதிருத்தைபத்திரையகற்றவே
தாதுமொய்த்தகுழன்மங்கையேகுலவுதாரணிக்கருமமாகுமே. (க)

### ஏர்ப்பூட்டல்.

வேறு.

விஞ்சுநீராடிவெண்டுகிலும்வீக்கியே
யெஞ்சலினிலமகட்கேற்றபூசையா
னெஞ்சினிற்கோபமானீக்கிச்செய்யிடை
யஞ்சுசான்மூன்றுசாலுழுதலாகுமே. (உ)

ஏறுயர்கபிலைமெய்யெழுந்தநோயது
கூறிடின்முரிந்தவால்கூர்கொம்புள்ளது
மாறிடின்மற்றவைவிளைவின்மாட்சியாம்
வீறுறுகலப்பைதான்முரியின்வீவரே. (ங)

### கலப்பைச்சக்கரம்.

வேறு.

ஏர்முடிமேழிதன்னிலிசையிருமூன்றுநாளிற்
சீர்பெறவுழுவானாயிற்றீதுறவெருதுகேடா
மூர்நுகங்கொழுவீராறிலுழவனுக்கிடரதாகு
நேர்நிகழ்நடொட்பத்துநீடியநன்மையாமே. (ச)

### கிருஷியாரம்பம்.

வேறு.

அந்தநாட்பரவுமுத்தரங்கள்விதியத்தமூலமிருபூசநா
ளிந்துவெள்ளிகுருபுந்திவாரமுடனேறுநண்டுகயல்வீணைமான்
வந்தராசியினிருத்தைபத்திரைவயங்குவாவினையுநீக்கியே
முந்துபார்முறைவணங்கிநன்னெறியின்மொழிவெளாண்மைசெயலாகுமே. ()

வேறு.

அரியுடன்புலிவராகமறைதருகமுதைவேழ
மெருதுநற்கோழியானவேழ்வகைக்கரணமீதிற்
கரிபுலிகமுதையென்னுங்கரணமும்விட்டிதானுந்
‡ திரகரணங்கணன்குந்தீயவேளாண்மைக்கன்றே. (ரு)

---

‡ திரகரணமாவன:— கூகை, நாய், பாம்பு, புழு என்பனவாம்.

பணிச்சங்கரம்.

தலைபுடன்கழுத்துநாட்கடாமிருமூன்றுநோயா
நிலைபடவுடலீராறுநிகழ்ந்தநாட்பயிரதாகு
மலைவறநடுவினாலுமத்திமம்வாலிலைந்துந்
தொலைவிலாப்பதரதாகுஞ்சுடருறுநாட்டொட்டெண்ணே. (௭)

## நெல்விதைத்தல்.

வேறு.

மகநீண்முறஞ்சொற்பனைபூசமூலமலரோன்முராரிசதயம்
புகழ்சோதியத்தமுடிவுத்தரங்கள்புகர்மேதைதிங்கள்குருவிற்
பகராறிரண்டொடிணையாறிருத்தைபதினைந்தொடெட்டுமறிதே
ணிகழ்சாபமங்கைவிடவோதுகாலநெறியால்விதைக்கவினிதே. (௮)

வேறு.

துன்றிலாபமுடனாறுமூன்றினிற்சுகத்துளோர்கள்சுகமாயுளோர்
நின்றகோணமுயர்கேந்திரங்களுறநெல்விதைக்கினுயர்பயிரதா
மன்றன்மேவுதொடையற்புயாசலனைவாழ்பராக்கிரமபுயேசனை
யென்றுமாசறவணங்குமன்னர்கிளையெனவளர்ந்துசுகமெய்துமே. (௯)

வேறு.

எள்ளருஞ்சுகமேறுமுகூர்த்தமோ, டொள்ளிதானவுயர்நிமித்தங்களில்
வெள்ளியேழினினீக்கிவிதைத்திடிற், றள்ளரும்பயிராகித்தழைக்குமே. (௰)

வேறு.

நன்னெறியிராகுநின்றநாண்முதலேழ்பன்னொன்று
பன்னைந்துபத்தொன்பானும்பகரிருபத்துமூன்று
முன்னியகடையினைந்துமொழிந்தநாள்விதைக்கநன்றாங்
கன்னலைப்பழித்தவின்சொற்கலைமதிமுகத்தினாளே. (௧௧)

வேறு.

எரிநீள்பூரம்புழுவேறும்யமனாயிலியந்தொறுவழிக்குங்
கரியாவிடர்சித்திரைவாவிகடைமேவியவுத்தரமீசன்
பிரியாநலிவாம்பறவையினாற்பேதாய்புநர்தமொடுபூச
மரிதாண்மட்டுமெரிதாமென்றருமாதவத்தோரறைந்தனரே. (௧௨)

வேறு.

திருந்துநல்யோகம்பெற்றசித்திரைநாளிற்சிங்கம்
பெரும்புவிமகன்றன்காலவோரையிற்பிறங்குவாழை
மரம்பலவைப்பின்வித்துமற்றையவிதைத்தல்செய்யின்
மருந்தனமாதேபன்றிமதகயமான்புகாவால். (௧௩)

## குடில் வைத்தல்.

வேறு.

நாடியசனியினுத்தராடநாளினிற், கூடியமகரநீள்கும்பவோரையிற்
பாடியைகழனியிற்பயிர்புரந்திடத், தேடியபலகுடில்வைத்தல்சீரிதே. (௧௪)

## வெருளி கட்டல்.

பகர்சனிக்கிழமையிற்பரணிநாளினி, னிகலுறுகேசரியிலக்கினந்தனில்
வகையுறுபயிரிடைவடிவமைத்திடி, னிகழ்பலவிலங்குசெயிடர்கணீங்குமே. ()

### வயற்காவல்.

வேறு.

மையில்கார்த்திகையாநாளின்மான்றலையுதியாநிற்ப
மெய்கொள்பாழ்மனையிறப்பின்விறகினைவரம்புதோறு
மொய்யெரியெரிப்பாராயின்முத்தவெண்ணகையினாளே
செய்யிடைவிலங்குகள்வர்சேர்கிலர்தினமுமன்றே. (கசு)

### கதிராறுத்தல்.

வேறு.

சினச்சிவனோணமுரோகிணியத்தஞ்செப்பியகாலன்மகஞ்சுழகாகும்
பனிக்கதிர்பௌமனருக்கனிவ்வாரம்பன்னுமிருத்தையகற்றினர்கண்டாய்
கனத்தகருஞ்சனிபின்பலநன்றாங்காரிகையேதிரராசியின்றெண்டி
லனைத்துளதானியமும்புவிமீதினறுத்தன்மிதித்தலடுக்கலுமாமே. (கஎ)

### சூடுவைத்தல்.

வேறு.

உத்தரமுத்தராடமுருத்திரன்சதயங்கேட்டை
துத்திவெம்பணிதீயந்தஞ்சோதியிற்கால்நான்கொன்றி
லொத்தபொன்னைந்தினெய்தவுடபெதியகன்றுநிற்க
வைத்திடிற்சூடுநெற்கள்குறைவறவளருமாதோ. (கஅ)

### சூடுமிதித்தல்.

இரவியிற்பத்தினென்றுவிந்துபன்னொன்றினென்று
வருபுதன்மூன்றினென்றுமண்மகற்கெட்டினென்று
விருபதினென்றுகாரிக்கியல்புடைக்கூளிகொள்ளுங்
குருபுகரிரண்டுநன்றாங்கொழுஞ்சூடுமிதிப்பதற்கே. (கக)

### தானியங் கூட்டல்.

வேறு.

மாலடுப்புமுறத்தில்வருங்கடைக், காலின்மிக்ககடகநற்றேளொழக்
கோலவேதியனேழுறக்கூட்டிடிற், சாலநெற்கிரிதானெனவாகுமே. (உ0)

### தானியம் வைத்தல்.

மாசிபங்குனியின்மகம்பூரநா, ளேசிலாதவிடபகல்லோரையின்
வீசுதானியம்வைத்திடின்வெற்பெனப், பேசிடும்படிபெற்றுநிறையுமே. (உக)

### தானியச் செலவு.

வேறு.

பூரமுத்தரவினங்களத்தமொடுவாசிவிட்டமொடுபூசமான்
பாரின்மிக்கபுநர்தத்தினோடுதிரராசிகூறுபயராசியின்
வீரமுற்றசனிபொன்புதன்மதியில்விட்டியந்தமிடைவிட்டிடிற்
றாரின்மொய்த்தகுழன்மங்கையேகுலவுதானியச்செலவதாகுமே. (உஉ)

## புதிதுண்ணல்.

வேறு. அரவநற்பரணிகேட்டையாதிரையறைற்முப்பூர
முரைசெய்மீனுடுதேளுமிருத்தையுமுவாவுநீக்கிக்
குருபுகர்புந்திவாரங்குலவுமவ்வுதயந்தன்னிற்
புரிகுழன்மங்கைநல்லாய்புதிதுணனன்றதாமே. (உரு)

வேறு.

திருவுலாவுதைத்திங்களிற்பூசநாண், மருவுபூரணையின்மகிழ்ந்த்யாவரும்
பொருவிலாதபுதியதருந்திடிற், பெருகுதானியம்யாவும்பெறுவரே. (உச)

## விருந்து.

வேறு. பொருந்துபுகரம்புலிபுதன்சனியினென்றும்
விருந்திடுதனன்றெனவிளம்பினர்கள்கண்டாய்
பெருந்தபனன்மிக்கருருபேரவனிசேயின்
வருந்துயர்விரோதமுமனப்பகையுமாமே. (உரு)

## பலவகைப் பயிருண்டாக்கல்.

வேறு. செங்கதிர்செந்நெலாகுந்திங்களிற்பூவதாகும்
பொங்குசேய்சிவந்தவித்தாம்புதனுயர்பூகமாகு
மங்கையேவெள்ளிபொன்னின்மலரொடுகனியாமென்பர்
பங்குவிற்கரியவித்தாம்பகரிலக்கினமுமஃதே. (உசு)

## மேனோக்கியநாள்.

வேறு. ஈசன்றிருமாணன்முகனினவுத்தரமவிட்டம்
வீசுஞ்சதயமும்பூசமுமேனோக்கியநாளாம்
பேசும்பலநெடுவொன்மரநடவும்பிறைநுதலாய்
தேசந்தனிலுயரும்வினைசெயவும்மிகவினிய. (உஎ)

## கீழ்நோக்கியநாள்.

மூலம்மகமுப்பூரமொழியுஞ்சுழகரவங்
காலன்கனல்கீழ்நோக்கியநாளென்பதுகண்டாய்
கோலந்திகழ்கீழ்மேவியகுலவும்வினைசெயவு
ஞாலந்தனின்மூலந்தனைநடவுந்நனிநலவே. (உஅ)

## எதிர்நோக்கியநாள்.

அகலத்தமொடுரைமூன்றுயரனுடத்தொடுபுநர்த
மிகலைப்பசிகடைமான்றலையெதிர்நோக்கியநாளாம்
பகர்நற்கொடியொடுபூடுகள்படர்வித்திவையிடவும்
மிகவுத்தமமுழவெட்டவும்விதையும்பயணமுமே. (உகூ)

## இலக்கினம்.

வேறு.

விரிகுடமகரம்வேராம்வீணைபெண்ணிலையதாகுங்
கரியதேளாடுபூவாங்காயதாமெருதுகோலி
னரியுடனலவன்றன்னினழகியகனியதாகும்
வரிசிலைமீனந்தன்னில்வழங்கியகிழங்கதாமே. (௩௦)

## நக்ஷத்திரம்.

பரிதனிற்கமுகுதெங்காம்பரணியிற்பலவட்டுண்டா
மெரியவன்மரங்களாகுமெழுந்தபூசினியாம்பண்டி
பொருவில்வான்மரமாமானிற்புநர்தநாட்கரும்புதெங்கா
மரவொடுபூசமூலமான தாம்பூலமாமே. (௩௧)

வருமகங்கமுகுவாழைமன்னுமுத்தரமாவுண்டாம்
பரவுகோதுமையாமத்தஞ்சித்திரைபயறதாகு
மிருமுறவனுடநாளினியைந்தபூமரங்களுண்டா
மரியசீர்க்கேட்டையெள்ளாமாட்டீர்ப்பூவதாமே. (௩௨)

குலவுமுத்தராடஞ்சோலைகொடிகளாம்பூரட்டாதி
தலைமைசேர்கனியாமோணஞ்சதயநற்கரியவித்தா
முலகமெண்ணவிட்டஞ்சோதியுத்தரட்டாதியந்தம்
பலவகைப்பயிருமுண்டாம்பாவையேயறிந்துகொள்ளே. (௩௩)

## வெற்றிலைக்கொடிநடுதல்.

வேறு.

பெற்றபூசம்பெருமதியோணத்தி
னுற்றவெள்ளியொளிர்தருகாலையின்
வெற்றிலைக்கொடிவைப்பின்விரைந்துபோய்ப் (௩௪)
பற்றியேறிப்படர்ந்துபலிக்குமே.

## கன்னித்தலைகாய்ப்பலம்.

வேறு.

மருவும்வாழ்நாட்பொருட்கேடாமரணங்குலத்தோர்க்கழிவாகுந்
தெரிவைநாசமகச்சாவாஞ்செல்வமெய்துஞ்சிறப்பாகு
மிரவிமுதலாயெண்டிசைக்குமெய்தும்பலன்களிருங்கதலி
கருதுபூகந்தெங்குபலாக்கன்னிக்குலைகாயெழுந்திடினே. (௩௫)

## பூமிக்கிரகணம்.

வேறு.

வெப்புறுபரணியோணம்விசாகமோடத்தநாளி
னெப்பறுமூன்றுங்காலிற்கடகமேயுதயமாகச்
செப்பியவுழவுக்கோதுஞ்செய்யின்மண்டின்பராயி
னிப்பெருங்கழனியாவுமிவரதுவசமதாமே. (௩௬)

வேறு.

பொன்னுதிக்கப்புகரவன்பத்துற, வுன்னுதிங்களுன்கேழினிலொன்றுற
மன்னுகாலம்வளங்கெழுபூமிமண், பன்னுவாய்க்கொளிற்பார்தமக்காகுமே. ()

## ஏர்மங்கலப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௧௪௬.

## மூன்றாவது

# பலகருமப்படலம்.

---:o:---

### கோன்ாால் விற்றல்.

வேறு.

மூலமாச்சதயமுத்தரங்கள்கடைமூந்துரோகிணியொடைந்துநாட்
சீலமால்சுழகுகேட்டையத்தமெலிதிங்கள்புந்திகுருவெள்ளியிற்
சாலமாமிதுனமேறுசிங்கமொடுதக்கதேளுயர்துலாத்தில்வெங்
கோலமாகியவிருத்தைநீக்கவிலைகொள்ளவிற்கமிகவாகுமே. (க)

வேறு.

தெள்ளுசோதியிற்சேர்ந்தபொன்னேந்தினில்
வெள்ளியோர்குருவாரத்திலாதியிற்
கொள்ளவிற்கக்குறித்தவர்செய்வரேல்
வெள்ளமென்னமிகுபொருள்சேருமே. (உ)

வேறு.

ஆரழன்மகமேசோதியாதிரையனுடமென்னும்
பேருறுநாட்களெந்திற்பேணியபொருள்களெல்லாஞ்
சேருறக்கொள்ளனன்றுகொடுப்பதுதீதுகண்டாய்
நேருறக்கொடுப்பாராயினிதிபலநாசமாமே. (ங)

### பசுவாணிகம்.

வேறு.

கையவிட்டங்கடைசுழகைப்பசி, பொய்யிலாச்சதயம்மிருபூசநாட்
டுய்யகேட்டைசுரபியின்வாணிகஞ், செய்யவுத்தமமென்பர்தெளிந்துளார். (ச)

### எருமைகோன்ாால்.

உரியகும்பத்திஞெனன்பதின்கூற்றிலே, குருவுறைந்துதயஞ்செயக்கூடுநா[மே.
ளெருமைகொள்ளிலியைந்தவைபல்குமே, பெருமையாவர்க்கும்பேசிடலாகு

### ஆடுகொள்ளல்.

பொன்னிலேயுயர்பூசமிலங்கிட, முன்னுமேடமுயருதயத்திலே
மன்னுமாட்டினைமாசறக்கொள்ளிடிற், பன்னுகோடிகளாய்மிகப்பல்குமே. ()

### கன்றீனும் பலன்.

வேறு.

ஆதியாங்கருப்பமுண்டாயையிருமாதஞ்சென்று
மேதிகோவீன்றவாரமேதினிசேயதாயிற்
போதுலாங்குழலினளேபுனிற்றிளங்கன்றாந்தாயுஞ்
சேதமாம்பரிதிவெள்ளிசிறுகன்றுசேதமாமே. (எ)

## நவவஸ்திரந்தரித்தல்.

வேறு.

கடைநாளவிட்டமயனுத்தரங்கள்கரமாதியைந்துபுநர்த
மிடல்வாசிபூசமதிமேதைவெள்ளிமிகுசெம்பொன்வாரமதிலே
யடலாடுமீன்விலரிதேளகற்றவழ்காகுமென்பர்மலர்மே
னடமாடுமென்னநடையாயெவர்க்குநவமானகோடியுடையே. (அ)

வேறு.

ஆதவன் றுகிநீதாகுமம்புலியீரமெய்து
மேதினிசேயிற்றீயுமேதையிற்றனமுண்டாகும்
வேதியன்ஞானமேவும்வெள்ளியிற்போகமன்னுங்
கோதுறுமலினமாகுங்கூறியசனியின்மாதோ. (கூ)

வேறு.

மகள்கோல்கும்பம்விடைகடகமகரமிதுனந்தனிலென்றும
புகழ்சீர்வாழ்வுபொருளின்பம்போதமகிழ்ச்சியுளவாகுந்
தகர்தேண்மீனமரிசாபந்தன்னிற்புதியதுகிலுடுப்பிற்
றுகழ்சேர்துன்பந்துயர்தீமைதுக்கங்கேடுமிகவாமே. (கo)

## ஆபரணம் பூணல்.

வேறு.

மானந்தமாதிகரமோரிரண்டுவருபண்டிபூசமனுட
மூனங்கொள்காரிகுருவெள்ளிபுந்தியுயர்சோமவாரமுடனே
மீனங்கைசாபம்விடைவீணையோடுமிகுநந்தைபூரணையிலே.
யானந்தமாகவுலகோர்விரும்புமணிபூணலாகுமயிலே. (கக)

வேறு.

துன்றுசோமன்சுகோதயமேவவே, நின்றமால்புகர்கேந்திரநிற்கவே
நன்றெனும்பலநற்பணிபூண்பரே, லொன்றுகோடிநூறுய்மிகவோங்குமே. ()

வேறு.

சனிரோகிணியிற்றகைசாலமுதத், தினிதானவிலக்கினமேவிடவே
பனிவார்குழலாய்பணிபூணுவரே, னனிகோடிகளாய்நலமார்தருமே. (கந)

## இரணமோசனம்.

வேறு.

சனிகுருவாரம்ராசியங்கிசந்தன்னிலென்று
மனுடநாளிரண்டாங்காலிலதினுறுமுகூர்த்தந்தன்னி
னனிவருமிருத்தைமூன்றிஞுடியகுளிகன்றன்னில்
வனிதையேயறிந்துகொள்ளாய்வருங்கடன்கழித்தனன்றே. (கச)

## சிலகருமங்களுக்குப்புறனடை.

வேறு.

மாதரைக்கூடவுமகுடஞ்சூடவுங், காதுபோர்செய்யவுங்கல்விகற்கவும்
பேதமிலரும்பொருள்பெறவுமெய்திடற். றீதுகாலங்களைத்தெரிந்திடார்களே

## அமுதநிலை.

வேறு.

பெருவிரலடிமுழந்தாட்பெருந்தொடைகுய்யநாபி
கருதியநெஞ்சுகொங்கைகண்டநீணாசிநாட்ட
முறைசெவிபுருவநெற்றியுச்சிமுற்பக்கத்தொன்றே
டரியபன்னைந்துநிற்குமமுதமாமேழினஞ்சே. (கசு)

## சதாபிடேகம்.

வேறு.

இரவிகதியாலெண்பான்வற்சரமுமதியோரெட்டுமுறிற்
பரவுநூற்றுப்பத்துமதிபார்வையுற்றநரர்தம்மி
லரசர்குரவர்பவந்தீர்ந்தக்கமரருலகமடைபொருட்டாற்
றரையில்வாழுஞ்சுரர்தம்மாற்றருநூறபிடேகமுஞ்செய்யே. (கஎ)

வேறு.

நன்மதிதன்னிற்சன்மநாட்கலமுத்தரங்க
ளன்னவாகனன்மால்யோர்கையந்தணன்மாலேதிங்க
ளென்னுமவ்வாரமோரையேட்சியிலிருக்கைபௌவந்
தன்னைநீத்தெட்டுத்தாய்தாய்ச்சதாவபிடேகம்பண்ணே. (கஅ)

## அப்பியங்கம்.

வேறு.

சங்கரனுத்தரமாவுயர்கேட்டைசங்க்ரமமூவனையாகியசன்மந்
துங்கவுவாவிணையாறுடனெட்டுஞ்சொற்பதினொன்குடனொன்றுமகற்றித்
திங்கள்புதன்சனிநாட்பகறன்னிற்சேயர்விருத்தர்நோயினர்நீக்கி
யெங்கணுமற்றையவர்க்கினிதாகுமெண்ணெயுடன்சலநானமதன்றே. (ககூ)

வேறு.

பரிதியிஞேயதாகும்பனிமதியெழிலுண்டாகுந்
தரணிசேய்மரணமெய்துந்தார்புதன்வாழ்வுகூடுங்
குருபொருணாசமாகுங்கூறியவெள்ளிதத்தாம்
வருசனியனைத்துநன்றாம்மஞ்சனமாடுவார்க்கே. (உ0)

அருக்கனிற்செய்யபூவுமவனிசேய்தன்னின்மண்ணுங்
குருத்தினத்தறுகுதானுங்கோதிலாவெள்ளிநீறுந்
திருத்தியவெண்ணெய்சேர்த்துச்சிறப்புடன்முழுகுவீரே
லுரைத்தவக்கிழமைக்குற்றமுண்மையாயில்லைமாதோ. (உக)

தந்தைதாய்தமையன்சேட்டைதரணியினிருக்குங்காலை
யிந்துவாரத்தினெண்ணெயிழுகியேமுழுகலாகாச்
சிந்துறமெண்ணெயோடுதிகழ்ந்திடுவெண்பூச்சேர்த்து
நந்துறுபுனலினுடனன்றெனவுரைப்பரன்றே. (உஉ)

## வயித்தியம்.

வேறு.

ஆதிபூசமயனுத்தரங்கள்கரமாதிமூன்றுபனையந்தமான்
மாதவன்புனர்தம்விட்டமோடிணைமடந்தையோடுசேரராசிபி
லேதமுற்றசனிமூவிருத்தைவிடவெட்டிலாறிலெழுதூய்மையில்
வாதபித்தகபநோய்கண்மாறிடவயித்தியங்கள்செயலாகுமே. (உ௩)

## நோயினர்முழுகல்.

வேறு.

விதியொடுத்தரமரவிரேவதிவிறன்மகங்கழைசோதியு
மதியெழிற்புகர்தினமிராசியுமருவுமங்கசமுமொழியவே
திதியிருத்தைகடொரிசமெட்டொடுதிகழ்பகற்பொழுதுதன்னிலே
முதிரவுற்றெழுபிணிகண்மாறிடமுழுகலாமெனமொழிவரே. (உ௪)

## இரணவயித்தியம்.

வேறு.

உருத்திரன்மூலமுடன்பணிகேட்டையுரைசனிசேயுதயந்தினமீதி
விருத்தைதுலாமகளாடுயர்நண்டிவிசைகொடிதாகியகோள்பலமோடு
பொருத்தமதாகியநாட்களினேரே பொருப்பினையொத்ததனத்தெழின்மாதே
பெருத்துயர்நோயடிவேரறுகைக்கேபீறலறுத்தன்மிகச்சுடலாமே. (உ௫)

## நோய்நீங்காமை.

வேறு.

ஈசனுட்பரணிபூரமூன்றுவசுவெண்ணுகேட்டைசதயத்துடன்
மாசிலாவரவுசோதிவெங்கனலின்மந்தனேடிரவிபௌமனிற்
பேசுமாறொடிணையாறிருத்தையொடுபிறைகுறைந்ததிதிதன்னிலே
நாசயோகமதினோய்கணண்ணிடுகினமனையெய்திடுதறிண்ணமே. (உ௬)

## தகனக்கிரியை.

வேறு.

ஒன்றோடிரண்டுபதினாலொரேழொடுயர்பன்னிரண்டுபதினைன்
றென்றோதுபக்கம்வருசேய்பொன்வெள்ளியெனும்வாரமூன்றுபதநாள்
குன்றாதவெள்ளிமதிபொன்னினோரைகுலவெள்ளிகூறுவிடவே
தென்றீயகோளின்வலிகொள்ளனன்றுதெகனாதியானவினையே. (உ௭)

## சிராத்தம்.

வரமாதுகும்பரவியிற்குறைந்துவருபக்கமைந்தின்மிசையா
மரிதானசன்மமிணையேழுநந்தையடர்பௌமன்வெள்ளிவிடவே
கருமாலவிட்டமகமாடமாதிகரமோடுமூன்றுபனைமான்
றெரிபூசநாளிலினிதாகுமென்பர்பிதிர்காரியங்கள்செயவே. (உ௮)

## சூதகநியமம்.

வேறு. வேதியர்க்கீராறுநாள்வேந்தருக்கீரெட்டாநா
ளேதமில்வணிகர்தங்கட்கியம்புவர்மூவேழாநா
ளோதுசூத்திரர்க்குநேரேயுரைக்குமுப்பத்தோராநாட்
சூதகத்தெல்லையென்றுதொல்லையோர்சொற்றாரன்றே. (உ௯)

சாந்திமுதலியன.

வேறு.

மநமுந்தரங்கள்சதயங்கைபூசமலரோன்முராரிபுனர்த
நிகரற்றசேர்தியனுடஞ்சொலந்தநிறைபக்கமானதினிதாம்
புகலெட்டிருத்தைததனைவிட்டுமிக்கபுதனேடுவெள்ளிகுருவின்
மிகவுற்றசாந்திமுதலானகன்மமினிதர்குமென்பர்செயலே. (௩௦)

பலகருமப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் களசு.

---

நாலாவது

# அரசியற்படலம்.

---

## முடிசூட்டல்.

வேறு.

நையனீணண்டுகும்பந்தனுவில்வெங்கதிரோனீங்க
மையறுமாதந்தன்னின்மருவுமுத்தராயணத்திற்
றுய்யபொன்வெள்ளிவிண்ணிற்றுலங்கிநின்றுதிக்குங்காலத்
தெய்துமுற்பக்கநன்றுமெழின்முடிபுனைவதற்கே. (க)

வேறு.

அங்கையினவுத்தரமுராரியிருபூச மந்தமொடுகேட்டையனுடஞ்சகடு மா
ணிற், றிங்கள்குருவெள்ளிபுதன்வாரமுதயத்திற் செப்பரியமுற்பகலினற்பொ
ழுதுதன்னி, னங்கையொடு தேண்மகரநாடியதுலாமு நண்ணிய கடைத்திதி
யிருத்தையுமகற்றி, மங்கலவளத்தினெடுநூலினெறிதன்ஞன்மாசரியமன்னர்
மகுடம்புனைதனன்றே. (௨)

வேறு.

பகலவன்பகையாற்கேடாம்பனிமதிபோகமெய்து
மகவொடுமென்னர்மாற்றார்வருந்துவர்செவ்வாயாயிற்
புகர்குருப்புந்திவாணுட்பொருளுடன்மகவுண்டாகு
நிகழ்சனியாயுட்குன்றுநீண்முடிபுனையின்மாதோ. (௩)

வேறு.

வடிவிலோரைகோணங்குருமன்னிடப், படிமகன்புகராறொருடுபெத்துற
முடிபுனைந்திடின்மொய்ம்புறுமன்னவ, ரடல்புனைந்துலகந்தனியாள்வரே. ()

மகுடம்புனைதற்குயோக்கியர்.

வேறு.

மரபும்புகழ்ந்தகொடையுந்தெளிந்தமதியும்விளங்குதனுவுந்
திரமுஞ்சிறந்ததொழிலும்மிகுந்ததிறலும்பரந்தசுரர்பா
லருளுங்குணங்கள்பலவும்பொருந்துமறநற்பராக்ரமபுயனைப்
பொருவந்திறங்கொள்வரமன்னர்மௌலிபுனையுந்திறத்தர்மயிலே. (௫)

## திறைகோள்ளல்.

கரமாதிமூன்றுசகடாதிநான்குகருதுத்தரங்கடிருமால்
புரைதீரவிட்டமுரையாடமோடுபுதனிந்துவெள்ளிகுருவிற்
பரவாடுகும்பமுயர்தேளிருத்தைபௌவங்களொன்றுடிருநா
றெரியாவகற்றிநவமாகவந்ததிறைகொள்ளனன்றுமிகவே. (௬)

## இராசதரிசனம்.

வேறு.

சீரவிட்டமினவுத்தரம்புரவிசெங்கண்மான்முடிவுசித்திரை
பாரிலத்தமனுடஞ்சொன்மானினியபண்டிபூசமெனுநாளிலே
நேரிருத்தைதெரிசத்திஞேடுவிடனீடுதிங்கள்குருவெள்ளிமால்
வாரமுற்றதிரராசியேயினிதுவாகைமன்னர்முடிகாணவே. (எ)

## வாகனமேறல், படைக்கலப்பயிற்சி.

வேறு.

பாரிலிருபூசமினவுத்தரமொடந்தம்பாய்பரிமகஞ்சகடுமானனுடமோணஞ், சீருலவுசோதியொடு சித்திரைகரத்திற் செம்பொன்மதி புந்திபுகர் வாரமொடு மேவு, மோரைதனிலொன்றினுடனுறுபதிஞென்றிலோ துதிதியைந்திவிணை யைந்துபதினைந்திற், றேர்புரவியானைமுதல்வாகனமதேறல்செப்பரியவாயுத நற்பயிற்சியினிதாமே. (அ)

## வாகனகருமம்.

வேறு.

திருமாலவிட்டமகமுத்தரங்கடிகழ்சோதிவாசிபுநர்த
மருமாஞெடந்தமனுடங்கைபூசமயனாளின்வெள்ளிபுதனிற்
குருசோமவாரமுறுராசிநன்றுகொடிதாமிருத்தைவிடவே
பொருவாகனத்தினுறுகாரியங்கள்புரிவோடுசெய்தலினிதே. (௯)

## யானைசேர்த்தல்.

வேறு.

கரியினம்பிறந்தநாட்கள்கருதுமான்றலையந்நாளி
னரியமுற்கூறுவேழமரும்பிடிபிற்கூறுகு
மருவியகாரிவாரமங்கிசபலன்களோடுந்
திரமுறுராசிநன்றுஞ்சிந்துரஞ்சேர்ப்பதற்கே. (௧௦)

## யானை நதிரைப் பயணம்.

வேறு.

ஓதுமான்சென்னியின்மிதுனமுற்றெழ, மேதகுவாரணப்பயணமிக்கதா
மாதிநாட்டனுவினிலரும்பிற்கூற்றினிற், றீதறுகுரகதப்பயணந்தெள்ளிதே.

## அசுவகருமம்.

வேறு.

கையரிபுநர்தஞ்சோதிகடையிஞெண்மானவிட்டந்
துய்யமாவிசாகம்பூசஞ்சொற்றிராசிதன்னின்
மையுறுமிருத்தைநீத்துமதிபுதன்வெள்ளிபொன்னிற்
செய்யவேயினியதாகுஞ்செழும்பரிக்கருமமன்றே. (௧௨)

### அசுவசாந்தி.

வேறு.

சோதியின்மீதுயர்சூரியன்வந்தான், மேதினிமீதுமிகுந்துயராமென்
ருேதினர்நல்லவுழைப்புரவிக்கே, தீதணுகாவகைசாந்திகள்செய்யே. (கங)

### நீராசனசாந்தி.

வேறு.

காராலுயரைப்பசிகார்த்திகையி, லீராறிருநாலியல்பூரணேயிற்
பாரோர்புகழ்நற்பவனங்களிலே, நீராசனசாந்திநெறிச்செயலே. (கச)

### அரசர்காட்டைக்கருமம்.

வேறு.

ஆடியானியதாகியதிங்களிற், பாடமோதிரையிற்பகறன்னிலே
யாடன்மன்னவராட்டையிற்காரிய, நாடுசீர்முகூர்த்தந்தனினன்றரோ. (கரு)

அரசியற்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் ககூக.

---

## ஐந்தாவது

# யாத்திரைப்படலம்.

---:o:---

வேறு.

மருவுகோசரபலன்கண்மன்னியகாலந்தன்னிற்
பரவுமீன்ஞெண்டுதேளிற்பரிதிவிட்டகன்றுநிற்க
வரியசங்கிரமங்கோளினத்தமங்காரிதிங்கள்
வருமெதிர்வெள்ளிநீக்கயாத்திரைவண்மையாமே. (க)

அலவனிலருக்கனின்ருலமர்ந்ததோரிடத்தின்மேவிச்
சலனமற்றிருப்பதன்றித்தாம்பிறகருக்கேனுங்
குலவியபயணம்போகிற்கூறியவாண்டோரேழி
னிலேகுலேந்திடரேயெய்திநீடுசெஞ்சலங்கள்கொள்வார். (உ)

வேறு.

முதலந்தமத்தமரிபூசமோடுமொழிமானவிட்டமனுட
மதிபுந்திவெள்ளிகுருவாரநன்றுவருமூவிருத்தையுடனே
திதியந்தமாறுநடுவொறிரண்டுதிரராசியோடுவிடவே
யிதிலெங்குமானபயணங்கள்போகவினிதென்றுசொல்வர்மிகவே. (ங)

வேறு.

சோதிபாம்பனலங்கேட்டைசுழருசித்திரைவெங்கால
ஞதிரைமகமுப்பூரமறைதருசன்மநாளி
லோதுநற்பயணம்போகிலுன்னியகருமந்தீதாய்
வேதனைமிகவுமெய்திவெந்துயருழப்பான்றே. (ச)

## திசையாத்திரை.

ஒன்றுபன்னொன்றோடாறினுச்சியினெய்யருந்தி
வன்றிறல்யானைமீதின்வன்னியோடேழுநாளி
னன்றதாங்கிழக்கேபோகனன்மதிமந்தன்கேட்டை
யன்றியும்பக்கமோரெட்டழிவுடன்சேதமாமே. (௫)

ஆறிரண்டிரண்டிலேழிலந்தியிற்றிலமருந்தி
மாறிலர்த்தேரின்மீதேமகமுடனேழுநாளிற்
கூறுவர்தெற்கேபோகக்குருவுடன்பூரட்டாதி
யீறிலாவாறும்பக்கத்திடரதேயெய்துமாதோ. (௬)

இரவிடைமீனருந்தியெட்டுபன்மூன்றுமூன்றிற்
புரவியாம்வாகனத்திற்புகலனுடத்தோடேழில்
வரமதாமேற்கேபோகல்வரைந்திடுமொன்றும்பக்க
முரைதிகழ்பானுவெள்ளியுரோகிணிதன்னிற்றீதே. (௭)

பத்தொடைந்தொருமூவைந்திற்பாலினையருந்திக்காலை
மெத்தவிட்டத்தோடேழின்மிகுநரவாகனத்தி
லுத்தமம்வடக்கிலேகலோதுபன்னிரண்டாம்பக்க
முத்தரம்புந்திசேயிலுன்னருங்கேடதாமே. (௮)

### வேறு.

ஆறுதயமூன்றுபதினொன்றுடனிரண்டிலாடல்புகழ்வாகனநல்வாழ்வுமகிழ்வெய்து, மேறுமிடரஞ்சிலிருநாலுசுகமாகுமேழ்பிணி பயங்களுறுமொன்பதழிவாமாற், கூறுதுயர்மேவுமிணையாறிலொருநாலிற்கோலமழியக்கெடுவர்பத்திலிடர்சாவாந், தேறிதனையுண்மையெனமீதுமுகராசிசென்னியெழுராசியிதிலேபயணநன்றே. (௯)

### வேறு.

சோமனேழுறச்சொல்லியநல்லவர், தாமிரண்டுறத்தக்கசெம்பொன்னெழப்
போமவர்க்குப்புவிமிசைப்பூந்துகி, லேமம்வாகனம்யாவையுமெய்துமே. (௧௦)

## சுபசகுனம்.

### வேறு.

முடிமாலைசங்குகுடவாசிவேழமுழவோசைசெம்பொன்மணிதேர்
கொடிவீணைகன்னிமடவார்கள்பொங்குகுடமாயுதங்கள்கவரி
கடிமேவினோர்கண்மதுகோவிறச்சிகனிதீபம்வெண்ணெய்தயிர்பா
லிடர்தீரிரட்டைமறையோர்கண்மன்னரெதிராகிலென்றுமினிதே. (௧௧)

### வேறு.

கோமயம்வண்ணார்தூலகாயர்பதிவிரதைகுரவருடன்பயிர்நெல்லோடரிசி மஞ்சள், சேமமுறுபுத்தகந்தாம்பூலிசாந்து செந்தீயிற்சுவாலை பித்தர்தேவாங் கோசை, நாமமுறுதனச்செல்வர் மதுபானஞ்செய்வோர் நற்பேழைசிவிகை தந்திக்கோடாடை, காமர்மனப்பூரணர்கைத் தண்டினரேயன்றிக் கண்டேகினினைத்தவெலாங்காட்சியாமே. (௧௨)

## அசுபசகுனம்.

வேறு.

அரவம்பன்றிநாய்கழுதையழுதல்கலகந்தலைவிரித்தோர்
சிரமுண்டிதரந்தகர்முடவர்செம்பூவிறகுபுற்சோறு
பரவுந்தவத்தோர்மாசடைந்தோர்பஞ்சுப்பெண்ணெய்மருந்தனல
நரிதோலெலும்பீனரைக்கண்டானன்மைசிறிதும்பெறலரிதே. (கங)

வேறு.

நாவிதர்பூண்கழிமகளிர்மலடர்கோபர்நலிவிருத்தரிலம்பாட்டோரங்க வீன, ரோவியர்பெண்பயந்தவர்களடிமைதூம முதிர்பல்லருண்மாசர்கொலை ஞர்செக்கார், தாவுகுழைபாயல்கயிறுயுணூலோர்சக்கிரிகள்கோழியிசைதனு வுலர்ந்தோர், மாவகலும்வெறுங்கலத்தோர்மகவிழந்தோர்மனையிழந்தோரிவ ரெதிரிற்றீதுமாதோ. (கச)

## துன்னிமித்தம்.

வேறு.

இருமல்பின்றொடர்ந்தழைத்தலிடறுதலெழுந்துதும்மல்
கருமகளிடத்திலெய்தல்கலுழனேவலத்திலேகல்
பெருமழைமந்தாரித்தல்பிறங்குமுற்பாதந்தோன்ற
லுரைசெய்துன்னிமித்தம்வேறுமுளவெனிற்பயணந்தீதே. (கரு)

## தும்மல்.

வேறு.

முன்வலத்தும்மலின்மொய்த்ததீமையாம்
பின்னிடத்தும்மலிற்பெருகுநன்மையா
மன்னியமேற்கொடுவடக்குவாயுவிற்
றுன்னியதும்மலிற்சுபமுண்டாகுமே. (கசு)

## ஸ்திரியாத்திரை.

வேறு.

பாவையிற்கும்பநண்டிற்பானுசேர்மாதந்தானு
மேவுமுத்தரமும்வெள்ளிமேதையுமென்றுநீத்துத்
தாவறமுன்னர்க்கூறுந்தன்மைபோலனைத்துங்கொண்டாற்
பூவையர்க்கினியதாகும்பொலிவுறுபயணமாதோ. (கஎ)

## சமுத்திரயாத்திரை.

புரவிமாலனுடஞ்சோதிபோற்றுமான்பண்டியந்தங்
கரமுடன்புகர்பொன்புந்திகலைமதிவாரமிக்க
சரமதாமிராசியோடுதண்சலவிராசிதன்னில்
வரமுறுமுகூர்த்தங்கொள்ளின்வாரிமேற்பயணமாமே. (கஅ)

## நாவாய்ச்சக்கரம்.

நல்லநாவாய்முழத்தைநாடுமூவெட்டினாலே
யெல்லையிற்பெருக்கியெட்டாற்பெருக்கியவிலக்கந்தன்னைப்
புல்லியவிருபத்தேழுக்கீந்திடப்புகழ்ந்தநாளா
மல்லடார்முலையினாளேபொருந்துநாள்வங்கங்கொள்ளே. (கக)

ஆயபாய்மரத்தோர்சூலமணியமோடபரச்சூலத்
தேயுநாளொன்பதாகியியம்புமுண்ணுளீராறாய்
மேயநாட்புறத்திலாறாய்விட்டபாதாளத்தொன்றாய்ப்
பாய்மரச்சூலநாப்பட்பரிதிசேர்நாள்வைத்தெண்ணே. (௨௰)

மூவகைச்சூலநாளின்மூறிந்திடுநாவாயோடின்
மேவுமுண்ணுளீராறின்மேதகுநன்மையெய்துந்
தாவறுபுறநாளாறிற்சாய்ந்திடுங்காலந்தாட்கும்
பாவையேபடியப்பாயும்பகர்ந்தபாதாளநாளே. (௨௧)

## நாற்கால்விலங்கு யாத்திரை.

வேறு.

மதிபொன்னின்வாரமகமாதிமூன்றுசுழகானகேட்டைசதய
முதலொன்பதாடமுதன்மூன்றிரேணுமொழியேறுசிங்கமறிமீன்
மிதுனஞ்சிறந்தசிலையாகுமென்பர்விடநாகநின்றநெறியாற்
பதநாலவானபசுவாதியாயபலயாத்திரைக்குமிகவே. (௨௨)

வேறு.

இயம்புரோகிணிதனிலிடபவோரையிற்
பயன்றருபசுத்திரட்பயணநன்றதாம்
வியன்கொள்பூசத்தினின்மிதுனவோரையி
னயங்கொள்பல்விலங்கினுக்கேகனன்றரோ. (௨௩)

## பறவையாத்திரை.

வரமுறுமத்தநாண்மங்கையோரையிற், பரவியபறவையின்பயணமாகுமா
லுரைதருசதயமூன்றுத்தரங்களிற், புரையுறுவாரிமேற்போக்குநன்றரோ. ()

## யுத்தயாத்திரை.

வேறு.

உருள்பனைமூலஞ்சதயமுத்தரங்களோணமான்றலைகலங்கரும்பு
பரிகுருப்பறவைசித்திரைகரத்திற்பவனமேதிரம்பெறப்பகைஞர்
விரவுமட்டமத்திலிகலினுக்கேகவெற்றியாமற்றுளவெல்லாந்
தரையினிற்சுபயாத்திரைப்படிகொள்கசமர்செயுமோரையும்பகர்வாம். (௨௫)

வேறு.

தீயரவுசோதிசதயம்பரணிமூலஞ் சித்திரைசிவன்புரவிபூரவகைகேட்டை,
யாயமகநீடுகெதிர்பொன்சௌரிபௌம னங்கிசமிராசிதினம் விட்டியொடிருத்
தை, தூயசெயையாங்கரியபக்கமுடனென்றுஞ்சொல்லுமிகுசக்கரவலங்கள
வைகொண்டான், மேயவடுபோர்கவேள்வையேனுமவைவெல்வர்மேதகுமிராம
னெனமேதினியின்மாதோ. (௨௬)

வேறு.

புந்தியுடன்புகர்சேயெதிராக, மைந்துறுபோர்செயமன்னவர்செல்லி
னிந்திரனேநிகரானவரேனும், வெந்துயரான்மெலிவார்மிகவன்றே. (௨௭)

வேறு.

சீரியபுந்திவெள்ளிசேய்சனிசிறந்தசெம்பொ
னோரைநான்காறுமூன்றேழுற்றுளமுகூர்த்தந்தன்னிற்
போர்செயவேந்தர்செல்லிற்பொருந்தலர்சேனையெல்லா
மூரிவெந்தீயிலிட்டமெழுகெனமொழியலாமே. (௨௮)

வேறு.

வெங்கண்ணருக்கன்மதியோரைதன்னில்விதியேழிரண்டிலுறவே
யெங்கும்மதிக்கவெழுகின்றமன்னருடனேயெதிர்ந்தபடைதா
னங்கண்புவிக்குழுதன்மன்னனுகைவறையும்பராக்ரமபுயேசன்
செங்கண்சிவந்ததிசைமேவுமன்னர்செறிசேனையொத்துவிடுமே. (௨௯)

வேறு.

ஓரைபொன்னுறவொண்கதிராறுற, வீரவெண்மதியெட்டினைவிட்டிடப்
போர்செயும்படிமன்னவர்போவரே, ஞரசிங்கமெனவடனண்ணுமே. (௩௦)

கொற்றமந்தன்குளிர்மதியாதவ, னுற்றவாறுபத்தோரையினெய்திடப்
பற்றலார்கண்மேற்பார்த்திவர்செல்வரேல்,வெற்றிமங்கைவிரும்பியணுகுமே.

ஆடகன்புகரைந்துதயத்துற, நாடுசேய்சனிநற்பதினொன்றுற
வாடன்மன்னரமர்செயப்போவரேற், கோடிமன்னவர்கூடினும்வெல்வரே.

## சந்திரகாலநலம்.

வேறு.

வகுத்தசூலங்கணுன்காய்வட்டமாஞ்சக்கரத்திற்
றொகுத்தசூலத்துநாளிற்றோல்வியுங்கேடுமாகும்
வகைப்படிபுறநாளெட்டுமெத்திமமுண்ணாளெட்டு
மிகுத்தசீர்வெற்றியுண்டாம்வெண்மதிநாடொட்டெண்ணே. (௩௩)

## சூரியகாலநலம்.

சூலமோர்மூன்றிரண்டாய்ச்சுழியிணைக்கப்புநாலாய்க்
கோலமாஞ்சக்கரத்திற்கொடுஞ்சுழிமுச்சூலத்தின்
மேலிலாநாலிற்சாவாம்வெற்றியாங்கப்போரெட்டிற்
சாலமற்றிவையேதீதாந்தபனன்சேர்நாடொட்டெண்ணே. (௩௪)

## சசிசூரியகாலநலம்.

குடமுடனண்டீறாகக்கூறியவிராசியாறு
முடுபதிதனக்குநேரேயுரைத்திடுநிலமதாகும்
வடுவிலாச்சிங்கமாதிமகரமீறாயவாறுஞ்
சுடரவனிலமதாகுஞ்சோதிவேல்விழியினாளே. (௩௫)

மதிநிலமருக்கன்மேவிமதியுமவ்விடத்தேநிற்பிற்
றுதியுறச்சென்றோர்தோற்பர்சொல்லிடினின்றோர்வெல்வர்
கதிர்நிலந்திங்கண்மேவிக்கதிருமவ்விடத்தேநின்றா
லதிலிதுமாறுபாடாமவரவரிடங்களொப்பே. (௩௬)

## சலாகாசக்கரம்.

திக்குநாலெவ்வேழாகச்செவ்வையாய்மதிநாளாதி
யொக்கவேகூட்டமூன்றுமொன்பதேசம்புடந்தான்
றக்கமற்றவையீரெட்டுந்தருபலன்றீயவாகு
மிக்கசம்புடமேநன்றாமிகுசமர்வெற்றியாமே. (௩௭)

### திரிசூலசக்கரம்.

ஓங்குமுச்சூலநாட்களொன்பதின் மரணமாகும்
பாங்குறுமுள்ளிரண்டிகள்பன்னிரண்டினியவெற்றி
தீங்குறும்புறநாளாறுந்திங்கள்சேர்நாடொட்டெண்ணப்
பூங்குழன்மடந்தைநல்லாய்போர்முகத்துணர்ந்துகொள்ளே. (௩௮)

### வாட்சக்கரம்.

சில்லுடன்வட்டங்கண்டம்பாலிகைசிறந்தமல்லுக்
கொல்லிருதாரைதன்னோடலகுடன்முனையிற்கூறு
நல்லநாண்மும்மூன்றாகநாயகன்சன்மநாளோ
டெல்லைநாளிருபத்தேழுமொன்பதாவெண்ணிக்கொள்ளே. (௩௯)

மூரிக்கோளலகுதாரைமுனையுறில்வெற்றியாகுஞ்
சீருற்றசுபக்கோளாயிற்றீமையுந்துயருமெய்து
நேருற்றமாறுபாடாய்நின்றதானங்களைந்திற்
காருற்றகுழலாய்கோட்கள்கலந்துறிற்பலனுமொப்பே. (௪௦)

### கோந்தச்சக்கரம்.

முனைதடிபிடியிணைட்கண்மூவகையொன்பதாக்கிப்
பனிமதிநாடொட்டெண்ணும்பகர்கொந்தச்சக்கரத்தில்
வினையுறுமுனையிற்சாவாம்வெற்றியாந்தடியில்வீழ்கி
லினியதோர்பிடியிலொப்பாமிறைவனுள்வீழ்கிலன்றே. (௪௧)

### யோகினி.

ஒன்றுடன்றசமியீறுயுயர்கொடிகுபேரனங்கி
வென்றிகொணிருதிசண்டன்விடைமருத்தீசன்வான
நின்றுறுபூமிதன்னினிற்பள்யோகினியாம்பின்னு
மன்றநல்வலமுநன்றாமற்றவைநாசமாமே. (௪௨)

### பந்தராகு.

#### வேறு.

நிறைந்தவிடார்சித்தியொடுநன்மைபிணியெய்துநீடுபிணிபங்கம்விரைலாபம கப்பேறாஞ், செறிந்தமிகுபேறுபிணிநாசமகப்பேறாஞ்சித்திபிணியற்பமுறுலா பமிதவெய்தும், பெறுந்தருமமாதிவகைநாலிலுறவெய்யோன்பேசுறுமுதற்கு லவுதிங்களுடனெண்ண, வறம்பொருளொடின்பமுயர்வீடடைவினுலேயச்சு வதிமுதற்பலனுமறிந்துகொள்கரும்பே. (௪௩)

வேறு. போர்செயச்செல்லும்போதும்புதுமனைபுகுதும்போதுங்
காரிகையார்கடம்மைக்கைப்பிடித்தணுகும்போதுஞ்
சீரியபயணமெண்ணித்தீதறச்செல்லும்போதும்
பாரினிற்பந்தராகுப்பலாபலமுணர்ந்துகொள்ளே. (௪௪)

### அடலம்.

எரிகதிராதிசோமனெண்ணுநாளேழினீத்து
வருவதேழிரண்டதாயின்வகையுடன்கலகமுண்டாம்
பரவுமூன்றாறதாமேற்பயமுறுங்கேடுமெய்து
மரியவொன்றைந்துநாலேலடலமதில்லைமாதோ. (௪௫)

## வாரசூலம்.

மதிசனிகிழக்கதாகும்வான்கதிர்வெள்ளிமேற்காம்
புதனுடன்சேய்வடக்குப்போற்றியவியாழன்றெற்கா
நதிமதிகொன்றைசூடுநாயகன்கையிற்சூல
மெதிரிடந்தோல்வியாகுமெவ்வகைவினைக்குமன்றே. (௪௬)

## நிர்வாணி.

மறையவனருக்கன்றீயின்மதிபுகர்நிருதிதன்னிற்
கறையவன்செவ்வாய்காற்றிற்கணக்கனீசானந்தன்னி
னெறியினிர்வாணிநிற்பணிகழ்திசைபுறமாக்கொள்ளின்
வெறிகமழ்குழலினுளேவெல்வதுதிண்ணமன்றே. (௪௭)

## இராகுப்பாய்ச்சல்.

பானுசேய்வியாழன்புந்திபைம்புகர்மந்தனிந்து
வானிறைமுதலாவெண்ணும்வாரத்தின்றிசையிற்றோன்றி
யானவத்திசைக்குநாலாமாசையினிடமேபாய்ந்து
வீனமிலியாமம்பாதியிராகுநின்றியங்குமன்றே. (௪௮)

## பஞ்சபட்சி.

வேறு.

வருசேயருக்கன்வல்லீறுவயங்குதிங்கள்புதனுந்தை
குருவேகாகம்புகர்கோழிகூறுஞ்சனியேமயிலாகுந்
திருவேயகரமுதலடைவேசெப்பும்பறைவையைந்துக்குந்
தருவூணடைநீண்முடியுறக்கஞ்சாவாம்வளரும்பிறைதனக்கே. (௪௯)

புகர்வல்லீறுபொன்னுந்தைபோற்றும்புதனேகாரண்டந்
திகழ்சேயருக்கன்கோழியதாந்திங்கட்சனியேமயிலாகும்
பகரூண்மரணந்துயிலரசுபயணமென்பருதயாதி
நிகழாறைந்துவகையாகநேரேகுறையும்பிறைதனக்கே. (௫௦)

## பெயர்வலி.

வேறு.

பேரெழுத்தைவரியாதியெண்ணியதுபேசுமேழ்கொடுபெருக்கியே
சேருமெட்டறவெடுத்துநின்றவொருசேடமேயுரைசெய்யோனியாம்
பாரினிற்கலுழன்மிக்கபூசையரிநாய்பணங்கொள்பணிபகரெலி
வாரணத்தினொடுமுயலெனக்கருதுவலியதெளியதனைவெல்லுமே. (௫௧)

## புறனடை.

காலமேநன்றுமென்றுகார்க்கியனுரைத்தானென்றுஞ்
சாலவேவியாழன்மிக்கசகுனமேயினிதாமென்றான்
கோலமாண்டவியனுண்ணுங்கொள்கையாமென்றுஞ்சொன்னான்
சீலமாமறையோர்சொல்லேசெனுர்த்தனனன்றுமென்றான். (௫௨)

யாத்திரைப்படலம்முற்றிற்று.

ஆ. செய்யுள் உ௪௩.

---

ஆறாவது

# மனைசெயற்படலம்.

நிறைமணமுருவந்தூளிசோதனைநிமித்தத்தாலே
தறைதனைத்தேர்ந்துகொண்டுதக்கவிண்ணவர்க்குமண்ணோர்க்
கறைகளாம்படியேசெய்வதறிந்து † பூநாகநிற்கு
முறையினால்வீடுகட்டமொழிந்தனர்முனிவரன்றே. (௧)

## பூபரீட்சை.

வேறு.

பாண்டுமாமறையோன்பொன்னிறமரசன்பாடலம்வசியனுங்கருமை
காண்டகுமுழவனிவைநிறமினிமைகதித்திடுமறையவன்றுவர்ப்பு
வாண்டிடுமரசன்புளிப்புவாணிகனுமறைந்தகூர்ப்புடனுறுகார்ப்புத்
தீண்டிடாக்கைப்புப்பின்னவனெனவேசெப்பினர்சிற்பநூறெளிந்தோர். (௨)

பாலுடன்புட்பங்கிழங்குநீர்மணமாம்பனவனேமுதலியநால்வர்க்
கேலுமிப்பூமிப்பரிசனைக்கேகுமிடத்தினிற்சுபசகுனங்கண்
மேலுறினன்றாமசுபமேலாகாமேதினிதனிற்குழிகல்லி
யோலநீர்விட்டுப்பர்ணமதிட்டாலுறுவலமினியதென்றோதே. (௩)

உரைத்திடுமுழந்தாட்டாழ்வுநாற்கோணமுறக்குழிகல்லியக்குழியை
நிரப்பிடினம்மண்மிஞ்சிலுத்தமமாநிறைந்திடின்மத்திமங்குறையிற்
கரிப்புழுச்சாம்பரிந்தனம்பூரங்கடியதேளரவு ‡ பூநாக
மிரைத்திடுந்தவளையென்புறினம்மண்ணிருமனையியற்றிடற்காகா. (௪)

ஆடகம்வெள்ளிமுதலியதாதுவரியவொண்மாமணிக்கூட்டந்
தேடியநெல்லுமுதலதானியங்கள்செப்பியகூர்மனொண்டுற்றால்
வீடுகளரங்கங்கோயின்மன்றங்கள்வேள்விசெய்சாலைகளாதி
நாடுறுநிலைபேறானவையியற்றனன்றெனச்சிற்பநூனவிலும். (௫)

## பூமியின்ஆகிருதி.

வேறு.

இல்லமேமுதலாம்வாத்துவியற்றிடற்குரியபூமிப்
புல்லுமாகிருதிதன்னைப்புகன்றிடில்விரிவதாகும்
பல்வளைக்கரத்தாய்முன்னோர்பகர்ந்திடுஞ்சிற்பநூலிற்
சொல்லியவகையைப்பார்த்துச்சுகம்பெறவியற்றுவாயே. (௬)

வேறு.

வளர்நிலங்கிழக்கொடுவடக்குத்தாழ்ந்திடி
லளவிலாவாழ்வுடனாக்கமெய்துமால்
விளைவுறுதெற்கொடுமேற்குத்தாழ்ந்திடிற்
கிளர்பெருந்துன்பமுங்கேடுமெய்துமே. (௭)

---

† பூநாகம் - வாஸ்துபுருஷன்.    ‡ பூநாகம் - நாங்கூழ்.

## மரம்வெட்டல்.

வேறு.

திரமெனுநாட்களத்தஞ்சிரவணம்பூசமாதி
மருவியசுபநாட்பக்கமால்குருப்புகர்சுன்வாரம்
பரவுநற்பகலினற்கோள்பார்த்திடுநிலையோரைக்கண்
வரமுறுமயனூல்சொன்னவகைப்படிமரங்கள்வெட்டே. (அ)

## வாஸ்துகருமம்.

விடைமறிமகரம்மீனம்வீணைசேரருக்கனுத
லடலரிதேட்கோன்மேவுமாதவன்றன்னிலாதல்
சுடருறுவெள்ளிசெம்பொன்றுலங்கிவிண்ணுதிக்குங்காலம்
வடுவிலாமுனிவர்கூறும்வாத்துவின்கருமஞ்செய்யே. (கூ)

## வாஸ்துநிலை.

வேறு.

மங்கைமுதன்மூன்றிரவியிற்றலைகிழக்காமன்னுசிலையாதிபகர்மூன்றுதலை தெற்காம், பொங்குதலைமேற்குவருமீனமுதன்மூன்றிற் போற்றுமிதுனத்தினொடுமூன்றுயர்வடக்காந், துங்கமுறுதெற்கொடு வடக்குமுகமாகிற்சொல்லு நிலைவீடுகுணபாலினொடுமேற்காஞ், செங்கதிரவன்றிசையின்மேற்குமுகமாயிற்செய்யவினிதாமனைகடெற்கொடுவடக்கே. (௧௦)

## மாதநியமம்.

வேறு.

அடுத்தமான்சிங்கங்கும்பமலவனிலருக்கனின்றாற்
குடக்கொடுகிழக்குவாயிற்கூறியமனைகளாகுங்
கடுத்ததேளெருதுமேடந்துலாத்தினிற்கதிரோனின்றால்
வடக்கொடுதெற்குவாயில்வருமனைசெய்யனன்றே. (௧௧)

## மாதநிஷித்தம்.

வேறு.

தையன்மீனந்தனுமிதுனத்திலே, வெய்யவெங்கதிராதவன்மேவினு
லெய்துமெத்திசைவீடுகள்யாவையுஞ், செய்யவுன்னினுந்தீமைகளெய்துமே.

## அக்கினிநாள்.

வேறு.

தருமனுலாங்காலிற்றழலுருண்முதற்காறன்னிற்
பரிதிதானிற்குங்காலம்பாவகனுளதாகு
மரமயஞ்சிலையேசெம்புமண்ணினன்மனைகள்செய்யி
லெரியருந்திடுதறிண்ணமெனச்சனற்குமாரன்சொன்னன். (௧௩)

## எழுந்திருப்பு.

மேடமோர்பத்துக்கும்பமிருபதுவிடையின்மூவே
ழோடுநெண்டுயர்கோல்பன்னென்றுலவுமான்பன்னிரண்டு
கூடுதேளெட்டேச்சிங்கமாறதாய்க்கூறும்பாகை
நாடுமெத்திசையில்வீடுஞ்செய்திடனன்றதாமே. (௧௪)

## தம்பத்தாபனம்.

உரைத்திடுமனையினீளமொன்பதுபாகஞ்செய்து
பரித்திடுநடுவிற்கூற்றைப்பங்குமூன்றாக்கியீதிற்
றெரித்திடுமிரண்டுகூறுந்தெக்கணநீக்கிநின்ற
தரித்திடுமிடமேவாத்துநாபியாந்தம்பநாட்டே. (௧௫)

தாயொடுதந்தைகேடாந்தலையுறிற்குலத்தினோடு
சேயுமின்மாதுங்கேடாஞ்செப்பியபாதமாகி
லாயுணீள்வாழ்வதாகுமறைதருமுதரந்தன்னி
னோயொடுதுயராம் ‡ பாம்பினுண்ணியபுறத்திலன்றே. (௧௬)

## ஆயாதிசுட்டுவர்க்கம்.

வேறு.

எட்டுமிணையாறும்வரவேமுதலதாகுமேசரியவொன்பதொடுபெத்தழிவதாகு, மூட்டரியயோனியொருமூன்றினுடனெட்டா முந்திவருமங்கிசமோர்நான்கினுடனொன்பான், சிட்டர்புகழெட்டுடன்மூவொன்பதுயர்நாளாஞ்சீர்மருவுவாரமுரையொன்பதுடனேழா, மிட்டமனைநீளமகலத்தொடுபெருக்கியீதிலடைவேபெருக்கியீயவிவையாமே. (௧௭)

வேறு.

பொருடருங்கொடியேமேவிற்புகையினின்மரணமாகு,
மரிதனில்வெற்றிகூடுமரியநாய்பலநோயாகு
மெருதினிலரசர்நோக்காமிடரதாங்கழுதையாயிற்
கரிதனிலின்பமாகுங்காக்கையேற்கேடதாமே. (௧௮)

வேறு. ஆயங்குறைந்துவியமிகுந்திட்டம்சமாறெட்டொன்றுவரிற்
றீயவாகுமெனநீக்கித்தினமும்பொருந்தாத்தீநாட்கள்
சாயவகற்றிவாரமதிற்சனிசேயிரவிதனைநீக்கி
யேயமனைகள்செய்திடுகிலின்பம்பொருள்சேயினிதுறுமே. (௧௯)

## திசையோனி

வேறு.

கிழக்குமுதற்புள்ளரசுபூனைசிங்கங் கேடுறுநாய்பணியெலிதோன் முயலென்றெட்டும், வழக்குறுதிக்கியோனிகளாமனைகள்செய்யின்வயிரமுறும்பொருட்கேடாமனைக்குநாப்பண், முழக்கமுறுந்தெருவிடுதனன்றாமன்றி முழக்கோலெண்ணிரண்டினிடைவெளியதாகிற், கழைக்குநிகர்தோண் மாதேநன்றாம்வாத்துகருதியவொன்றுயிருக்கிற்களங்கமின்றே. (௨௦)

## மனைமுதலியசெய்தல்.

வேறு.

ஈசனரவஞ்சுழகுபூரவகைமூலமேசரியகேட்டையனலம்பரணிபோர்புள், வீசுகதிரோனவனிசேயுடனிருத்தை விட்டியொடுவோவிட விளம்பினர்கள்கண்டாய், பேசுதிரமோடுபயராசியினிதாகும் பேசரியமிக்கமய னூலினெறிதன்றுற், காசுடனுரைத்துளதின்மேலடிநிறுத்திக் காதலுறுகோயின்மனைவீதிநகர்செய்யே. (௨௧)

‡ பாம்பு - வாஸ்துபுருஷன்.

### சுவர்வைத்தல்.

வேறு.

மந்தன்மால்கவிபொன்வாரமகங்குருவுருண்மூன்றுன
வுந்துமுத்தரங்கடம்மிலுறுந்திரவோரைமேற்கோள்
வந்துறுகூற்றிற்கல்லான்மண்ணினாற்சுவர்கள்வைப்பிற்
செந்துவர்வாயினாளேதிரம்பெறவாழுமன்றே. (உ௨)

### வாயிற்பொருத்தம்.

வேறு.

குடமீன்மேடத்துதித்தோர்க்குக்கூறுமேற்குவடக்காகும்
விடையாழ்குளிருத்தரங்கிழக்காம்விறலார்சிங்கம்பெண்டுலைக்குக்
கொடியார்கிழக்குத்தெற்காகுங்கொடுந்தேள்வின்மானமன்மேற்காம்
வடிவார்வாயில்விடுந்திக்குவகுத்தார்மிகுத்தமதிவல்லோர். (உ௩)

### வாயில்வகுத்தல்.

வேறு.

ஓதியவீடறையொன்பதுசெய்தே, நீதியொடைந்தறைநீள்வலம்விட்டுக்
கோதறுமூவறைகூறிடம்விட்டான், மேதகுவாயில்விளம்பிடைசெய்யே. (உ௪)

வேறு.

கிழக்கினின்மனைக்குவாயில்கேடிலாவடக்குமேற்குப்
பழிப்புறுதெற்கதாயிற்பகர்ந்திடுவடக்குக்கீழ்பான்
முழக்கியவருணனில்லமுதுகதிர்தெற்கதாகுஞ்
சுழித்திடுவருணன்றெற்காஞ்சொல்லியவடக்கில்வீடே. (உ௫)

உத்தரஞ்சதயமூலமுருண்மகஞ்செயையிற்காரி
வித்தகவியாழன்வாரம்விளங்குமவ்வேட்சிதன்னில்
வைத்திடுங்கதவுவாயில்வகுத்திடல்வாய்த்தபூட்டுத்
தைத்திடன்மிகவுநன்றாந்தாமரைமுகத்தினாளே. (உ௬)

### ஆ யு ர் யோ க ம்.

வேறு.

பரவுதிங்கள்பொன்பத்துறநாலுறத், தரணிசெய்சனிதக்கபொன்னொன்றுற
வரியகோயிலகனகர்செய்வரேல், வருடமெண்பதுமன்னிவழங்குமே. (உ௭)

பரிதிபுந்திபகர்பதினொன்றுபத், தரியவோரையுற்றந்தணன்கேந்திர
மருவவீடுயர்மாளிகைசெய்வரேல், வருடநூறுவழங்கிவிளங்குமே. (உ௮)

பார்மகன்புகர்பானுபொன்னாறுட, னோரைமூன்றுயரைந்தினிலுற்றிட
வூரிடம்புரமோதகஞ்செய்வரே, லேர்கொளாண்டிருநூறுவழங்குமே. (உ௯)

வேறு.

இருங்குருவெள்ளிபுந்தியிலக்கினநாலேழெய்தி
வருங்கதிராறின்மேவமந்தனோர்மூன்றினிற்பப்
பெரும்புரங்கோயில்வீடுபீடுறச்செய்வராயிற்
றிருந்தியவருடநூறுதீதறவிளங்குமாதோ. (௩௦)

வேறு.

தாயவோரைபத்தேழினிற்சொல்லிய, மேயதிங்கள்புதன்சனிமேவவே
கோயின்மாநகர்கூறகஞ்செய்வரே, லாயவாண்டறுநூறுவாழங்குமே. (ருக)

வேறு.

உரைபுகர்வியாழன்றிங்களோரையேழ்பத்தினிற்க
வரநகர்மனைகள்செய்யில்வருடமாயிரமுநண்ணிப்
பருமணிநாடனெங்கள்பராக்ரமவாகுபூபன்
றிருவடிபணிந்தமன்னர்பதிகள்போற்றிரமதாமே. (ருஉ)

## அட்டின்முதலியஅமைத்தல்.

வேறு.

இந்திரனின்மடைப்பள்ளிதென்கீழ்த்தேனுவெழிற்சாலைதெற்கினில்வந்தூர்த்தகுப்பை, யுந்துநிருதியிற்சயனமாட்டமெந்தையுய்யானம்வருணனிற்காரெருமைவாயுத், தந்துறுநென்முதலான தானியங்கடரும்வடக்கிற் போசனமாம்வடகீழ்நீர்ச்சால், கந்துகமார்த்திடும்பந்திகடவுட்பூசை கலைமடந்தையாலயமுங்கட்டிவாயே. (ருரு)

## வீடுகட்டவிலக்கியகாலம்.

வேறு.

ஓதுபொன்புகரொடிதுங்கவொண்டொடிகருப்பமெய்த
மேதகுமனைகள்செய்யில்விளங்கியகருப்பம்வைக்கின்
மாதவர்தெளியச்சொன்னார்மனைவிக்குமரணமென்றே
சீதவெண்மதியம்போலுஞ்சிறப்புடைமுகத்தினளே. (ருச)

## வீடுவேய்தல்.

ஙனிகதிர்சேய்தீமன்னுநனைந்திடுந்திங்கள்வெள்ளி
கனகன்மால்வாழ்வுகூடுங்கரியவனசமுண்டா
மினனுறுநாட்கள்முன்பினியம்புநாட்பாவநாட்கள்
வனிதையேயனலாற்கேடாம்வாழ்மனைவேயினன்றே. (ருரு)

வேறு.

தீயபௌமன்றினத்தினிற்றேன்றிய
வோய்வின்முற்பொழுதுட்டணராசியிற்
சேயுதிக்கச்செழுமனைவேய்ந்திடிற்
காய்கனற்பயங்காட்டுதறிண்ணமே. (ருசு)

வேறு.

நினையுநீர்ராசியில்வெள்ளிநிற்கவே
யனையவன்றினத்தினிலவனுதித்திட
மனைகள்வேய்ந்திடுவரேன்மாதவத்துளோர்
நனையுமென்றுரைத்தனர்நானிலத்தரோ. (ருஎ)

## வீடுமெழுகல்.

பகலவன்காரிநீள்பார்மகன்றனி, லகமெழுகிடிற்பொருளனைத்தாநாசமாம்
புகர்மதிபீதகன்புந்திதன்னிலே, மிகவுறும்வாழ்வுசீர்மேன்மையின்பமே. ருஅ

## குடிபுகல்.

வேறு.

உத்தராயணநீள்கும்பமாதமொன்றொழியநன்றா
மெய்த்தகோலரிதேண்மாதமேவுதெற்கயனத்தாகும்
வித்தகவெள்ளிசெம்பொன்விளங்கிடவலமும்பின்னு
முத்தமம்வெள்ளியன்றேனுரைத்தவேழெட்டிற்றீதே. (௩௯)

வேறு.

அரனங்கிபூரவகைகேட்டைமூலமரவம்விசாகமனுடஞ்
சரமென்றராசியுடன்மூவிருத்தைதகைசாலுவாவும்விடவே
வருகின்றசெம்பொனுயர்வெள்ளிமந்தன்மதிபுந்திவாரமதிலே
புரமுந்துகோயினகரங்கள்வீடுபுகனன்றதாகுமிகவே. (௪௦)

வேறு.

இரட்டையாம்பூசம்வேதாவிந்துபூரணைகிழக்கா
முரைத்தவுத்தராதிநான்கோடோதியநந்தைதெற்காந்
திரட்பனைமூலமாலுத்ராடம்பத்திரைமேற்காகும்
புரட்டைநீத்தவிட்டமோடைந்துயர்செயைபுகல்வடக்கே. (௪௧)

செய்துறுமாதமொன்பான்செழுந்தினமொன்பானோடு
மையுறுமொன்பான்பக்கம்வரைந்தனர்மிகவுங்கண்டாய்
துய்யசன்மங்களோடுதுலங்குமுற்பக்கந்தானு
மெய்துமுற்பகலுமல்லுமினிதகம்புகுவதற்கே. (௪௨)

தீருநோய்வறுமையெய்துஞ்செல்வமாங்குலத்தோர்மைந்தர்
சேரலர்மங்கைவாணாட்சிதைந்திடுமாறுபாடா
நேருடனினைவுகூடுநிறைபொருளெய்தும்வாழ்வா
மேரணிமூலையாய்சன்மராசிதொட்டெண்ணும்போதே. (௪௩)

வேறு.

கூறுகின்றகுலவுபயத்துட, னேறுகும்பமிகலரிநன்றவாஞ்
சீறுதேள்சுபர்சேர்ந்திடிலாகுமால், வேறுராசிவிளம்பினரில்லையே. (௪௪)

வேறு.

தாழொடுகதவுமின்றித்தரைசுவர்தீற்றலின்றிக்
கோளுறுபலியுமின்றிக்கூரைமேல்வேய்தலின்றி
நீள்பசுவுறைதலின்றிநீடகம்புகுவராயிற்
கேளிரும்பொருளுந்தானுங்கெடுவதுதிண்ணமாமே. (௪௫)

## மனைக்குத் தூபமிடல்.

வேறு.

கடுகிங்குகொத்தமதுரம்வசம்பு ‡ கனமோடுகுக்கில்வகைதான்
சுடுசுக்கெருக்குத்துளபம்மெதுக்குத்துகடீர்புடோலமனையிற்
கடுமிக்கதூபமிடுதேண்முகுட்டைகடுநாகம்யாவுமணுகா
விடுமுற்றபேய்கடனதானியங்கண்மிகுமென்பர்மேன்மையவரே. (௪௬)

---

‡ கனம் - கோரை.

வேறு.

மறையொலியோமமோங்கமங்கலமுழவமார்ப்ப
நிறைமணிவிளக்கினேடுநிகழலங்காரமன்ன
வறைமய னூலினேரிலடுத்தநற்பொருளுங்கொண்டு
குறைவறத்திருவையுன்னிக்குடிபுகனன்றதாமே. (௪௭)

சயனம் போசன முதலியன.

வளையொக்கவடக்குமேற்குத்தலையுறவன்னிநெல்லுக்
கிளருணவிறைஞ்சத்தக்கபொருளின்மேற்கிடத்தறீதா
முளவடதிசையைநோக்கியுயர்வளைக்கெதிரேயுண்ண
லளவறுதீமைசெய்யுமல்லனநலமாமன்றே. (௪௮)

உண்டியோடுறக்கமெண்ணெயுத்தமங்கிழக்கதாகுஞ்
சண்டனர்திசைமுன்னயிற்றரும்பலயிகவுமுண்டாங்
கண்டமேற்றிசையதாயின்மத்திமங்கனகமேரு
மண்டலமுறும்வடக்குவாழுநாட்குறையுமன்றே. (௪௯)

கோமுத்திரிசக்கரம்.

வரைகிழக்கெட்டாயைந்துவடக்கதாயறைநாலேழா
மரன்முதலாறும்பாகஞ்சோதிவைத்தடைவேநாட்க
ளொருபதோடெட்டாமானேடொன்றுநான்கயன்கீழெண்ணி
யரவுமேற்காய்மகத்தோடைந்துநாண்முறையிலெண்ணே. (௫௦)

திருந்துமித்தகையகோமுத்திரிகையாமாழிதன்னிற்
பொருந்துநாட்சேரிடத்திற்பொலிவுறுசயனம்வைக்கிற்
பெருந்திருவாணளேறும்பேசுவேறிடத்ததாயின்
வருந்தியதுன்பமெய்தும்வளரிளமுலையினளே. (௫௧)

வேறு.

மனைபுகவிவாகசீமந்தஞ்செய்திட
வினியவாதானமோடியாகம்பண்ணிட
முனிவரர்மொழிந்தபும்ஸவனஞ்செய்திட
வனிதையர்க்கியைவதாய்வழங்குமென்பரே. (௫௨)

புறனடை.

வேறு.

வளர்மதியுதயமாகமன்னுகானட்டிமேதை
தளர்வறுமேட்சிமேவச்சட்டவிட்டங்கைசேர்த்து
வொளிர்புகரெழவேவேய்ந்திட்டுயர்குருவுதயமாக
வளம்மனைபுகுவராயின்மலர்மகள்வாசமாமே. (௫௩)

வேறு.

மதிகுறைபஞ்சமிவந்தவற்றைநாட், பதிசெயல்குடிபுகல்பட்டமாழ்கிண
றுதகமதெழக்கலலோங்குபார்மிசை, விதையிடல்பயிர்செயன்மிகவுந்தீதரோ

## அடுப்பமைத்தல்.

### வேறு.

சரந்திரமிலகுநொய்தாச்சாற்றியநாளிற்பூமன்
வரந்தருமிரவிகாலின்மன்னுமவ்வுதயந்தன்னி
லுரந்தருமனேயின்மண்ணுலோங்கியவடுப்புச்செய்யி
னிரந்தரஞ்சுபமுண்டாகுநிலமிசைவாழ்வதாமே. (ருரு)

## பாகஞ்செய்தல்.

நல்லவரைந்தொன்பானினலங்கொள்கேந்திரங்கள்மேவி
வெல்லுநன்முகூர்த்தமெய்தவெய்யகோள்விடவேயெட்டுச்
சொல்லுறுமடுப்பிற்சோறுசமைப்பரேற்சுபமுண்டாகி
யல்லுடன்பகலுநன்மையட்டிவிற்பாகமாமே. (ருசு)

## உரல் செய்தல்.

திரமெனுமுரோணிமூன்றுத்தரமுடன்புநர்தஞ்சோதி
மருவியவோணம்புள்ளுவருணனுளிரவிமால்பொன்
பரவியதினத்தினல்லபவனமேயுதயமாக
வுரல்செயிற்றண்டுலங்களொளிவறவளருமாதோ. (ருஎ)

## நீர்ப்போக்கு முதலியன.

முற்றம்வீழ்நீர்கள்போக்குமுதற்றிசைசோமனீசன்
பெற்றிடுதிக்குநன்றாம்பேசுமற்றுளதிக்காகா
துற்றியூண்மிச்சிற்சுத்திசோமன்கீழீசனன்று
மற்றுளவைந்துதிக்கும்வரும்பொருண்மைந்தர்கேடே. (ருஅ)

## கருப்பம்வைத்தல்.

அகம்புகவுரைத்தமாதமயனவாரங்களுளிற்
புகழ்ந்திடுதிரயாயூர்க்குப்பொருந்துநல்விராசிதன்னி
னிகழ்ந்தசக்கரத்தின்மேவிநின்றநற்கோட்பதத்தின்
மகிழ்ந்துயர்கங்குறன்னில்வைத்திடக்கருப்பநன்றே. (ருக)

தருமணிசிறந்ததாதுத்தனமொடுதானியங்கள்
புகழுமண்கிழங்கினேடுபுகன்மருந்தினையயாவும்
வகையுடனடைவினலேவாத்துவுக்கினியதாகத்
துகளறக்கருப்பம்வைக்கிற்சுகம்பலவெய்துமன்றே. (சுo)

## சுவர்ப் பிளப்பு.

வாசவனனலங்காலனிருதிநீள்வருணன்வாயு
வேசறுகுபேரனீசனென்னுமெண்டிசைக்குநேரே
வீசுவெங்கதிரோன்வெள்ளிசேய்பணிவிளம்புமந்த
ஞசறுமதிமால்செம்பொனதிபரென்றறைவர்மாதோ. (சுக)

நாசமாங்கலகமுண்டாநன்றிலாக்கேடதாகு
மாசிலாப்பெருஞ்சீரெய்தும்வாழ்வுறுமரணமாகும்
பேசியபொருள்கைகூடும்பெண்டிருக்கழிவதாகும்
வாசவன்முதலாயெண்ணிமனேச்சுவர்பிளக்கின்மாதோ. (சுஉ)

### புற்றெடுத்தல்.

சாவுறும்பிரமனேயாஞ்சங்கரன்கிழக்கில்வாழ்வாம்
பாவகமெரியுந்தெற்கிற்பயமுறுநிருதிவாழ்வா
மேவுசேய்மேற்காம்வாயுக்குற்றமாமிகுவடக்கிற்
றுவறுசுகமாமென்பர்தக்கபுற்றெடுக்கினன்றே. (௬௩)

### செஞ்சிதலெழுதல்.

இந்திரன்கேடாந்தீயில்விருந்துறுமியமனின்பம்
வந்துறுநிருதிமாரிவருணனில்வாழ்வாங்காற்றிற்
பைந்தொடிபோக்குமேன்மைவடக்கரன்பகருந்துன்பஞ்
சிந்தையிற்சுபமாமுச்சிசெஞ்சிதலெழுகினன்றே. (௬௪)

### மனைக்கருகினிற்கத்தகுமரங்கள்.

சீதநீர்க்குலைக்காய்த்தெங்குசெழும்பலாவாழைபூக
மாதுளை ‡ திராட்சம்வேம்புவளரெலுமிச்சைமௌவ
றுதளை துளசிசூதந்தக்கவம்பளைநாரத்தை
மீதுறுகொன்றைநாவல்வீட்டின்பானிற்றனன்றே. (௬௫)

### மனைக்கருகினிற்கத்தகாமரங்கள்.

விண்ணேங்குமிலவுகோங்குவிளாப்புளிமிளகுகூழா
வண்ணேங்குமிருப்பைவில்லமலரிகார்ப்பாச † மச்சந்
தண்ணேங்குமுருங்கைவாகைதாலமேரண்ட § மர்க்கம்
பண்ணேங்குமனையினிற்கிற்பாழ்படுமில்லந்தானே. (௬௬)

### வழி, கிணறு.

வேறு.

வடபாலீசன்கிழக்கோடுவாயுமேற்குவழிகிணறு
படர்வாழ்வின்பஞ்சுகமோடுபகைகேடினியபொருள்கூடு
மடுநோய்நிருதிநமன்மரணமங்கித்திசையின்மகக்கேடா
நடுவேயாயிற்பொருளுசநகரமனைகடமக்கன்றே. (௬௭)

### கிணறு குளம் வெட்டல், கரைகட்டல்.

வேறு.

ஆடமகவுத்தரவினஞ்சகடுபூசமந்தமொடுகேட்டையனுடங்கைதிருவோண மோடுமதிபுந்திசுருவெள்ளியுறுவார முற்றவிடைஞெண்டுகுடமீன்மகரநன்று ங், கூடுதெரிசங்குலவு பத்திரையிருத்தை கோதறவகற்றியினிதானபுவிதன் னி, லோடைகிணறேடுகுளம்வெட்டலினிதாகு முத்தமமதானசலயோகமதி லன்றே. (௬௮)

வேறு.

துலைகாலிடபமரைநீராஞ்சொல்லுங்கும்பமுக்காநீர்
கலைமீனலவன்முழுநீராங்கருதுமற்றையிராசியவை
சலமேயின்றியனவெனவேசதுர்மாமறையின்பொருளுணர்ந்த
மலைநேர்குணத்துமாமுனிவர்வகுத்தார்முன்னூல்வழிகண்டே. (௬௯)

---

‡ திராட்சம் - முந்திரிகை. † அச்சம் - அகத்தி. § அர்க்கம் - எருக்கு.

வேறு.

நாடியதுலாமாதத்தினடுப்பத்தின்ஞாயிறெய்த
நீடியகிணறுகல்லினீராருய்ப்பெருகுங்கண்டா
யாடுறுநடுவிற்பத்திலாதித்தனிற்கமாதே
கூடியகரைகள்கட்டிற்குன்றம்போல்வளருமாதோ. (எ0)

துலாநிலை நிறுத்தல்.

சொல்லியகூபத்திற்குத்துலாநிலைசெய்யவேண்டிற்
புல்லியவடக்கதாயிற்புண்ணியதீர்த்தமாகும்
பல்கியகிழக்கதாயிற்பகர்ந்திடுநீராஞ்சுற்ற
மல்கிடாத்தெற்குமேற்குமஃதெனவுரைக்கலாமே. (எக)

புறனடை.

வேறு.

பூமிதனிற்குளங்கூபங்கல்லிற்றாழ்வு புகன்றிடுநன்னீரூற்றுக் கல்லின்றன்மை, யாமிவைகணிலக்குணமாந்தீவிரத்திலதுமுடித்தனெடுங்காலம்வழங்கலான்மாத், தீமையுறவீழ்ந்துமரிப்பின்றி நிற்றல்செய்திடுநன் முகூர்த்தமதாமென்றேமுன்னோர், வாய்மையுறச்செப்புதலானிலமும்வேளை வலிமையும்பார்த்தேகிணீர்மதித்திடாயே. (எஉ)

மனைசெயற்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௧௫.

---

ஏழாவது

# தெய்வவிரதப்படலம்.

அங்குரார்ப்பணம்.

வேறு.

மன்னியதேவர்மன்னர்மானிடர்க்கொன்பதேழைந்
தென்னுமுந்நாட்கடம்மிலினியதாமுகூர்த்தநாளிற்
பன்னியசிறப்பாற்கங்குல்பகல்செயும்வினைகளெண்ணி
யன்னமென்னடையினுளேயங்குரார்ப்பணங்கள்செய்யே. (க)

தேய்வப்பிரதிட்டை.

வேறு.

மீனேறிரட்டைமறிமானிலுற்றவிறலேறுகின்றரவியில்
வானேறுதிங்கள்குணமேறியேறும்வலியேறுநன்மைமருவக்
கானேறுதொங்கல்புனைசெம்பொன்வெள்ளிகதிரேறிவிண்ணிவிலகத்
தேனேறுகின்றமொழியாய்சிறந்துசெயனன்றுதேவர்நிலையே. (உ)

மூவுத்தரங்கள்கடைமாலவிட்டமுடிவீசன்மூலமனுடந்
தாவற்றசோதியிருபூசநன்றுசரராசிபானுசனிசேய்
மேவுற்றவாரமிணையாநிருத்தைதெரிசத்தொடாறுவிடவே
தேவப்ரதிட்டைசெயனன்றதென்பர்திரமாமுகூர்த்தமதிலே. (ரு)

## உபதேசம்.

வேறு.

மாசிபெண்விின்ஞெண்டல்லாமாதத்திற்புகர்பொன்விண்ணிற்
றேசுறவுடுவிலுள்ளசென்மத்தி * லுபராகத்தி
லாசில்சங்கிராந்திதன்னோடயனத்திற்புண்ணியஞ்சேர்
மாசறுதினத்தின்மாதேமகிழ்ந்துற்றதீக்கைகொள்ளே. (சு)

எரிபணிசுளகுகாலனியைந்தமுப்பூரம்வாசி
வரமுறுசதயஞ்சுன்சேய்வாரமெட்டிருத்தையந்தந்
திரமுறுராசிநீத்துத்தீதிலாமுகூர்த்தந்தன்னிற்
குருவுபதேசங்கொள்ளக்கூறினர்முனிவரன்றே. (ரு)

## அயனாதிகாலம்.

வேறு.

செங்கதிர்மானண்டுற்றாலயனப்பேராஞ் செழுமறிகோல்விடுவாகுந் தேள்சால்குண்டை, சிங்கமுறில்விடுபதமாம்யாழ்பெண்மீன்வில்செடாதாரிமுகமெனவேசெப்புவாரா, லிங்கிதனினீராடிமறையோர்க்கேமமிருநிலங்கூழ்முதலானவீய்வாராயிற், கெங்கைதனிலாடுபலன்கிட்டுமொன்பான்கிரகமுநற்பலனளிக்குங்கிளக்குங்காலே. (சு)

## சித்திரகுத்தர்விரதம்.

வேறு.

மன்னுசித்திரையாமாதம்வளர்மதியிடையுவாவிற்
பன்னியநளோடன்னிற்பரிதியின்சேயனை
மின்னுசித்திரகுத்தற்குவிருப்புறுவிரதமாகு,
மன்னமென்னடையாய்தானமந்தணர்க்குவந்துநல்கே. (எ)

## வைகாசிவிசாகம்.

வேறு.

விம்பமுற்றவைகாசிவிசாகநாட், பைம்பொன்மேனிப்பகவனையுன்னியே
யைம்புலன்களடக்கியவுத்தமர்க், கும்பர்போற்றுமுயர்பதமெய்துமே. (அ)

## தேவிவிரதம்.

வேறு.

ஆடியிற்பூரநாளேயம்பிகையவதாரஞ்செய்
பீடுறுதினமாமீதிற்பேசியவுண்டிநீத்து
மாடையேமுதலதானமறையவர்மாதரார்க்கு
நாடியேயளிப்பராயினற்பலனுரைக்கொணாதே. (கூ)

---

* உபராகம் - கிரகணகாலம்.

### விநாயகசதுர்த்தி.

சிங்கமாமாதம்வந்தெரிசத்தின்பின்புசேருந்
திங்களினலாம்பக்கஞ்சிந்துரமுகனேன்பாகு
மங்கையேபூசைசெய்யின்மனநினைவாகுந்திங்க
டங்கியகிரணங்காணிற்றருந்துயர்சாற்றலாமோ. (௧௦)

### ஜயந்தி.

வேறு.

பேசுமாவணிப்பின்னிருநாலிலே, யோசைபெற்றவுரோகிணிகூடவே
தேசமெண்ணுஞ்செயந்தியாமாயனைப், பூசைசெய்திடிற்பொன்னகர்கிட்டுமே

### அனந்தவிரதம்.

புலனிறைந்தவர்பொற்புரட்டாதியி, னலமிகுந்தமுதற்பதினன்கிலே
குலவனந்தனன்னேன்பெனக்கூறுவர், பலமனந்தமதாகிப்பலிக்குமே. (௧௨)

### மகாளய சிராத்தம்.

வேறு.

கன்னியிலாதவன் கருதிவந்தெழப், பொன்னிகர்பூரணைபோனமற்றைநா
ளுன்னியதெரிசமீறொருபன்னைந்தினு, மன்னியமாளையம்பிதிரர்வாழ்வரே.

### கேதாரவிரதம்.

பொங்கியபுகழ்புரட்டாதியாகிய, திங்களிற்பிற்பதினலுசெய்யதாட்
சங்கரிநோற்றகேதாரநோன்பதா, மங்கரன்பூசனையன்பிற்செய்மினே. (௧௪)

### நவராத்திரி.

அரிவையிலிரவிசேர்ந்தைப்பசிப்பிறை, வருபிரதமைமுதனவமியீறதாய்ப்
புரவலர்துர்க்கையைப்பூசைசெய்திடி, விருநிதிக்கிழமைகள்யாவுமெய்துமே.

### கந்தஷஷ்டி.

வேறு.

நற்றுலைமாதந்தன்னினனிமதிவளருகின்ற
முற்பிரதமையேயாதிமூவிருதினமுமீசன்
சற்குருவானசெவ்வேடனதுநோன்பாகும்பூசை
யற்பினுற்செய்வாராயினவர்பலனறையொணுதே. (௧௬)

### தீபாவலி.

இரவிநற்றுலைசேர்மாதமிராக்கதிர்குறையும்பக்கம்
வருபதினன்குவந்தவைகறைப்பொழுதுதன்னி
லுரியநற்பிதிர்களின்பமுறுதிபாவலியாமெண்ணெய்
மருவிவெந்நீரின்மூழ்கிமகிழ்ந்துநற்றருமஞ்செய்யே. (௧௭)

### கிருத்திகாதீபம்.

வேறு.

தேளாதவனிற்றிகழ்பூரணையி, னளாரலிலேநலமாமதிதா
னீளேறுறவேநெறியேசுடர்தான், கேளேற்றிடவேகிளருந்நலமே. (௧௮)

## விநாயகஷஷ்டி.

வேறு.

கருதுகார்த்திகைக்கார்த்திகைசென்றபி,னிருபதோடொருநாளினிலெய்திய
பொருவில்சட்டிபுகழ்சதயந்தனே, வருவிநாயகனோன்பெனவாழ்த்துவார். ()

## ஆதிரைவிரதம்.

வேறு. மார்கழிமாதந்தன்னில்வருவிநாயகநோன்பிற்குப்
பேருறுபத்தாநாளிற்பித்தநாளுவாவுங்கூடிற்
சீருறுசிதம்பரத்திற்றிருநடர்விரதமாகுஞ்
சாருறுதுயிலுணீத்துச்சனனநோய்தீருவாயே. (௨௦)

## ஏகாதசி விரதம்.

ஆதவன்றனுவில்வந்தாலம்புலிவளரும்பக்கத்
தோதுபன்னொன்றதாகியுறுமேகாதசிநோன்பைத்தான்
றீதறத்தொடங்கிநோற்கதினமதிதோறுநோற்போர்
கோதறுபலன்றான்றேவர்குருவினாற்கூறலாமே. (௨௧)

## திருவோணவிரதம்.

திருவுடனம்புராசிசேடன்மீதுறங்குபெம்மா
னொருபொழுதுதயஞ்செய்தவோணநாளீசனன்னாட்
கருவெழப்பிறந்தநாள்போற்களங்கமிதோன்பதாகு
மிரவினிற்றொடங்குநாட்கொளிரும்பலமெய்துமன்றே. (௨௨)

## அர்த்தோதயம்.

மூரிமானிரவிதன்னின்மொழிதெரிசத்திற்பானு
வாரமோடோணங்கூடிவயங்கருத்தோதயத்தி
னீரிடையாடிற்றீர்த்தம்யாவுநேராகுந்தானம்
பாரினிற்சிறிதுசெய்யிற்கோடியாய்ப்பல்குமாதோ. (௨௩)

## மகோதயம்.

மகரமாமதியிற்சோமவாரமோடமையினேண
நிகரிலாவியதீபாதநேர்படுமகோதயத்திற்
றகரமார்குழலினளேதரும்புனலாடிற்பாரிற்
பகரொணாநதிகள்யாவும்படிந்தபேறடையலாமே. (௨௪)

## ரதஸத்தமி.

மகரமாதத்திற்சோமன்வளருமுற்பக்கத்தேழிற்
சிகரமாயிரமேசூழ்ந்தசெம்பொன்மால்வரையேகித்த
நிகரிலாவலமாச்செல்வோனேமியுத்தரமாமீதிற்
றகுமதிமுகத்தாய்தீர்த்தம்படிந்துநற்றானஞ்செய்யே. (௨௫)

## மகாமகம்.

வேறு.

மாகவாண்டினின்மாநிலமெண்ணிய, மாகமாகியதிங்களின்மன்னிய
மாகநாளினின்மன்னுறுமோரையின், மாகதீர்த்தமதாகிவழங்குமே. (௨௬)

### சிவராத்திரி.

பிறங்குமாசிபிற்பிற்பதினலதே, யறங்கொணற்சிவராத்திரியாமிதி
னுறங்கலின்றியுளுற்றிடிற்பூசனை, பெறும்பெரும்பலன்பேசரிதாகுமே. (உஎ)

### பூரணை, அமாவாசை விரதம்.

வேறு.

திங்கடோறிரண்டுவாவுஞ்சேர்ந்திடினுதயகாலங்
கங்கையேயாதிநீரிற்கலந்துசங்கற்பின்மூழ்கி
யங்குளபிதிரர்யார்க்குமாரணநெறிவழாமற்
றங்கியகடன்கள்செய்துதானங்கணல்குவாயே. (உஅ)

### தெய்வவிரதப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௩சாங.

---

## எட்டாவது

# குணகுணப்படலம்.

—————:o:—————

### பக்கநுணதுணம்.

வேறு.

நந்தைபத்திரைசயையிருத்தைநானிலத், தைந்தெனும்பூரணையடைவிற்றேன்
றுமான், மூந்துபக்கங்கடைநடுவுமுக்கிய, நந்துபக்கங்கடைநடுவுநீசமே. (க)

### பக்கச்சித்திரை.

வேறு.

பதினலொடொன்பதெட்டுப்பன்னிரண்டாறுநாலாந்
திதியானகருமந்தீய்க்குஞ்சித்திரையிருத்தைகண்டாய்
மதிசீவன்மனையின்மேவிமறையவனுதயஞ்செய்து
துதிகூறுமுச்சமெய்திற்சுபகருமங்கள்செய்யே. (உ)

### இருத்தை லக்ஷணம்.

வேறு.

சீரறுதுகிலினள்சிவந்தகண்ணினண், மூரிவெண்பல்லினண்முனைநகத்தினள்
காரியங்கெடுப்பவள்காலதூதியா, மீரமில்சிந்தையாளிருத்தையென்பரே. ()

### வாரவிருத்தை.

வேறு.

பாரருக்கன்பனிமதிகானகஞ், சீர்நெருப்புரைசேய்புதனன்னக
ராரியன்சிலையாழியரும்புகர், காரிநீணெறிகாதுமிருத்தையே. (௩)

## தினவிருத்தை.

வேறு.

உரைதருமிராப்பகனொடொன்றுறு
வருபதினொன்கெனவகுத்தநாழிகை
யரிவையேயுறுதினவிருத்தையாகுமாற்
றெரியுநல்வினையெலாஞ்செய்தறீதரோ. (௫)

## நித்தியயோகம்.

வேறு.

சிரவணமாதிவெய்யோன்செல்லுநாளளவுமெண்ணிச்
சுரர்குருநாளதாதிசோமனுளளவுமெண்ணி
யிருதொகையொன்றாய்க்கூட்டியிருபதேழ்க்கீய்ந்தசேட
நிரைவளைமுன்கைநல்லாய்நித்தியயோகமன்றே. (௬)

வேறு.

வியாகாதம்பரிகஞ்சூலம்விட்கம்பம்வியதீபாத
மாகாதவச்சிரங்கண்டமதிகண்டம்வைதிருத்யாகுஞ்
சேகாருமொன்பதாகச்செப்பிடுதீயோகங்கொள்ளிற்
பாகாருஞ்சொல்லாய்நல்லபலனெலாங்கேடாமன்றே. (௭)

## ஏகார்க்களம்.

பகர்வியாகாதஞ்சூலம்பரிகநீள்வியதீபாதம்
வகைசெய்விட்கம்பங்கண்டமதிகண்டம்வச்சிரத்தோ
டகலும்வைதிருதிவேய்மான்மகமரவாதிமூலந்
திகழுரையனுடம்பூசஞ்சித்திரைசிரந்தொட்டெண்ணே. (௮)

எதிர்வரைபன்மூன்றாகவெழுதிநேர்வரையொன்றாக
விதிமுறையெண்ணத்திங்கள்வெய்யவன்றம்மினேக்கிற்
கதமுடன்கனல்கண்காலக்காசினிமீதுவீழ்ந்து
பதியுடன்கருமந்தீய்க்கும்பயமுறும்படிவமன்றே. (௯)

## கரணம்.

வேறு.

அன்றைத்திதியையிரட்டித்தங்கதிலேயேறுபக்கத்துக்
கொன்றுகளைந்துகுறைபக்கத்தொன்றுகூட்டிநின்றதனைச்
சென்றவேழாலீய்ந்திடவேசேடம்பவாதிகரணமதா
மென்றும்முடிவேவிட்டியதாமிலங்குங்கலசமுலைமயிலே. (௧௦)

வேறு.

பகருறுமிற்பன்னலிற்பாதியுந்தெரிசந்தானுந்
துகளறுமொன்றின்மூன்றுஞ்சுபகருமங்கடீதாந்
தகையுறுசகுனநாகஞ்சதுர்ப்பதம்புவியின்மீதே
திகழ்கிந்துக்கினமேதீயதிரகரணங்களான்கே. (௧௧)

### விட்டிக்கரணம்.

வேறு.

பின்னுமுன்னெட்டுப் பிற்பூத்தோடொன்றிற் பிறையேறுபன்னைந்தின் முன்விட்டியாகும், பன்னுதபிற்பக்கமுன்னேழ்பின்மூன்றிற்பத்திற்பினேவிட்டிபதினலின்முன்னுஞ், சொன்னர்கள்பின்விட்டிபகலிற்கொளென்றுஞ்சுபமாகுமுன்விட்டியிரவாகிலென்று, மென்னுதவாயிரம்பல்குணமெய்துமேனுமினிதானகருமத்தையிடர்செய்யுமாதோ. (கஉ)

### பாவதினம்.

வேறு.

அரனுமுப்பூரமுமங்கியுங்கேட்டையும்
பரணியுநாகமும்பாவநாளென்பராற்
றரணிசேய்மந்தனுந்தபனனும்பாவிகள்
குரவுசேர்குழலினய்கொடியவைக்கினியவே. (கஙு)

### வாராதி.

வேறு.

பன்னுவாரப்பலமிரவில்லையா, மன்னவாரத்தவர்குணமின்மையா
லுன்னுபௌமனிலுச்சியிற்பின்னதாய், நன்னெறிக்கருமஞ்செயனன்றரோ.

வேறு.

பிறைகுறைபக்கமும் பிறந்தநாட்களும், பொறைமகன்வாரமும் புகலும்விட்டியும், பறையுமட்டமிவெதிபாதஞ்சூலமு, மறைதருமுச்சியிற்பின்னராகுமே.()

### சூரியதிருட்டி.

வேறு.

பரிதிசேர்நாடனக்குப்பக்கமும்மூன்றுநாளுங்
கருதியகுருட்டுநாளாங்கட்டுரையடைவினலே
யொருகண்மூன்றிருகணறுமொருகண்மூன்றிருகணறு
மொருகண்மூன்றுகநாளையுரைத்தனர்முனிவரன்றே. (கசு)

### சந்திரதிருட்டி.

மதிகுறைப்க்கம்பன்னென்று தியாய்வளரும்பக்க
மதில்வருசதுர்த்தியந்தமந்தகத்திதியதாகும்
விதியின்மூன்றுறுமூன்றுவிளம்பிருமூன்றுமூன்றுந்
துதிவிழியொன்றிரண்டுசொல்லுமொன்றிரண்டொன்றுமே. (கஎ)

### வாரதிருட்டி.

வேறு.

முந்துவாரமாதியெண்ணிமூன்றினற்பெருக்கியே
வந்தநாளைமாமுதற்கழித்துநின்றநாளின்மேற்
பந்தியொன்பதோர்கண்ணென்பர்பன்னிரண்டிரண்டுகெ
ணந்தகக்கணறுநாளெனங்கயற்கண்மங்கையே. (கஅ)

## பிராணன்.

வேறு.

பகலோனுளுமுன்பின்னும்பத்தும்பத்தொன்பதுஞ்சாநா
ணிகழ்மூன்றுதிநாளேழுநேரேயிருபான்முதலேழும்
பகராருயிர்தானரையாகும்பதினொன்றுதிமுதலெட்டும்
புகழானிறைந்தமுழுவுயிராம்போற்றுங்கருமமிகவாமே. (கக)

வேறு.

உருண்மதிபுநர்தமூன்றுத்தரங்குருச்
சிரவணங்கரமெனச்செப்புமொன்பது
மிரவிமற்றுளதினமிருந்தகாலையிற்
றெருளுறுபிராணனுண்டென்றுசெப்பினர். (உ0)

## கிரக சன்மம்.

மருவியசுளகுதிமாலவிட்டமுங்
கருதுமுத்தரங்கரங்கடையொடாதியு
மிரவியொடெண்ணவேயெட்டுநாட்களுந்
தெரிவையேகோட்களின்சென்மமென்பரே. (உக)

## பூமிசுக்கிரன்.

வேறு.

உரைத்திடுமுற்பிரதமையேகிழக்கதாகியோரெட்டுமுறையுமொன்பான்வி
சும்பிலீரைந், திருக்குநிலந்திரியவுநாலைந்துமிந்த வியல்பாகவரும்பூமிசுக்கிர
ன்றான், மருக்கமழுங்குழன்மடவாயிடமுனகா வலமுடன்பினன்றுகுமண்வி
ண்ணுகாத், தரைக்குள்வினையனைத்தினுக்குமுன்னோர்சொன்னசங்கியையின்
வழியாமுஞ்சாற்றினேமே. (உஉ)

## சரதிரலதமுதலியநட்சத்திரங்கள்.

வேறு.

அயனுத்தரங்கடிரங்களைசெக்கவிட்டஞ்சோதியரிசரமாம்
வயமாப்பூசங்கரமிலகுவாய்க்கால்பூரணமனுக்ரம்
பயில்பாம்பரணிந்திரன்மூலம்பகர்தாருணந்தீமூறம்பதநீ
ருயர்சாதரணமொழிந்தவைநொய்துரைபேர்நெறியின்வினைகொள்ளே. (உங)

## அதிகமாதம்.

வேறு.

இந்துமாதத்தின்கண்ணேயிரண்டுசெங்கிராந்திவந்தான்
மூந்துமாதஞ்சங்கற்பமொழியசங்கற்பமாதம்
வெந்திறலருக்கன்சீதவெண்மதியுடனேகூடி
வந்தசங்கிராந்திமாதம்வளரதிமாதமாமே. (உச)

## மலமாதம்.

என்றவன்சங்கிராந்தியிதனடுவிரண்டுவாக்கள்
சென்றிடுமிடையுவாக்கள்சேர்ந்திடின்மலமாதப்பேர்
நன்றுசெய்திடநீதிந்தநவையுறுதிடப்மேடம்
வென்றிசேர்சுங்கன்மூடமேவினும்வசந்தமாமே. (உரு)

### மாததினம்.

கேடில்சித்திரைவிசாகங்கேட்டைபூராடமோண
நீடியபுரட்டைவாசிநெருப்புமான்சென்னிபூச
நாடியமகத்திரேணெலங்கொளுத்தரமேநல்லோர்
தேடுமுன்மாதமாதிசெப்பிமொதநாளே. (உசு)

### மாதநிஷித்தம்.

வனிதைநீணண்டுகும்பம்வரிசிலைவந்துகூடிப்
பனியிருட்பகைவனிற்பிறப்பழித்தமாதங்களென்பர்
நனிபொன்வீடுச்சமெய்திநட்புச்சாங்கிசத்துமேவி
யினிதுறின்மாதக்குற்றமிரவிமுனிருள்போலாமே. (உஎ)

வேறு.

மீனசித்திரையுடன்மிதுனவாடியுந், தேன்மொழியைப்பசிசிலைதைமாதமுஞ்
சூனியமாதமாமென்றுசொல்லுவர், கானமர்குழலினய்கழிக்கற்பாலவே. உஅ

### மாதப்பிரமாணம்.

வேறு. கன்னியேரூடுசெயங்கடகமேமுப்பத்தொன்று
மன்னியதண்டெண்ணன்குமகரந்தேளிருபத்தொன்பான்
சொன்னமீனிறைசால்வில்லுச்சோர்விலாமுப்பதாகு
மன்னமென்னடையாய்முந்நூற்றறுபதுமைந்துமாமே. (உகூ)

### நுசுக்கிரமூடம்.

வேறு.

குருமூடமோடுபுகர்மூடமன்னுகுரவோரருக்கன்மருவி
லொருமூடமாகிலொருகோள்பலக்கிலுறுகாரியங்கள்கொளலா
மிருமூடமாகிலுறுகாரியங்களிடராகவந்துவிளையும்
வருமூடமாதமுரைகாரியங்கள்வரையாதுசெய்யவினிதே. (ருO)

### நுசுக்கிரசமசத்தமம்.

வேறு. பொன்னவனின்றராசிக்கேழதாய்ப்புகன்றராசி
தன்னிலேவெள்ளிநின்றூற்சமசத்தப்பேரதாகு
மன்னியகருமஞ்செய்யின்மண்மிசைக்கெடுதலாவே
யன்னவர்குணங்கண்மேவிலநைந்தநற்கருமஞ்செய்யே. (ருக)

### காலவோரை.

வெய்யவன்வெள்ளிபுந்திவெண்மதிசனிபொன்செவ்வா
யையரைக்கடிகையாகவவரவர்வாரமாதி
மெய்யுறுகாலவோரைவிளம்பினரைந்துங்கொள்வர்
துய்யவரோரையாகிற்சுபகருமங்கள்செய்யே. (ருஉ)

### தீவாழகூர்த்தம்.

அரனரவனுடங்கூறுமகமுடனவிட்டமாட
முரைசெயுத்தராடம்வேதாவுரோகிணிவிசாகங்கேட்டை
வாமுறுமூலஞ்செக்குவயங்குமுத்தரநற்பூரம்
பரவியபகலின்மன்னும்பன்னைந்துமுகூர்த்தமென்னே. (ருரு)

### நிசாமுகூர்த்தம்.

அடல்புனையீசன்பூரட்டாதியோடெட்டுநாட்கள்
வடிவுறுபுநர்தம்பூசமால்கரத்துடனோர்மூன்றும்
படுமிரவெய்தும்பன்னிரண்டதாய்க்கடிகைகொள்வ
ருடுவுறுபலத்தோடொப்பாமோதுமிம்முகூர்த்தநாளே. (௩௪)

### அவமுகூர்த்தம்.

பரிதியேழ்திங்களொன்பான்பன்னிரண்டாரனாலு
மொருபதும்புந்தியெட்டுமொண்குருவாறீராறும்
பிருகுவொன்பதுமோரைந்தும்பிறங்குசனிரண்டுமொன்றும்
வருமவமுகூர்த்தமாகாவென்றனர்மறைவல்லோரே. (௩௫)

### கெண்டாந்தம்.

மூரனுறுமகமுமாவுமூலமுமுதற்கான்மேவு
மரவமுங்கேட்டைதானுமந்தமுங்கடைக்கான்மேவு
மருவியகடிகைநாலாய்வயங்குகெண்டாந்தமாதே
யுரைசெய்நற்கருமமெல்லாமோதினுறில்லைமாதோ. (௩௬)

வேறு.

நாட்டிதியிராசிகெண்டாந்தநற்றவர்
காட்டினர்மூவகைகருதிலொன்பதைந்
தீட்டியநான்கொழுங்கிரண்டொன்றேயரை
நாட்டுநாழிகையுநல்வினைக்குத்தீதரோ. (௩௭)

### சண்டசண்டாயுதம்.

வேறு.

சுடரவனுறுநாளாதிதுய்யசித்திரைநீணாகங்
கடைமகமனுடமீசன்கரியமாலடைவினாலே
விடுபரிமுதலாயெண்ணிவிதுநின்றநாட்கணேரே
யடல்வலியுறுசண்டசமடர்சண்டாயுதங்களாமே. (௩௮)

### சிறீதிவசாதி.

சென்றநற்றிதியினென்றைச்சேர்த்ததையேழினீக்கி
நின்றதுதிருவினன்னணிகழ்கலிநந்தைநாளே
துன்றியகாளகண்டிசெயந்தனந்துதியதாகு
மென்றநாளேழிற்காளகண்டியுங்கலியுந்தீதே. (௩௯)

### கிரகவேதை.

வேறு.

குணக்குவடக்கிரேகைகளைவ்வைந்துதீட்டிக் கோணமுறவிவ்விரண்டுகீறநா
லேழ், கணக்கில்வருங்கார்த்திகையைவடகீழ்வைத்துக் கணிக்கவலமெதிர்க்க
யிறுகிரகவேதை, யுணர்த்திடுகினதிற்கிரகநிற்கலாகாவுத்தமக்கோள்வரிற்சுப
ங்கணுசமாகும், பிணக்குறுபாவக்கோளேற்கருமச்சேதம்பிராணபயம்வருமெ
னவும்பேசலாமே. (௪௰)

## தினமிருத்து.

வேறு. கரமவிட்டத்துமுன்னுங்கறைக்கண்டன்முறத்திரண்டு
முரக்முத்தரட்டாதிக்கேயோங்கியமூன்றுங்காலும்
பரணிமூலாந்தந்தானும்பகர்ந்தநாட்சாவதாகு
மிரவினிலினியநன்மையாவையும்பகலிற்றீதே. (௪௧)

## திவாரோகம்.

நாகமாமுந்துகாலுநமன்மூலமிரண்டாங்காலும்
வாகைமாலவிட்டமூன்றுமானொடுசோதிநாலு
மாகுநாட்பிணியதாகுமனைத்துளகருமங்கேடாந்
தோகையேயிரவுநன்றுஞ்சொற்பகறீயதாமே. (௪௨)

## சுடுநாளாதி.

வேறு.

சுட்டநாளெரியினாட்டேமேம்பாவிகள், விட்டுநின்றகலுநாள்விரும்புநாட்கடா
மட்டுறுகுழலினாய்மருவுகேந்திரஞ், சிட்டர்நோக்குடனுறிற்றீமைதீருமே. ( )

## ஷாண்மாதமிருத்து.

வேறு. உத்தரமூன்றின்மூன்றுமுரோகிணிக்கெட்டுஞ்சோதி
சித்திரைதனிற்பன்மூன்றுந்திதியுநேர்மகத்துக்கைந்து
மத்தநீண்மூலமேழுமனுட்நாட்கிரண்டுந்தீதா
மொத்தமாதங்களாறிலுயிர்விடுயோகமன்றே. (௪௩)

## வாரமிருத்து.

இரவிகையைந்தாம்பக்கமிந்துமான்சட்டிசெவ்வாய்
புரவியேழ்புந்திபெண்ணைபுகலுமட்டமியேமிக்க
சுரர்குருக்குருநாண்மூன்றுஞ்சுங்கனிற்பௌவந்தோணி
கரியவனான்குரோணிகலங்குசாமாதமாறே. (௪௫)

## சடசீதி.

வேறு.

ஓதுசரமேழுதிரமைந்துபயமொன்பா, னாதபனடுத்துவருமங்கிசமதாகுந்
தீதுகருமங்கள்சடசீதிமுகமீதின், மாதமவையாறுதனிலேமரணமாமே. (௪௬)

## யாத்திராதிநிஷித்தம்.

வேறு.

ஓதுரோகிணிச்சனியுவந்தயாத்திரை, யாதிநாட்பௌமனிலகம்புகுந்திடில்
வேதியன்பூசநாள்விவாகஞ்செய்திடின், மாதமோராறினின்மரணமாகுமே. ( )

## கரணயோகம்.

வேறு.

கரணநாகத்திற்பூசங்கருதியசகுனத்தோண
முறைசதுர்ப்பதத்திலீசனுயர்கிந்துக்கினத்தினாகை
மருவியவிட்டியந்தமரணயோகங்களாகு
முரியநற்கருமமெல்லாமோதினாரில்லைமாதோ. (௪௭)

## இராசியோகம்.

வில்லுடன்பெண்ணிரண்டில்விடைகுடமைந்தாம்பக்க
மெல்லியல்மிதுனமெட்டின்வெஞ்சிலைசிங்கமாறில்
வல்லரிசாபம்பத்தில்வரிசிலைமீன்பன்னொன்றிற்
சொல்லுவர்மரணயோகஞ்சுபகருமங்கடீதே. (சகூ)

## கோடியயோகம்.

வேறு.

மூந்துரோகிணிதனின்மூன்றெனுந்திதி, வந்துபனிரண்டினில்வயங்குபூசநா
ளந்தமானுளொடேழாறெனுந்திதி, கொந்தலர்குழலினாய்கொடியயோகமே.

## அக்கினியோகம்.

வேறு. சந்திரன்பன்னொன்றாறுதபனனேழ்பன்னிரண்டும்
புந்தியெட்டிரண்டாம்பக்கம்புகரவன்பத்துமெட்டு
மந்திரிக்கொன்பதாறுமண்மகனைந்துமேழு
மந்தனென்பதும்பன்னொன்றும்வன்னியோகங்களாமே. (ருக)

## அனலயோகம்.

விடையுடன்மகரமூன்றில்விளம்புகோன்மகரமெட்டின்
மடநலாண்மிதுனமைந்தின்மதித்தவில்லலவனேழில்
விடலரிசாபமொன்பான்மீன்விடையொருபன்மூன்றி
லடர்சிலைமீன்பன்னொன்றிலனலயோகங்களாமே. (ருஉ)

## விஷயோகம்.

பொருநமனனுடம்போற்றும்புனர்தநீள்புரட்டையீசன்
பரவுசித்திரைமாயோனைப்பரிதியோடெண்ணும்போது
மருவுமாறேழெட்டொன்பான்மதித்தபன்னிரண்டுபன்னொன்
றரியபன்மூன்றுநேரேயதிவிடயோகமாமே. (ருங)

வேறு.

வன்னியைந்துகதிரோனிலம்புலியின்வருமிரண்டினொடுசித்திரை
பன்னுசேயினிறைபக்கநற்சகடுமந்தனெட்டுமுடிவெய்துநாட்
பொன்னிலேயனுடமுரைபன்மூன்றுதிதிபுதனிலேழினொடுபரணிநாண்
மின்னுவெள்ளிதனிலாறுமாயவனும்வேலைமேவுவிடயோகமே. (ருச)

வேறு.

ஆடமும்ப்ரதமைதானுமனலமுஞ்சிறந்தவைந்தும்
பாடுரோகிணியும்பத்தும்பன்னிரண்டத்தநாளு
நீடுமுத்தரம்பன்மூன்றுநிகழ்கடைபூரமெட்டு
நாடியநஞ்சுயோகநாகரேயெனினுந்தீதே. (ருரு)

## அவயோகம்.

ஆதிசித்திரைபின்னுடமவிட்டமுத்ரநீள்கேட்டை
மேதகுகடைநாடன்னைவெய்யவனுதியெண்ண
வோதவயோகமென்றேயுரைத்தனர்சிலர்கள்கண்டாய்
காதடர்விழியினுளேகாரியமனைத்துந்தீதே. (ருசு)

சங்கரன் மகமான் காலன் றகைசுளகுடனோர் மூன்றுந்
துங்கநாலேழீராறுஞ்சூரியன் றன்னிற்றீதாந்
திங்களினிணையாடங்கடிகழ்மகஞ்சுளகுதன்னோ
டங்கிநீளனுடம்பக்கமாறுபன்னொன்றுந்தீதே. (ருஎ)

சேயினிலீசன்கேட்டைசிறந்தமாலோடொ்ரு
மாயபத்தேழெட்டொன்பானேந்தெனுந்திதியுந்தீதாம்
பாய்பரிமூலங்காலன்பகர்கடைபுரட்டைவிட்ட
மேயுமொன்றிரண்டுமூன்றெட்டீரைந்தும்புதனிற்றீதே. (ருஅ)

பொன்னின்மான்சகடுபீத்தன்பூரநற்சதயநாளும்
பன்னுமாறொன்பதெட்டாம்பக்கமுந்தீதுகண்டாய்
மன்முறமுடனோர்மூன்றுமகமயன்பூசம்பாம்புந்
துன்னுபத்திரண்டேழெட்டுஞ்சொல்லியபுகரிற்றீதே. (ருகூ)

அந்தமுத்தரமாலாடமங்கைசித்திரைமுப்பூர
மந்தனிற்பன்னொன்றொன்பான்மன்னுமாறெட்டுந்தீதா
மந்தவாரத்தோர்தத்தமகமுச்சநட்பின்மேவி
லிந்துபொன்கண்டகத்திலினிதுறிற்கொள்ளலாமே. (சூ௦)

வேறு.

பரிசர்ப்பமொடவிட்டம் பரிதியினிற்பனிமதியிற் பகர்சித்திரை முரசத்தொடபடூசமுநமனு, மெரிநற்பணியிணையாடமும்புநர்தம்முற நமன்சேயினின்மான்மகம்பணிபூசமுமெழிலாடியும்புதனி, லரிசித்திரையெரியுத்தரமனுடங்கடைமுறம்பொனவிட்டம்மகமரிசோதிநெய்யறையாவணம்புகரி, லுரைசெக்கரவுயராடியுநமன்பூசமுஞ் சனியிலுறுகுற்றமொடவயோகமென் றுரைத்தார் சிலர் துணிந்தே. (சூக)

## வரயோகம்.

வேறு.

எரியாதிரைசித்திரையெண்சதயங், கரியோனதினந்தைகலந்திடினும்
வரமாடமிரேவதிசோதியினுள், வருசேயுறினும்வரயோகமதே. (சூஉ)

புரமாளிகைகோயில்புகுந்திடவுங், கரிநீள்பரிதேர்பொருள்கைக்கொளவு
நரபாலர்குருக்களைநண்ணிடவும், வரயோகமுரைத்தனர்மாமயிலே. (சூந)

## மரணகாணநாசசித்தயோகம்.

வேறு.

தாரகைநன்னாலாகத்தக்கநாலேழுநாளுஞ்
சூரியன்வாரமாதிசுளகிஞேடெண்ணும்போது
நாரியேமரணகாணநாசநற்சித்தியாகுந்
தீரமூலத்தோடெண்ணநால்வகைச்சித்தியாமே. (சூச)

## சித்தயோகம்.

வேறு.

செங்கதிர்கரமுமான்சென்னிசோமனும், பொங்குசேயாதியும்புகரிலந்தமும்
பங்குரோகிணியுநீள்பைம்பொன்பூசமுந், திங்கள்சேயனுடமுஞ்சித்தயோகமே

## அமுத சித்த சுப சாதக யோகம்.

### ஞாயிறு.

வேறு. அத்தமுத்தரங்கள்பூசமயனமூதருக்கன் றன்னிற்
சித்தியாஞ்சோதியந்தஞ்சித்திரைபுனர்தமூலந்
தத்துமாமாலவிட்டஞ்சதயமுஞ்சுபமதாகு
மெய்த்தபாம்பனன்முப்பூரமிக்கசாதகந்தானே. (௬௬)

### திங்கள்.

வீசுரோகிணிமான்பிண்டிவெண்மதியமுதமாகும்
பூசமூலங்கைசோதிபுனர்தநீள்கடைநாட்சித்தி
பேசுமாலோடுநான்குபின்முனுத்தரஞ்சுபங்கண்
மாசிவன்பூரங்கேட்டைமறலிசாதகந்தானே. (௬௭)

### செவ்வாய்.

பொங்குரேவதியோடைந்தும்பூசமுமமுதமாகு
மங்கையோடைந்துபூரஞ்சித்தியாமவனிசேயிற்
றுங்கவுத்தரங்கண்மூலம்புனர்தமாஞ்சுபமதாகு
மங்கையேமகநீணுகைமருவுசாதகந்தானே. (௬௮)

### புதன்.

புகழ்விதியுத்தராடம்புனர்தமானமுதமாகு
மகமுதலெட்டுப்பூசமாலாடஞ்சித்தியாகுந்
தகையுறுபுரட்டையங்கிசதயமுஞ்சுபமதாகும்
புகலரனரவங்கேட்டைபுந்திசாதகமதாமே. (௬௯)

### வியாழன்.

கனகனிற்புனர்தம்பூசங்கடைமகமமுதமாகு
மினியவுத்தரத்தோடிராறியம்பியசுபமாமென்பர்,
சினவயப்புரவியோடுமுரசமுஞ்சித்தியாகும்
வனிதையேபுரட்டைநாகமறலிசாதகமதாமே. (௭௦)

### வெள்ளி.

அரிகரமந்தஞ்சோதியமுதமாம்வெள்ளிதன்னிற்
பொருவிலுத்தரங்கண்மூலம்புனர்தமான்சதயஞ்சித்தி
பரவுசித்திரையவிட்டம்பரியெலிசுபமதாகும்
வரமகமாடமீசன்வாய்த்தசாதகமதாமே. (௭௧)

### சனி.

சனிதனினமுதமாகுஞ்சகடேன்மூன் றவிட்ட
கனிசுபமகநற்பூசநாகஞ்சோதியிணேடைந்துங்
கனல்பரிசதயமாதிமூன் றுநாட்காலன்சித்தி
யினியவுத்தராடம்பூரமீசன்சாதகமதாமே. (௭௨)

### சுபத்தினயோகம்.

வேறு.

நேமியோணேணைமுநீலனங்கியும், பூமகன்மூலமும்புதனிற்பூரமு [மே.
மேமனின்முரசமுஞ்சோதியெண்புகர், சோமனிற்புனர்தமுஞ்சுபத்தினயோக

### யோக அபவாதம்.

வேறு.

வாரயோகத்திற்குற்றம்வங்கமோடங்கதேசஞ்
சீருறுகலிங்கமீழதேசத்திற்காகாதென்ப
ரோரைகேந்திரத்தில்வெள்ளியுடுபதிபுந்திநிற்கி
லாரியன்வலிபெற்றோங்கிலமுதயோகங்களாமே. (௭௪)

### பொருந்தாநாள்.

முத்திறச்சென்மங்கட்குமூன்றைந்தேழென்னுநாட்க
டத்திடர்தமாமீதிற்றாளொன்றினாலின்மூன்றி
னித்தமுங்கருமமெல்லாநீக்கினாரெவருங்கண்டாய்
கொத்தலர்குழலினாளேகொள்ளினுநாசமாமே. (௭௫)

### பகைநாள்; வைநாசிகம்.

பிறந்தநாட்கடுத்தமுன்னாட்பேசிருபத்தேழாகுஞ்
சிறந்தநற்கருமஞ்செய்யிற்றீதுறவிளையுமாதே
யறைந்தவோரேகராசியாமெனிற்கொள்ளலாகு
மிறந்தவைநாசிகங்களெண்பத்தெட்டெய்துங்காலே. (௭௬)

### சந்திராட்டமம்.

எண்ணியசன்மராசிக்கெட்டெனுமிராசிதன்னிற்
றண்ணொளிமதியஞ்சேரிற்சந்திராட்டமமதாகு
நண்ணிடுமிராசிதன்னினாயகர்நட்பதானாற்
பண்ணளிக்குழலாய்தீயபலன்களுங்குறையுமன்றே. (௭௭)

### விஷாங்கிசம்.

வேறு.. அருமதிமேவியவங்கிசங்களுக்
கிருவகைநான்கெனவியம்புமங்கிசம்
பொருவ்றுவிடமெனப்புகல்வர்கொண்டிடில்
விரவியகுலத்தொடுவிளிவர்திண்ணமே. (௭௮)

### சன்மத்திரயம்.

வேறு.

பரிமகமூலமாதிபகர்ந்திடுமூவொன்பானு
மொருபதுமுதலதாகவுரைத்திடுகருப்பநாளாந்
திரிவிதகருப்பமென்றுஞ்செப்புவர்கோசரங்கள்
விரவியேபார்க்கலாகும்வேல்விழிமின்னனாளே. (௭௯)

### திரிசன்மகன்மம்.

வேறு.

தருமங்கள்செய்யவுழுதுண்ணமன்னர்சரணங்கள்காணநிதியின்
கருமங்கள்செய்யவணிபூணவீசுக்கிர்மௌலிசூடமிகவும்
வருவிஞ்சைகற்கநிறைகூறைசுற்றமகிழ்போசனங்கள்புரியத்
திரிசன்மநன்றுமனைசெய்யமிக்கதிர்மானவீடுபுகவே. (௮௦)

## சன்மத்திரயவாரபலம்.

வேறு.

சந்திரனுணவேயெய்துந்தரும்புகர்மாதரின்ப
மந்தணுடைபெருமரும்புதன்கல்விகூடும்
வந்திடும்பயணம்வெய்யோன்மரணமாஞ்செவ்வாயாயின்
மந்தனிற்பிறந்தநன்ருள்வந்திடிலசுபமாமே. (௮௧)

## கிரகணசூலம்.

பனிமதிபரிதிதன்னைப்பணிகள்வந்தடர்த்தபோது
வினையுறுகிராணசூலம்விளம்பியமூன்னும்பின்னுந்
தினமதோரேழதென்பர்செய்யவேல்விழியினுளே
யினியநற்கருமஞ்செய்யிலேதமாய்விளையுமாதோ. (௮௨)

## வருடசூலம்.

சீதவெண்டிங்களாண்டாஞ்சித்திரைமுதலீராறும்
வேதியனுண்டாமாசிவெய்யவனுடனீராறு
மாதவனுண்டதாகுமாட்டினோடிரண்டு
மாதியந்தத்தின்மூன்றுமானநாட்சூலமாமே. (௮௩)

## அயனசூலம், மாதசூலம்.

மானினீணண்டிற்பானுமருவிடின்முன்னும்பின்னு
மானமும்மூன்றுநாட்களயனசூலங்களாகு
மீனமிலாடுகோலிலெண்ணுமொன்றரைநாட்சூல
மேனைராசிகளிற்சூலமியம்புநாழிகையாறைந்தே. (௮௪)

## அந்தியதோஷம்.

ஏதமினுளினந்தமிரண்டெனுங்கடிகைதானு
மோதியதிதியந்தத்தினுரைதருகடிகைமூன்று
மேதருகிராணந்தத்தின்மேவியதினமோரேழு
மூதுரைவருடாந்தத்தின்மூவைந்துதினமுந்தீதே. (௮௫)

## பஞ்சார்க்கப்புடம்.

வேறு.

இரவிசென்றமாதமொடுபோகத்தின்க ணிராசிநாலுபாகைபன்மூன்றினிது கூட்ட, வருவதுநீமேமதைமண்டலத்தின்மங்கைநல்லாய்களைந்திடவே வியதீபாதங், கருதியதிலாறுரையிடவேவட்டம்வட்டமதைமண்டலத்திற்களையவில்லா, மொருபதினேழ்பாகையிடக்கேதுவில்லிலோரிராசிதானிடமுன்போலவாமே. (௮௬)

## பஞ்சார்க்கதோஷமும் அபவாதமும்.

இன்னணஞ்சொல்பஞ்சார்க்கநாள்போலெண்ணியிராக்கதிரோனுற்றிடுநாளொன்றதாயிற், பன்னியநற்கருமங்கள்செய்யலாகா பான்மதியேறலவனுறிற்பானுவுச்ச, மன்னியசிங்கத்துறினு மவன்றன்வாரம்வந்திடினுஞ் சுபமாகுமறைநூல்வல்லோர், சொன்னவழியுரைத்தனன்கைக்காந்தள்வேய்த்தோட்சுகவசனக்கருங்கூந்தற்றேகைமாதே. (௮௭)

### கிரகமண்டலம்.

### வேறு.

கதிர்மதிமேதைசுங்கன்கனலவன்வியாழன்காரி
பதியுடனடைவேதோன்றும்பரவியூகோளேழாகு
மதிசயராகுக்கேதுபுகைவட்டமறைந்தசாபந்
துதிசெய்காணுக்கோளைந்தாந்தோன்றிலெவ்வினையுந்தீதே. (௮௮)

### மகாசூலம்.

வரைகிழக்கேழ்வடக்கேழ்வகுத்ததையனலமாதி
யிருபதோடெட்டுநாளையெண்ணும்போதினியகோட்சே
ரொருவரைக்கெதிர்ந்தசூலமுரைத்திலர்சுபங்கள்வெங்கோண்
மருவியவரைசேர்நாட்கண்மாசூலமிகவுந்தீதே. (௮௯)

### பூகம்பாதி.

எழுங்கதிர்நாளுக்கேழாயியம்புநாட்பூமிகம்ப
மொழிந்திடுமேழ்வழ்மோகமூவைந்தேபிரமதண்ட
மழிந்திடுமுற்கம்பத்தாமாதவன்குற்றங்கண்டாய்
செழுங்கயல்விழியினாளேதீதெனவுரைப்பரன்றே. (௯௦)

### எரிநாளாதி.

இலகுசேய்நின்றநாளுக்கெரியுநாளேழ்பன்னாலாம்
புலவனாளுக்கெட்டெண்மூன்றீரொன்பான்புகலுங்கண்டங்
குலவும்பான்சேர்நாளுக்குக்கூறுமொன்பானுமேயாம்
பலர்புகழ்புகர்நாளுக்குப்பத்தோடொன்பானட்டீதே. (௯௧)

பரிதிசேய்சேர்நாளுக்குப்பத்துடனிருபத்தாறு
முரையமகண்டங்காலனுரகஞ்சேர்நாளினுக்கு
வருபதின்மூன்றுபன்னைந்திடர்விடமருவுநாளாம்
விரைசெறிகுழலாய்நல்லவினையெலாம்விலக்கிக்கொள்ளே. (௯௨)

### வாரசூனியம்.

அரியசீர்மகம்விசாகமாதிரைசிறந்தமூல
முறைதருசதயமிக்கவுரோகிணிபூராடத்தை
வருகதிரடைவேயெண்ணவாரசூனியமதாகுங்
கரியபூங்குழலினாளேகாரியமனைத்துந்தீதே. (௯௩)

### மாதசூனியம்.

பரிவிதிமுதன்மாதத்திற்பகர்பூசஞ்சோதிநெய்யோ
டெருதிலுத்தராடங்கேட்டையாழ்தனிற்புநர்தநண்டி
லரியச்ரவிட்டம்பூரமரியிற்பூராடமூலம்
வரமகள்சதயமந்தம்வணிகனிற்புரட்டையாமே. (௯௪)

பூசமான்மகந்தீதேளிற்புகலுமுத்தரத்திலந்தம்
வீசியசுளகுதாலம்வில்லிற்பாம்பரன்கைமானிற்
கேசவன்மூலஞ்சாவிற்கேட்டைநீள்பரணிமீனில்
வாசநற்குழலாய்தீதாமாதசூனியத்தினாளே. (௯௫)

## உற்பாதம்.

பகலினிற்செம்பொன்ரேன்றிற்பார்த்திவரமைச்சர் துஞ்சி
லிகல்பலகோட்கள்செய்யிலிரத்தத்துமழைகள்பெய்யிற்
றிகழ்திசாமுகங்கடியிற்சின்முழக்கங்கள்செய்யிற்
சகதலநடுங்கினுளேழ்தவிர்ந்திடுங்கருமமன்றே. (௯௬)

## நக்ஷத்திரதியாச்சியம்.

வேறு.

பரியைம்பதுவசுநாளரிபனைபத்தனலந்தம்பகர்வேய்மகமொருமுப்பதுவிதி நாற்பதுபதினைன், றரனென்பர்கனெலிசித்திரைகுருவாடிநன்மூலமைநான் கர்வெண்ணுன்கடினமனீர்முரசறுநான், குரையங்கையொரிருபத்திரண்டுயர் சோதிநற்கேட்டையுறுமான் றலைமுறமேழிரண்டுலவும்புரட்டாதி, வருமெண் ணிரண்டொளிருத்தாஞ்சதயம்பதினெட்டாய் வருமித்தொகைமிசையேவிடம லிநாழிகைநாலே. (௯௭)

வேறு.

நடுவுத்தரமாதிரைநாரணனில், வடுவுற்றுயர்சோதியின்மானின்மிகக்
கடுவுற்றிடுநாடிகலந்திடுமேற், கெடுநற்கருமங்கிளைவேரறுமே. (௯௮)

## வாரதியாச்சியம்.

வேறு.

இலகுமெண்ணுன்குநாற்பத்திரண்டுமுப்பதிஞேடொன்றுங்
குலவியநாற்பத்தொன்றுங்கூறியமுப்பத்தொன்றும்
பலர்புகழிருபத்தொன்றும்பரவியவொருமூவாறு
நலமிகுபரிதியாதிநஞ்சுநாழிகைநாலன்றே. (௯௯)

## அமிர்தகடிகை.

வேறு.

நாடுபூரமானடைப்புமுப்பதங்கியைம்பதாநாகமீசனுற்பதத்தமேழ்பனெட்டுமு ரசநா, ளோடுநீர்புரட்டைபத்தின்முப்பதோடுமூன்றின்மேலுத்தரஞ்சொல்சித் திரைபன்னுறுகேட்டைமுப்பதொன், றீடின்மேன்மகம்விசாகம்வருணன்மா யனிருபதிலிருபதோடிரண்டுசோதிரேவதிக்கொராறிரண், டாடிமூலமயனவி ட்டமனுடம்வேய்பன்னுலபஞென் றரியபூசமாமூவேழிலமுதனுலுகடிகையே.

## குளிகன்.

வேறு.

செவ்வையாயெட்டுக்கூறாய்த்தினந்தனைச்செய்துநாளு
மவ்வவர்வாரமாதியடைவினுலெண்ணும்போது
வெவ்வியசனியின்கூறேவிளம்பியகுளிகனுகு
மெவ்வினைசெயினுந்தீதென்றியம்பினர்முனிவர்மாதே. (௧௦௧)

புரம்புகஙிதானம்வைக்கப்போர்செயப்பொருள்கைக்கொள்ள
வரம்பயில்கரிமாக்கட்டமருந்துறுமுபாயஞ்செய்யத்
திரம்பயில்சிராத்தமோடுதீக்கருமங்கள்செய்யக்
குரும்பையங்கொங்கைமாதேகுளிகனினன்றதாமே. (௧௦௨)

இயமகண்டம்.

வந்திடும்வாரந்தன்னைவருமெட்டுக்கூறதாக்கித்
தந்திடுங்குருவுணியமகண்டகமெனவேசாற்று
நந்துறுமெட்டொன்றூறுமொன்றுடனேலுநாலுஞ்
சிந்துறுமிரண்டுங்காலன்சிறப்புறவினைக்குத்தீதே. (கoரு)

அத்தப்பிரகரன்.

பூமகன்வெள்ளிவெய்யோன்புந்திநீண்மந்தனிந்து
வேமனிவ்வாரந்தன்னிலிரண்டாதியடைவேயெண்ண
யாமநாழிகையிற்பாதியென்பராலத்தப்ரகரன்
றாமரைக்கண்ணிஞளேசாலவுங்கருமந்தீதே. (கoச)

தினத்திரயம்.

தினமொருமூன்றிஞேடுதிதியொருமூன்றுயோக
மினமொருமூன்றெரர்நாளிலெய்தினுமவையொவ்வொன்று
நனியறுபஃதுநாடிநண்ணினுமந்நாளாகா
கனிமொழிகோட்கள்செல்லக்கண்ணிடுநாளுந்தீதே. (கoரு)

கண்டகதூணம்.

அண்டரெண்கதிர்சேய்சேர்நாளாதியாய்மூலமீரு
யெண்டருதொகையின்மூலமாதியாய்வந்தமேனுட்
கண்டகதூணமென்பர்கருதிருதொகையுங்கூட்டிப்
பண்டுபோலெண்ணிக்காணிற்கண்டகதூணந்தீதே. (கoசு)

இரத்ததூணம்.

வேறு.

பகர்ந்தநாலிராசிமேற்பதினெண்பாகத்தி
னிகழ்ந்தசேய்நற்புடநீக்கிநின்றநா
ளிகழ்ந்தவெந்துயர்தருமிரத்ததூணமாம்
புகன்றிலர்மங்கலவினைக்குப்பூவையே. (கoஎ)

இரச்சுமி.

வேறு.

தேள்பத்தருக்கன்மகளோன்பான்சிறந்தவெள்ளிமறியெட்டி
னீள்பாம் ‡ பயன்சேய்குடத்தெட்டினீண்மால்மானிற்பதினேழிற்
கேண்மைக்கரியோன்றேளேழிற்கேதுமிதுனம்பதின்மூன்றிற்
கோள்கட்குற்றபுடங்களையக்கூறுஞ்சுடராம்வினைதீதே. (கoஅ)

ஆசீவிஷம்.

வேறு.

மன்னுங்கதிருடன்மாமதிமருவுந்தினமதனுக்
கன்னந்தருநடையாயிரண்டாறென்பதினுடனே
பன்னென்றுரைபதிஞறெடுபதினெட்டுயர்பதின்மூன்
றென்னுந்தினமாசீவிடமென்றும்மிவைகொடிய. (கoகூ)

சரதிரஉபயம்.

வேறு. நண்டுமெறிகோன்மகரநாடுசரமாகுங்
குண்டையரிதேள்கலசங்கூறுதிரமாமாற்
பெண்டுசிலைவீணைகயல்பேசுபயமென்பர்
துண்டமதிபோலவொளிதுலங்குநுதன்மாதே. (ககo)

வர்க்கோத்தமம்.

வேறு.

சரமுதற்றயங்குந்திரமத்தியங், கருதுநீளுபயங்கடைக்கூறதாய்
மருவுமங்கிசநீள்வருக்கோத்தம, முரியநலவினைக்குத்தமமாகுமே. (ககக)

ஊர்த்துவாதோதிரயமுகம்.

வேறு.

வெய்யவன்விட்டநின்றவிரும்பிமிராசிமூன்று
மெய்தியமேலுங்கீழுமெதிருமாம்வதனராசி
யையமில்பத்தேழ்நான்குமவையவைக்கஃதேகண்டாய்
பொய்யின்மேன்முகத்திராசிபோற்றுநல்வினைக்குநன்றே. (ககஉ)

இலக்கினவிஷம்.

மகள்விடைசிலையினோடுமெறிமுதற்கூறுஞ்சொல்லு
மிகலரிகுடங்கோல்வீணையிவையின்மத்தியமாங்கூறு
மகரமீனண்டினோடுமென்னுதேள்கடையிற்கூறுந்
திகழ்பணிகழுகுபன்றிநீதுறவிடமதாமே. (ககங)

இலக்கினசூனியம்.

வேறு.

பொங்குகுடமீனெருதுவீணைபுகழ்மேட
மங்கையொடுதேண்டிறைவினண்டுமகரந்தான்
சிங்கமதனைக்குலவுசித்திரையொடெண்ணத்
துங்கமுலையாயுதயசூனியமதாமே. (ககச)

சுபாசுபராசி.

வேறு.

சிலைவிடைமிதுனமீனஞ்சேயிழைசிறந்தநண்டு
துலைசுபராசியேழாஞ்சொல்லுநற்கருமநன்று
மலையுறுகலசஞ்சிங்கமாடுதேண்மகரமைந்துங்
கொலையுறுபாபராசிகொடியவைக்காகுமாதோ (ககரு)

சேவிடுமுடம்.

வேறு.

சிங்கமேடம்விடையல்வின்முற்பொழுதுதேடுலாத்தினபரானமேற்
றுங்கவின்மகரநீத்திடுஞ்செவிடுசொல்லுமீனமொடுநற்குட
மங்குமாலையொடுகோலைதன்னின்முடமத்தியானமுறுபொழுதிலே
பொங்குவீணைமகணண்டுநென்குமுடம்பூசல்வேல்விழிமடந்தையே. (ககசு)

பாகலிரவுவிழித்தமிராசி.

வேறு.

வில்லாயிழையரிதேணிறைவின்மானிவையாறும்
பல்லாயிரங்கதிரோனதுபாங்காய்ப்பகல்விழிக்குஞ்
சொல்லாடெருதலவன்கயறலங்குங்குடமிதுன
மல்லாசறவிழிக்கும்மிவையாறும்மதிக்கூறே. (கக௭)

சகடம்.

வேறு.

அந்தணன்மேவியராசிக்காறினில், வந்தபன்னிரண்டினில்வயங்குமெட்டினிற்
சந்திரனிற்கவேசகடயோகமா, மிந்துவாணுதலிணுயென்றுந்தீதரோ. (கக௮)

அங்கிசவிஷயோகம்.

மேடமோடங்கிசமேவுமாறிரண், டோடுதேண்முதலுளவுதயந்தன்னிலே
கூடும்யோகம்விடமென்யர்கொள்ளுகி, ஞடியகுலத்தொடுநாசமாகுமே. ()

இலக்கினமரணயோகம்.

வேறு.

இருஞ்சனியைந்தில்வெள்ளியேழிலாரியனுறெட்டி
வரும்புதன்சிறந்தசெவ்வாயையிரண்டடனென்பானிற்
பெருஞ்சசியெட்டிலாறிற்பேசுமீராறுதன்னில்
வருங்கதிரிராகுநின்றூன்மரணயோகந்தானுமே. (கஉ0)

பாவயோகம்.

வேறு.

துஞ்சுமெட்டின்பதிதுலங்கவாறினின், விஞ்சுநற்கோளுறவிளம்புமற்றுளோர்
பஞ்சமந்தனிலுறப்பாவயோகமா, மெஞ்சிடுங்கருமமென்றியம்புவாரரோ. ()

காலயோகம்.

துண்டமாமறுமதிசுபங்கணீங்கியே, யெண்டகுமெட்டினிலெய்தப்பாவிகள்
கண்டகந்தனிலுறக்காலயோகமாங், கொண்டநற்காரியங்கூடுறாதரோ. ()

கிரகநோக்கு.

வேறு.

ஓதுகான்மூன்றுபத்தாமொன்பதைந்தரையதாகுந்
தீதிலெட்டொருநான்முக்கால்செவ்வையான்முழுநோக்கேழாங்
காதுசீர்மந்தன்பொன்சேய்காலரைமுக்காலுேக்கா
மேதமில்முழுநோக்காகுமேனையோர்க்மகன்பமாதோ. (கஉ௩)

கிரகதுணம்.

உச்சவக்கிரமதானுலுரைத்தமுக்குணமதேறு
மெச்சியவகமுக்கோணமேனிலையங்கிசத்தி
னிச்சயங்குணமூன்றென்றுநிகழரைக்குணமாமென்ப
ரச்சமாம்பகைநீசத்திலத்தமஞ்சேர்ந்தகோளே. (கஉ௪)

## உத்தமமாதிபலம்.

வேறு.

உத்தமபலமதாமுரைக்குமாதியின், மத்திமபலமதாமத்தியராசியி [யால்.
னித்தலுங்கடையதிற்பலனுநீசமாங், கொத்தலர்குழலினுய் குறித்துக்கோடி

## திதியாதிபேலம்.

வேறு.

திதியினும்வலிதுவாரந்தினத்தினும்வலிதுநாட்க
ளதினுநல்வலியதாகுமறைதருமோரையென்ப
ருதயராசியினுமேறுமுரைதிரேக்காணமாதே
யதினுநல்வலியதாகுமங்கிசமென்பர்மாதோ. (கஉசு)

## இலக்கினகுணம்.

இல்லுடனுச்சநட்பினிலக்கினத்தலைவர்மேவ
வில்லினைச்செம்பொன்வெள்ளியிறையவர்கண்டுநிற்பச்
சொல்லியசுபாங்கிசத்திற்சுபவருக்கோத்தமத்திற்
சொல்லுமேன்முகமாமில்லிற்சுபகருமங்கள்செய்யே. (கஉஎ)

சொல்லுமெக்கருமங்கட்குஞ்சுத்தமோரெட்டதாகி
நல்லகோளொன்பதைந்தினலங்கொள்கேந்திரங்கண்மேவி
யல்லவராறுமூன்றிலாயத்தின்மேவிக்கொண்டா
லெல்லையில்குறைகடீர்ந்தங்கினியதாய்ப்பலிக்குமன்றே. (கஉஅ)

## சீவயோகம்.

வேறு.

வேதியன்னுடன்வெள்ளியைந்துமூன், ருேதிடங்களிலுற்றுமற்றுளோ
ரேதமற்றபன்ஞென்றிலெய்திறற், றீதிலாததோர்சீவயோகமே. (கஉகூ)

## மந்தரயோகம்.

வேறு.

வெந்திறலாட்டினில்வெண்புகர்தானின், றந்தணன்மானினமர்ந்துயரேறிற்
சுந்தரமேவியசூரியனின்ருன், மந்தரயோகமதாமடமாதே. (கங0)

## துந்துமியோகம்.

வெள்ளியிலக்கினமேவியொராறிற், றள்ளியபாவிகடாமருவாவே
றுள்ளவரானபன்ஞென்றினினின்ரு, லொள்ளியதுந்துமியோகமதாமே. ()

## புட்கரயோகம்.

வேறு.

மேதைபத்தினின்மேவியே, தீதிலாப்பதிஞென்றினிற்
கோதிலாப்பிறர்கூடினு, லோதுபுட்கரயோகமே. (கஙஉ)

## மன்மதயோகம்.

வேறு.

ஆனவோரையரும்புதனெய்தியே, பானுகண்டகத்திற்பதிஞென்றினி
லேனையோர்களினிதுடனெய்தினன், மானிலம்புகழ்மன்மதயோகமே. ()

## பதுமயோகம்.

வேறு.

ஓரையிற்புதன்வெள்ளியுற்றிட, வாரியன்சிறந்தேழிலாகவே
நேருளோர்கள்பன்னொன்றினின்றிடிற், பாருளோர்களெண்பதுமயோகமே.

## தெய்வயோகம்.

ஒப்பிலாதபொன்னோரைமேவியே, † யப்பில்வெள்ளிநின்றூனபாவிக
டப்பிலாதபன்னொன்றுதாமுறிற், செப்புகின்றதொர்தெய்வயோகமே. ()

## மேருயோகம்.

ஐயிரண்டினிலாரியன்னுறத், துய்யவெட்டினிற்சேய்துலங்குறப்
பொய்யிலேழினிற்புகர்பொலிந்திடின், மெய்யெனச்சொலுமேருயோகமே.

## நாகயோகம்.

வேறு.

பானுவோடம்புலிபயின்றபாகத்தி, லானபிற்பாதியிலரவநாளினி
லீனமிலிரும்பணிமுகூர்த்தமெய்திடி, னைமார்குழலினாய்நாகயோகமே. ()

## திரிபுட்கரயோகம்.

வேறு.

குருவண்புகர்சேய்குணபத்திரையின், மருவும்பதமூவடிநாண்மருவிற்
கருதுந்திரிபுட்கரயோகமதாம், பெருகும்பலமூவகைபெண்ணரசே. (கரு௮)

## புவனானந்தயோகம்.

வேறு.

ஓரைபொன்பானுவீரைந்துடபதிநாலேழ்மேவி
னோரியேபுவனானந்தநந்தனயோகமாகுந்
தேரிபம்பொருள்பூண்வாசிதானியஞ்சிறிதுதன்கைச்
சேரினுமகலமாகச்சித்தியாய்ப்பலிக்குமாதோ. (கரு௧)

## திவாநிசிபேலம்.

வேறு.

ஆதவன்பகலம்புலிகங்குலி, னோதுமோரைக்கொருபதினொன்றிலே
கோதிலாநெறிநின்றிடிற்கோடியா, மேதம்யாவையுங்கெட்டிரிந்தேகுமே. ()

## தீயவோரை.

வேறு.

ஓரையிலிறைவர்நீசத்தொடுபகைமேவிற்றீயோ
ரோரையைக்காணநிற்கிலொளிமதிபரிதிசேரி
லோரையின்வலிகள்குன்றிலுரைத்தவோரெட்டதாகி
லோரைவெங்குற்றமெய்திலுலகிலெவ்வினைக்குந்தீதே. (க௪க)

---

† அப்பு - நாலாமிடம்.

### அபிசித்துமுகூர்த்தம்.

நாவினுலலகோர்போற்றுநற்கதிர்ப்பரிதியுச்சி
மேவினுற்குற்றம்யாவுமிகுந்திடரெய்துமேனும்
பாவினுற்புனைந்தசெஞ்சொற்பராக்ரமவாகுசெங்கைக்
காவினுலேற்றுளோர்கள்கலியெனத்தணியுமன்றே. (கசஉ)

### கோதூளிகாலக்கினம்.

செங்கதிர்மேல்பாற்சென்றுசெஞ்சுடர்விசயம்வாரி
தங்கியவேலைதன்னைத்தக்ககோதூளியென்ப
ரங்கதிற்சௌளமுஞ்சியருமணமன்றியாவு
மங்கையேசெய்யலாகுமென்றனர்மறைவல்லோரே. (கசங)

### இரணியவேளை.

வேறு.

ஆதவன்மண்டலமர்த்தம்வாரியிற், பாதலம்பாதியாய்ப்பதியும்வேலைதான்
சீதரன்கனகனைக்கொன்றதீங்குசேர், போதெனமுனிவரர்புகன்றிட்டாரரோ

### விசயயோகம்.

வேறு.

அந்திமாலைசென்றற்பம்விண்ணிலே, சிந்துமீனினந்தெரியும்வேலைதான்
முந்துகாரியமுழுதுநன்மையாம், விந்தைமேவுசீர்விசயயோகமே. (கசரு)

### துணதீகம்.

வேறு.

அஞ்சிலொன்பதிற்கேந்திரத்தந்தணன், செஞ்சொலில்லுறிற்றீமைநூறுயிர.
மெஞ்சிடுஞ்சுபவோரையிலெய்துமேல், விஞ்சுபல்குறையாவையும்வீயுமே. ()

நிறைகுணத்தொடுநீள்புகர்கேந்திர, முறையகத்திலுறையினூறுயிரங் [மே.
குறைதவிர்த்திடுமோரையிற்கூடுமேற்,செறிகுறைத்தொகையாவையுந்தீர்க்கு

வேறு. சுடர்மேவுவெள்ளியகமுச்சமாதிசுபலக்கினங்கள்பெறவே
படர்கோள்கள்பக்கமுடுவாரமோடுபலவாலெழுந்தகுறையு
மிடராசிமற்றுமுளகுற்றம்யாவுமிமையாதனேரமதிலே
யடலாழிமாயனுயர்பாதமோதுமவர்பாவமொத்துவிடுமே. (கசஅ)

நேரானவெள்ளிகுருவண்மையோடுநிலையானவோரைபெறவே
தீராதகுற்றமுழுதுந்திரண்டுசெறினுஞ்சிறந்தநெறியாற்
பாராளவந்தவரமானமன்னர்பரவும்பராக்ரமபுயேசன்
பூராடநாளிலுலகோர்கடங்கணனிதீமைபோன்றுவிடுமே. (கசகூ)

வேறு.

புந்தியாயிரப்பாதிபுகழ்குண, முந்துவெள்ளிமொழிந்தவையாயிர
மந்தணன்குணநூறெனுமாயிர, மிந்துவின்குணமெண்ணரிதாகுமே. (கடுo)

### கிரகபேலம்.

வேறு. இரவின்மதிசேய்சனிமாலேயென்றும்பகலேமற்றுள்ளோர்
மருவிவளர்தேய்பக்கங்கள்வலியர்சுபவெங்கோளோரை
வருடமாதந்தினத்திலிவர்வலியராகுஞ்சனிசேய்மால்
குருசொல்வெள்ளிமதியருக்கன்குணத்தால்வலியர்கொடியிடையே.

## சந்திரபெலம்.

வேறு.

துலங்கியகலைகளேறிச்சுபருடன்கூடிநோக்கி
நலந்திகழ்வினைகள்செய்துநட்புச்சாங்கிசத்துமேவி
யிலங்கியமதியஞ்சொல்லுமிடங்களினிற்குமாயிற்
பலந்தருமுகுர்த்தம்வேறுபார்ப்பதுபழுதுமாதோ. (௧௫௨)

சுபருடன்கூடிநோக்கிச்சுபாங்கிசந்தன்னின்மேவிச்
சுபவருக்கோத்தமத்திற்சொல்லுநல்வினைகள்செய்து
சுபமுறநிறைந்தசோமன்றுலங்குகேந்திரத்துநின்றாற்
சுபமுறுங்கருமம்யாவுந்தோகையேயுண்மையன்றே. (௧௫௩)

வேறு.

நேர்வியாழனோடுகூடிநீசராசியேகியே
யேருலாவுசோதிபோதவேறுசீதபானுதான்
பாரிலானதேவலோகபாரிசாதமேவவே
கோரமாகநாடுதோஷங்கோடிகோடிதீருமே. (௧௫௪)

வேறு.

திங்களேநன்றதாகிற்செப்புமெக்கோளுநன்று
மங்கதுதீயதாகிலனைத்துளகோளுந்தீதாம்
பொங்கியமனத்தோடொத்தபுலனெனவுரைக்கலாமான்
மங்கையேயாதலாலேமதியமேவலியதாமே. (௧௫௫)

தண்ணிலாமதியமென்னுந்தக்கசீர்க்காற்றுப்பெற்று
விண்ணுலாம்வியாழன்வெள்ளியாமெனுமோடத்தாலே
யெண்ணிலாக்குற்றமென்னுமிருங்கடலதனையென்றும்
பண்ணுலாமொழியினளேபயமறக்கடந்துகொள்ளே. (௧௫௬)

வேறு.

இலகியபூசநரிப்புறஞ்சோதியிரேவதிரோகிணியத்தங்
குலவுமிவ்வாறுநாட்கவமில்லைகொடும்பவக்கோளினமுறினு
மலரெழிற்பூசமதியகோசரமாயரியதாராபலமின்றிப்
பெலமிலாதுறினுஞ்சகலதீங்கினையும்பிரித்துயரின்பமேவழங்கும். (௧௫௭)

நீருரோகிணியிற்சந்திரனுதயநியுதமோர்கோடிதீங்குறினுஞ்
சீருறுபலசோபனவகைக்கினிதாந்திதிகுணமொன்றிருநான்கு
வாரமாம்யோகமுப்பதோடிரண்டாம்வளரெழிற்கரணமெட்டெட்டுத்
தாரகையெண்பான்மதிபலநூறுசந்திரதாராபலமனந்தம். (௧௫௮)

வேறு. குற்றமுங்குணமுநேர்குறித்துநோக்கிடிற்
குற்றமேறிக்குணங்குறையிற்றீயதாங்
குற்றமெஞ்சிக்குணமேறிற்கொள்ளலாங்
குற்றமேயேறினுங்குணத்தினாற்கொள்வரே. (௧௫௯)

௫-து குணப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் ௫௦௨.

---

ஒன்பதாவது

# சுபாசுபப்படலம்.

## கோசரபலம்.

வேறு.

ஆறொடுமூன் றரவஞ்சேய்சனிகதிரா மருளுமினன் பத்துநன்றுங்
கூறுமிரண் டைந்தேழொன் பதுநலமாங் குருசென்மம் பத்தேழ்மூன்று
மாறுமதிநன் றுபுதனிரட்டையினீ ராறொழிந்தாம் புகர்பத்தாறேழ்
மாறிடவே சுபமாகுமெல்லோருமருவுபதி னொன்றினன்றே. (க)

வேறு.

உத்தராயணத்தோதியபானுவு, மெத்துநற்கலையேறுவெண்டிங்களும்
வைத்தவைந்திரண்டொன்பதுமாதவ, ருத்தமப்பலமென்றுரைத்தாரரோ. (உ)

வேறு.

வன்றுண்மந்தன் வெள்ளிசெழுஞ்சேய்மதிநாகங்
குன்றுநற்பொன்செங்கதிர்கூறும்புதனேரே
யொன்றுறேழெட்டொன்பதுமூன்றைந்தொருநான்கி
னின்றுஞ்சநீடியதுன்பமிகவாமே. (ங)

வேறு.

வினைபெருந்துயரம்வாழ்வுமேவலர்செய்கேடுநோயுவகைசஞ்சல
நனிவியாதிபயமத்தலாபமிகுநன்மைநாசமிவைஞாயிறு
மினியவுண்டிபிணிவாழ்வுடன்பயமெழுந்தபுண்ணுவகைவெற்றிவெந்
துனிசெய்கேடுதுயர்நிலைசெய்நன்மைசுபமோதுசேதமுயர்சோமனே. (ச)

புத்திநாசம்வினைநன்மைதோல்வியொடுசேதம்வாழ்வுபுகலுஞ்சிறை
மெத்துதுன்பமிடரச்சநற்றிருவியாதிசேயரவுசனியதா
நித்தநாசமிவைமோட்சம்வாழ்வுதுயர்நன்மைசேதநிறையுஞ்சுபஞ்
சித்ததாபமொடுநன்மைநல்லுவகைசேதமென்பர்புதன்மேவிலே. (ரு)

நாசநன்மைமிகுகேடுமோட்சமுறுலாபநாடுதுயர்போகநோ
யேசில்வாழ்வுபதிகுலைதல்பொன்புடைவையெய்தறுன்பநல்வியாழனு
மாசினன்மைசுபமின்பம்வாழ்வுவகைதானநாசமிடர்மகிழ்வுடன்
வீசுசெல்வமழிவின்பமிக்கசுபம்வெள்ளிசென்மமுதலெண்ணவே. (சு)

## கோசரவேதை.

வேறு.

கலசமான்மிதுனமங்கைகதிரவன்றுசிங்க
மலவனற்சாபமீனிலனைவருமகல்வாராயிற்
குலமதிமறியாழ்மங்கைகோல்குடமானுஞ்சிங்கஞ்
சிலைகயல்விடைதேணண்டிற்புதனொழிந்தவர்தீர்ந்தாலே. (எ)

ஆயிழைகுடமான்றேனே றலவனும்புந்திவின்மீன்
மேயகோன்மேடஞ்சிங்கம்வீணையிற்கோட்கணீங்கிற்
பாய்விடைகும்பஞ்சியஞ்சிலைதுலைபைம்பொனல்லன்
ரேய்கயறேணண்டேமான்யாழினிற்சுத்தமாமேல். (அ)

தேளுடனேழொன்றைந்துசிலையரிகுடமூன்றுறிற்
கோளிலாதாயினன்றுகூறுபத்தாறேழ்நீத்த
நீழ்புகர்கும்பம்வீணைநேரிழைசனிசேய்நன்றாங்
கோளரிமீனம்வில்லிற்கோளிலதாயின்மாதோ. (கூ)

## விசேஷகோசரம்.

பரிதிவக்கிரன்பொன்மந்தன்பகருமெட்டொன்றீராறில்
வருமுடலுயிருக்குற்றான்மாற்றலர்பீடைவெங்நோய்
பொருளழிவுடனேபோக்குப்பொருந்திடச்செய்வரென்று
மருமறையுணர்ந்தமுன்னோரறைந்தனர்கருங்கண்மாதே. (க௦)

சென்மநாளிராசிக்குற்றசெழுமதியுடலதாகு
மன்னியபிறந்தராசியுதயமேமருவுஞ்சீவன்
சொன்னவிவ்விரண்டினுக்குஞ்சுடர்முதற்கோசரங்கள்
பன்னியேபார்க்கவேண்டும்பங்கயத்திருவையன்னாய். (கக)

## கிரகசாரசங்கியை.

### வேறு.

ஆண்டொன்றுசான்மேலொரரையரவமந்தன்மேலுமொன்று
வீண்டமாதமொன்றருணன்மேலோரரைதான்சேய்புகரோன்
மாண்டமூவெட்டேனோர்நாண்மாலோன்பன்னேமூடனென்றாங்
காண்டிங்களினுக்கிரண்டேகால்கருதுகோளினிலைநாளே. (கஉ)

## கிரகபலிதம்.

### வேறு.

ஆதவன்செவ்வாய்ராசியாதியிற்பலிக்குமிக்க
வேதியன்புகர்பலிக்கும்விளங்குமத்தியத்திற்சோம
னேதியமந்தனந்தத்துறுபலன்பலிக்குந்தூய
மேதையும்பணியுமெங்குமிகநெறிபலிக்குமாதோ. (கங)

## கோள்வினைதீர.

புகழ்மணியாரந்துப்புமரகதம்புருடராகந்
தகையுறுவைரநீலந்தக்ககோமேதகஞ்சீர்
நிகழ்வைடூரியந்தானெறியினலருக்கனதி
திகழ்மணியொன்பான்பூணிற்கோள்வினைதீருமன்றே. (கச)

சுரருடன்மறையோர்தம்மைத்தொழுதிடிற்றானஞ்செய்யிற்
பரவுநல்லோரைக்கூடிற்பரமனைச்சீலஞ்செய்யி
லுரைமறைதருமங்கேட்கிலோமநற்சாந்திபண்ணிற்
குருமொழிநெறியினிற்பிற்கோள்வினைதீருமன்றே. (கரு)

### பிறையிலக்கணம்.

நண்ணுமீன்மேடங்கோலினுடுதெற்குயரினன்றாம்
பெண்ணுடன்மிதுனமேறிற்பிறைசமமாகிலாமா
லெண்ணும்வேறிராசியெல்லாமெழில்வடக்குயரினன்று
மண்ணிலித்தன்மைகுன்றின்மழைபயிர்குன்றுமாதோ. (௧௬)

வளர்பிறையொன்றாம்பக்கமாமுதன்மும்மூன்றாக
விளைவுறுநாளிலெய்தில்விளம்பியவடைவாலஃக
மளவறவதிகஞ்செல்லுமத்திமமற்பமாகு
மொளிர்பிறைபக்கநாண்மேலுரைத்திலர்நன்மையென்றே. (௧௭)

### பிறைதொழ.

செங்கதிர்வெள்ளிசெம்பொன்சிறந்தவாரத்தினாளுந்
துங்கவெண்பிறையைக்கண்டுதொழுதிடினன்றதாகு
மங்கையேயறிந்துகொள்ளாய்மற்றுளவாரந்தீதாஞ்
சிங்கமாதத்தினாலாம்பிறையதுமிகவுந்தீதே. (௧௮)

### சங்கிரமபலன்.

சீர்முகில்பெய்யிற்பெய்யுஞ்சிறந்தகார்த்திகைதைமாத
மோர்முகில்பெய்யிற்பெய்யாதியம்புமைப்பசியினோடு
மார்கழிமாதந்தீயவாரமேன்மழையுங்குன்றுங்
கார்பெயுஞ்சுபவாரத்திற்கங்குலேன்மிகநன்றாமே. (௧௯)

அந்தமுத்தரங்கண்மூலமவிட்டமான்றலைமால்பூசம்
வந்திடினன்றதாகுமறலிமுப்பூரங்கேட்டை
செந்தழலீசன்பாம்புசெப்பியவிசாகந்தீதாங்
கொந்தலர்குழலினாளேகுலவுசங்கிராந்திதானே. (௨௦)

பேசுசங்கிராந்திமுன்பின்பிறந்தநாளெய்திலத்த
நாசமேலாறுமுண்டாநற்பொருடினமேனாண்மூன்
றேசுறுபயணமேலாறினிதிடத்தின்பமேன்மூன்
றாசின்மன்னவராற்கேடாமரசனாலருணாலாறே. (௨௧)

பிறந்தநாண்முதலாய்த்தொட்டுப்பேசுசங்கிராந்திநாளி
னறிந்ததையேழிற்றாக்கியெட்டினுக்களித்தசேட
முறும்பிணியிலாபம்போக்குவுடற்றளைதனமேசம்பத்
திறுந்தனமவமிருத்தென்றியம்பினார்முனிவரன்றே. (௨௨)

### தலையுவாவுற்பாதம்.

அலைவின்மார்கழிநீளாடியாணிகார்த்திகைமாதத்திற்
றலையுவாவிடித்தன்மண்ணிற்றாரகையாலிவீழ்த
ணிலனடுங்குதல்கிராணநிகழ்சோரிமழைவில்வட்ட
மிலகியவைந்தாமாதத்தெஞ்சிடுமஃகமன்றே. (௨௩)

தையுடன்மாதமூன்றிற்சாற்றுமிக்குறிகளுண்டேற்
றுய்யபொன்சந்துபட்டுத்தொலைந்திடுமேழ்மாதத்தின்
மையிலைப்பசிபுரட்டைமாதத்தில்வேழம்வாசி
மெய்யுறக்கேடாமைந்தாமாதத்தின்மிகவுமாதே. (௨௪)

மறுவில்சித்திரைவைகாசிமாதத்திலாறுமாதங்
குறையுநூல்பருத்திமூலங்கொள்வரகனைத்துங்குன்றும்
பறையுமாவணியிற்சொன்னபடுகுறியுளதேனெய்பால்
செறிதருகஞ்சங்குன்றுந்திங்களோரிரண்டின்மாதே. (உரு)

## மகக்தறி.

மாசிமாதத்திற்சோமன்மகவுநொன்குமீனிற்
றேசுறுதென்மீன்சேரிற்செகதலத்தஃகமுண்டா
மாசறுபின்மீன்முக்காலதற்பின்மீனரையதாகும்
வீசுநேர்வடமீன்காலாய்விளம்பினாரஃகமென்றே. (உசு)

## இடிவிழுந்தறி.

வெஞ்சிலைமறிதேண்மீனவுதயமேல்வேந்தர்கேடாந்
துஞ்சிடுமமைச்சன்யாழிற்சொல்விடைமாரிகுன்றுங்
கொஞ்சியமங்கைநோயாங்கோல்குடமகரநண்டி
லெஞ்சிடுமஃகங்கண்டாயிடிவிழுங்குறியதாமே. (உஎ)

## ஆடிப்பஞ்சமி.

ஆடியின்முற்பக்கத்தினைந்துமுன்வாரங்கோடை
நீடியவெள்ளமாகுநிகழ்மதிவெள்ளிபொன்னிற்
பாடுசேர்பூசலாகும்பஞ்சமாமந்தனுகி
ஞடியபுதன்வெங்காற்றுநாமவேல்விழியினளே. (உஅ)

## காற்றுக்தறி.

ஈசனிற்கீழ்கால்வீசினெழின்மழைவிளைவுண்டாகும்
வாசவன்மன்னர்கேடாய்வான்மழைபின்புபெய்யும்
வீசுதீகளவேமன்னிவிளைபசியாகுந்தெற்குப்
பூசலாகிருதிதன்னிற்போதவும்பஞ்சமாமே. (உகூ)

வருணனில்விளைவுமாரிவளமுறும்வாயுத்தன்னின்
மருவியமரங்களுண்டாம்வடக்கினில்வெள்ளக்கேடா
மரிவையேயறிந்துகொள்ளாயாடியுத்தராடந்தன்னிற்
பரவுகாலிடத்திற்றீதாம்பகர்வலநன்றதாமே. (ங0)

## பரிவேடம்.

வேறு.

நேரின்மதியைப்புகர்செம்பொனிற்கவளைக்கிற்பெருமழையா
மாரிதாழ்க்குஞ்சிறிதாயின்மதியைச்சனிசேயுடன்வளைக்கிற்
பாரிலிடர்நோய்பசியாகும்பரவுங்கிராணந்தனில்வளைக்கிற்
போரிலரசர்க்கிடராகும்விட்டால்வளைக்கிற்புவிக்கிடரே. (ஙக)

## கிரகணபலம்.

பூரம்பரணிதீபூசம்பூரட்டாதிமகஞ்சுளகு
நேரேயங்கிமண்டலமாநீள்சித்திரையுத்தரமவிட்டம்
பாரெண்சோதிபாம்பத்தம்பரிநீள்வாயுமண்டலத்திற்
சேருங்கிராணந்தீண்டின்மிகத்தீமைபசிநோய்செகத்தாமே. (ஙஉ)

கடைநாண்முரசுமான்சதயங்கபாலிமூலம்பூராட
மடவாய்வருணன்மண்டலமாமாயன்கேட்டைவிதிபுனர்த
மடலாரனுடமபிசித்தோடுத்தராடங்கேத்திரமா
நெடுமேதினியின்மழைவளத்தானிகழுங்கிராணந்தீண்டிடினே. (௩௩)

இருவர்கிராணந்தனின்மாரியிந்த்ரசாபமிடிமுழக்கம்
பரிவேடங்கால்வீசிடினேபாரும்விளையுமழைவளத்தா
லரசர்க்கிடராமிருவரையுமைம்மூன்றுநாட்பணிதீண்டில்
விரிநீருலகத்தவர்க்கிடராய்வெய்யபசிநோய்மிகுந்திடுமே. (௩௪)

பாடுகதிர்கடமைமூடிப்பணிகொண்டெழுமேன்மழைகுன்று
மூடியுடனேயுமிழ்ந்திடுகின்மொழியும்புவியெங்கணும்விளையுங்
கூடிவிழுங்கிமறைந்திடுமேற்கோவின்செங்கோலொளிகுன்று
நீடுமெரவமூட்டறுக்கினேரேயுலகமழிவாமே. (௩௫)

## சர்ப்பதானம்.

வேறு. திரிசென்மநாளின்மதிசென்மராசிதினமெட்டிராசிவருநா
ளரவங்கடீண்டினிதிபெண்டிர்சுற்றமரிதானமக்களழிவா
மரணந்தனக்குவருமென்பர்கஞ்சவள்ளத்திலானெய்நிறைவித்
துரகங்கள்பொன்னில்வருவித்துவைத்துவுறுமெள்ளினோடுமுதவே.()

## மழைக்குறி.

வேறு.

மூலநமன்புனல்புரட்டையெட்டைந்துமுற்பதினைந்துத்தராடங்
கோலமுரசேழ்கேட்டையையிரண்டிற்பனைமூன்றிற்கொண்டல்செங்கேழ்
சாலவுறின்மழைபெய்யுஞ்செங்காருச்சியிற்றயங்காணுள்வெண்காரின்
மேலுலகினேழாநாட்புயல்பொழியுமஃதரிதேன்மிகவுந்தீதே. (௩௭)

வேறு. பரிதிமுன்வெள்ளிசெல்லப்பௌமன்பின்செல்லும்போது
பொருவில்பூராடந்தன்னிற்புகரவனிற்பனேனும்
பெருமழைபெய்யுங்கண்டாய்பிறங்கியவருக்கன்முன்னே
கரியவன்பௌமனிற்பிற்காசினிபஞ்சமாமே. (௩௮)

உருள்பனைவிசாகஞ்சோதியுத்தரஞ்செவ்வாய்மேவி
லிருண்மழைகுன்றும்வெள்ளிசோதியோடெண்ணுமூன்றில்
வருகிழக்குறினுமேற்கின்மகமுதலைந்துநாட்கண்
மருவினுமழைகள்குன்றுமாறுமேல்வெள்ளமாமே. (௩௯)

நீரிலெண்புகருந்தீயிலருக்கனுநிகழ்தேள்கும்பஞ்
சேருநண்டுரைவின்மானிற்றிங்களுநிற்கில்வெள்ள
மாரியாமக்காலத்துவருங்கதிர்வெள்ளிமுன்னே
பார்மகனிற்கிற்றூறும்பசும்புயல்சுழிக்குமன்றே. (௪௦)

## சுக்கிரமூட, கிரகணபலன்.

ஆனிகார்த்திகைபங்கூனியரும்புரட்டாதிமாதம்
வானுறுகிராணம்வெள்ளியத்தமம்வருமேயாகிற்
கோன்முறையரசர்வாழ்ந்துகுலவியமழையுமுண்டாய்
மானிலஞ்சுபமேமல்கிவளம்பெறவாழுமன்றே. (௪௧)

மாசியைப்பசிவைகாசிமார்கழிவெள்ளிமூடங்
கூசியகிராணம்வந்தாற்குவலயம்விளையுமாரி
தேசுறுமன்னர்நீதிசெழுநிலவளங்களெல்லாம்
பேசிடிற்சமமாமென்றுபேசினர்பிறங்குநூலோர். (௪௨)

சித்திரைதையோடாடிசிறந்தவாவணியில்வெள்ளி
யத்தமங்கிராணமுண்டேலவனியின்மழையுமின்றி
யுத்தமபசுக்கண்மாளவுலகினிற்பஞ்சமுண்டாய்க்
கைத்தலத்துறுவாண்மன்னர்களப்பலியூட்டுவாரே. (௪௩)

## கிரகக்கிரகணம்.

வேறு.

மதிசேய்சனியைமறைத்திடுகின்மன்னர்வாழ்வாமால்வெள்ளி
துதிசேர்குருவைமூடிடுகிற்பசியாமறையோன்சுன்புதனைப்
புதிதாய்மறைக்கிற்சுகஞ்சுங்கன்பொன்னைமறைக்கிற்பசிசெவ்வாய்
கதிர்சேய்தன்னைமூடின்மழைகனலோன்சனியைவிழுங்கிடிற்போர். ()

## வியாழன்சரிதை.

உரைசேர்மேடம்பொன்சேரிலுலகமெங்கும்விளைவுண்டா
மெருதின்மழையாங்கோப்பல்காதியாழிற்பொன்முத்தரிதாகி
யரியவிடராமுயர்நண்டிலரசர்க்கிடராமான்பல்கும்
பரவுமரியிற்பசிபோர்நோய்பஞ்சமாகிப்பயமுறுமே. (௪௫)

மங்கைபொன்னேற்றுகின்மலிந்துமழையாய்ப்பஞ்சுப்பரிதாகுந்
துங்கக்கோலினிறைகுறைந்துசொல்லும்பொருள்யாவையுமேறும்
வங்கிற்றேளின்மழைதவிர்ந்துவையத்திடர்நோய்மிகுந்திடுமாற்
செங்கைச்சிலையிற்பூசலுமாய்த்தேசம்விளைந்துசிறப்புறுமே. (௪௬)

மகரப்பொன்னின்மழைவிளைவுமறுத்தெட்பஞ்சுபசிநோயாந்
திகழ்நற்கும்பமழைவளத்தாற்றேசம்விளையுமீனப்பொன்
மிகுமெட்பருத்திபசிநோய்கள்வீயுங்கரிமாமழைகுன்று
நிகழைப்பசியோடாறிரண்டுநீளாடாதியாறிரண்டே. (௪௭)

## வெள்ளிசரிதை.

வேறு.

புகர்மறிமுதலோர்நான்கிற்பொருந்திடின்மாரிபெய்யு
மகளரிமாரிகுன்றும்வணிகன்றேண்மாரியேறு
நிகழ்சிலைதிவலைமாதேநீடியமகரமூன்றின்
மிகவுமாமாரிபெய்துமேதினிவெள்ளமாமே. (௪அ)

## சனிசரிதை.

வேறு.

புரவிசனியுறின்மழையாம்வேந்தர்க்காகா பூதமுறிற்பொருண்மாரியங்கி யாதி, வருதினமூன்றுறின் மனுக்கண்மாயுங்கார்போமதிசூடி மிகுமழையேய ளவாமாரி,குருவதனிற்சிறுமழைகீழ்சாதிபல்குங்கொடியவராமூன்றுறைபோ ய்மனுக்கண்மாயு, மிரவியினிலற்பமழைபயறெள்ளுண்டாமிருங்காணுலுறின் மழைபெய்தின்பமாமே. (௪௯)

கரும்பனையிற்சனிமழையாம்வேந்தர்க்காகா கனனிறவல்லாரைமுதலைந்துசேரிற், பெரும்பசிநோய் கலகமதா மாரியில்லை பிறங்குவசுநாளா திமூன்றுசேரிற், றரும்விளைவுமழைமிகுந்துசனங்களுண்டாந்தகைமுரசுகலஞ்சனியேற்பஞ்சமாகி, யிரும்புவியின்மனுமாயு மென்றேமுன்னோ ரியம்பினர் மின்னிடைத்துவர்வாயினியமாதே. (ருo)

## வாயுயோகம்.

வேறு.

மேதையுடன்புகர்மதிசேய்மேவியொரேழிற்சனியுமிக்கவீரா
ரூதபனுஞ்சேரின்மிகுங்கால்வீசும்புகர்புதனோடரவமொன்றி
லேதமறக்கூடிடினுமேனையர்கள்சரராசிசராங்கிசத்திற்
றீதறவேநின்றிடினும்பெருங்காற்றுமிகவீசுந்தெரியுங்காலே. (ருக)

## வாயுப்புடம்.

பகல்சுத்தப்புடந்தனிலோரோரையுநற்பாகையொருபத்துங்கூட்டிப்
புகழ்தருமண்டலமதனிற்களைந்திடவேசேடங்காற்புடமதாகு
நகுமதிமால்வெள்ளிபணிநற்புடத்திலப்புடந்தானதிகமானு
லகலிடமெல்லாமலைக்கும்பெருங்காற்றுமருந்தவத்தோரறைந்தவாறே.

## கிரகதோஷம்.

வேறு.

தூயமால்சதயமூலஞ்சோதியுத்தரங்கடம்மிற்
சேயுறினுலகமெல்லாஞ்செப்பியகோடையென்பர்
மேயதேண்மேடாந்தத்தில்விடையரிநடுவிற்கூற்றிற்
காய்சனிசெவ்வாய்நிற்கிற்காசினிபஞ்சமாமே. (ருஉ)

செங்கணேறரிகோல்வில்லுச்செழுங்கயறன்னிற்செவ்வாய்
பங்குவக்கிரிக்குமாகிற்பரிகரிமனுடர்தேனு
வங்கவைநாலின்முக்கூறலகிடுமொருகூறுமான்
மங்குலும்பெய்யாதாகிவையகம்பஞ்சமாமே. (ருச)

வேறு.

குருவோடுமந்தனொருராசியாதல்குலவேழிலாதலுறினு
மரவோடுபௌமனதினோடுமந்தனதினோடுபொன்னனுறினு
மரியாதிகுண்டையிடைமீனவந்தமதிலாரன்மந்தனுறினுந்
திரையாழிவையமிடினோயினோடுதிகழ்பஞ்சமெய்திவிடுமே. (ருரு)

வேறு.

நிகழும்வக்கிரநீள்சனியெய்தப், புகழும்பொன்னதிசாரமதானுற்
றிகழும்பார்முழுதுந்திகழ்துன்ப, மிகவுந்தென்றிசைவெந்துயராமே. (ருசு)

## தேசராசி.

வேறு.

மறியோரைமாளவநாடெருதுகருநாடகம்யாழ்வாய்த்ததுண்டி
யுறுகுளிர்சோழஞ்சீயம்பாண்டிகன்னிகேரளமேயுயர்ந்ததூக்கங்
குறுகியசிங்களந்தெறுக்கால்சென்னைநகர்சிலையவனங்குலவுபுவ்வா
யறிவகலாரியங்கும்பங்கௌசலமீன்பாஞ்சாலமறிந்திடாயே. (ருஎ)

வேறு.

உரைத்திடுதேசத்துற்றவோரையிற்பாபர்நின்று
சரித்திடிற்பீடையாகுந்தக்கவர்நிற்பாராயின்
வருத்தமொன்றின்றிமாந்தர்மற்றையவுயிர்கள்யாவும்
பெருத்திடுமின்பமெய்தப்பெய்திடுமழையுமன்றே. (ருஅ)

## பல்லிவிழுதுறி.

வேறு.

சென்னிமரணஞ்செவிவலத்தினியதாகுந்தீதுறுமிடச்செவிமுகம்புதல்வர் கேடா, மன்னுநுதல்பட்டமுறுநாசிபிணிகண்டமாசறுமகிழ்ச்சிதருமார்புபிணி யெய்துந், துன்னியவிடக்கைமரணம்வலதுகையிற்றுஞ்சுவர்தமுன்னவர்வயிற் றின்மகவுண்டாங், கன்னிகெடும்யோனிமுதுகிற்பொருள்விநாசங்கையுறுமிக ப்பொருளபானமிவைதானே. (ருகூ)

கருதியகுறங்குபிணிமாதமொருமூன்றிற்கலகமொடுபொருள்கெடுதியிட ம்வலமுழந்தாள், வருமிடவலப்பதம்வருந்துயரநோயாமருவுவிரன்மன்னர்மு னிவோடுபிணியெய்துங், கரவிரலிடத்திலுறுகேளிர்துயரெய்துங் கைவிரல்வ லத்தரசரன்புமிகவெய்து, முரையிடம்வலப்புயமுயிர்க்கிறுதிவாழ்வாமுற்றுட ல்விழுந்திடினுறுங்கெவுளியன்றே. (சுo)

வேறு.

பல்லியினிமித்தந்தன்னைப்பகருமிந்நூலிற்சேர்த்துச்
சொல்விடில்விரிவதாகுமாதலாற்சொன்னேமில்லை
புல்லியவாரமோரைபுகன்றிடுங்கடிகைதிக்கால்
வல்லவரறிந்துசொன்னமற்றுநூல்கொண்டுபோரே. (சுக)

## ஓந்திவிழுதுறி.

வேறு.

ஓந்திவலப்பாகத்திலுறவீழிற்றனச்சேதமுறவுசேதஞ்
சேர்ந்தவிடப்பால்வீழிற்றனச்சேதஞ்சிரமுதுகுசெய்யகஞ்சக்
காந்திபெறுமுகம்வீழின்மரணமதாங்கால்வயிறுகலன்சேர்மார்பு
போந்துவிழிற்றனலாபமிராசபலமென்றுரைப்பர்பெரியோர்தாமே. ()

## காகங்கரைதல்.

வேறு.

தந்தலாபம்பொருணசந்தக்கோர்வரவுநிதிப்பேறு
நந்துமழைபோர்சாவச்சநண்ணுமுதயமுதலாக
முந்துகிழக்கோடெண்டிசையுமூன்றேமுக்காணுழிகையாய்
வந்ததிசையேமுதலாகவயங்குங்காகங்கரைந்திடினே. (சுஉ)

## முதியான்கரைதல்.

வேறு.

இந்திரனங்கிசண்டனியலுறுநிருதியோடு
வந்திடுவருணன்வாயுமதியீசன்முதியான்கூறி
னந்திலாவின்பஞ்சோகநற்றனம்வெம்போர்கள்வர்
வெந்திடும்வீடுகன்னிபிள்ளைசாம்விரோதம்விண்ணே. (சுச)

## ஆண்டிற்சாந்தி.

ஆதிரைபரிமானத்தங்காலன்சுன்றுடம்வாயு
மீதிலுத்தரட்டாதிக்குமிருத்துச்சுன்றேணத்துக்கு
மேதிலுத்தராடத்துக்குமிடையவசித்துச்சுன்று
மாதலானடுவினுட்களாகநற்சுன்கண்மூன்றே. (சுரு)

பெற்றுளவயதையோர்ந்துபிறந்தநாளாதியெண்ணச்
சொற்றவன்னுட்களொக்கத்துன்னிடிற்சுன்னதாகு
முற்றவொன்பதாண்டேயெங்குமுறினுரையூனவாண்டா
மற்றதினிடர்கணீங்கவலியுடன்சாந்திசெய்யே. (சுசு)

## சனிச்சக்கரம்.

வேறு.

வதனத்தொன்றுவலத்தோனுல்வருதாளிருமூன்றிடத்தோனு
லுதரத்தைந்துசிரத்தொருமூன்றுறுகண்ணிரண்டுகுதத்திரண்டு
விதியிற்சனிசேர்நாளாதிவிளம்புமுறையெண்ணிடத்துண்ணு
ளதுவிக்குறிப்பிலமைந்தக்காலசுபஞ்சுபங்களறிந்துகொள்ளே. (சுஎ)

வேறு.

முகந்துயர்வலக்கைவெற்றிமொழியடிபோக்கிடக்கை
மிகும்பயமுதரஞ்சென்னிமிக்ககாதிருகணின்ப
மகிழ்ந்திடுமெபானநாசமருஞ்சனிதீதுற்றுலும்
புகும்பலனல்லுறுப்பிற்பொருந்தினுமேனதீதே. (சுஅ)

## வருஷப்பிறப்புக்கருமம்.

## மருத்துநீர்.

வேறு.

கூடுந்தாளைபீர்க்கறுகுகோரோசனைகோமயங்கோநீர்
தேடுந்தாதுமாதுளைமாறேவிவில்வம்பால்கமல
நீடுமெஞ்சண்முக்கடுகெநீரிற்கலந்துநெறிகாச்சி
நாடுமருத்துநன்னீரானனைக்கச்சிரசைத்துயரறுமே. (சுகூ)

## பல்லவம்.

வேறு.

இலவினன்மதிவிளாவிசைகடம்புசேய்
குலவுமால்வேம்புபொன்கொன்றைபுன்கிலை
யலரொளிவெள்ளிசுன்னுலதென்பரா
லுலவுமாண்டிறுதியிலுணர்ந்துகொண்மினே. (எ0)

## ஸ்நானம், வஸ்திரம்.

வேறு.

போனவாண்டிலைதலைக்குப்புகுதுமாண்டிலைகாலுக்கு
மானநேர்வைத்துச்சொன்னமருத்துநீராடிவார
வானலக்கினத்துவண்ணவண்டுகில்புனைந்துகூறும்
போனகமுன்னேதுய்த்துப்போசனம்பலவுஞ்செய்யே. (எக)

## போசனம்.

வேறு.

சூரியனிலெரட்டடைமுக்கடுகங்கள்சோமனில்வெண்டயிர்ச்சோறுப்பு
பார்மகனிற்பொரிகசப்புப்பகர்புதனின்மாதுளேமோதகமபூப
மாரியனிற்பாற்சோறுதேன்புகரிலடுங்கடுகுபுளியெணெல்லி
காரியிற்பிட்டேகசப்புவருடாந்தத்தருந்துணவுகண்டுகொள்ளே. (௭௨)

## தினதேவதை.

வேறு. ஏயுநாமகணலேயைதீபிரமனிந்துவீசனியலதிதிபொ
ஞயுநாகநளிர்சுங்கனரிசுடரையனகர்குலகம்மியன்
வாயுசாமிமலர்மாதுவானிறைவன்மாலரக்கர்நதிபதிமுனேன்
மாயனடுவசுதன்மனேடுசெசிவண்கொக்காரியுடுநாதரே. (௭௩)

## திதிதேவதை.

வேறு.

அயனனவனரியந்தகனலோன்குகன்சுரர்கோ
னயஞ்சால்வசுவரவோடறநாதன்புரமெரித்தோன்
வயங்காதவன்மதன்வெங்கலிவருவிச்சுவன்பிதிரென்
றியம்பாய்திதியிறையோரிவரெண்ணும்மடைவினிலே. (௭௪)

## தினபட்சி.

வேறு.

மருவுமிராசாளிகொடிமஞ்ஞையாந்தைவாரணமொடன்றிலெழின்மராள மர்க்கம், வருகௌதமாண்பெண்ணுங்கழுகுசில்லேவளர்பாறுமரங்கொத்திமது பஞ்செவ்வாய்க், குருவிகம்பு ணேமிப்புள் குக்கிலோடு கூறுகவுதாரி வயவன் வண்டானந், திருவளியண்டங்கரடமுள்ளல்கோட்டான்றெருள்வயவன்பரிமு தனட்பக்கிதேரே. (௭௫)

## தினவிருக்ஷம்.

எட்டியெழிலாமலகமத்திநாவலெய்துகருங்காலியொடுசெய்யகாலி, தட் டைபணேபுன்னேவடம்பலாசுசாலுந்தாதலரியார்வில்லமருதுவெள்ளில், சிட் டர்புகழிலஞ்சிபுக்குவாச்சாவஞ்சி செய்யபலாவெருக்குவன்னி மராச்சேதார, மட்டவிழ்பூங்குழன்மாதேசினேசானிம்பமதுகமிவைவாசிமுதற்றருகாணே.()

## கனவின் பலாபலன்.

வேறு.

பானுமதிதேவர்மலேவேலேநதிகூபம்பைம்பொன்மணிதந்தைமகவன்னேநர ர்மாத, ரானேபரிதேரெருதுகோயின்மறையோர்களம்புயமிறைச்சிகனிபூமர மொடன்ன,மானினெடுகோழிமதுசோரிமலர்நீறுமன்னுகடைமோரொடுபெரு த்தியும்விடத்தா, னேனேயுளவெள்ளேசவமானிரைகடீபமென்றுமிவைகாணவி னிதென்பர்கனவென்றே. (௭௭)

வேறு. செங்கதிர்மண்டலந்திங்கண்மண்டலம்
பங்கயக்கரத்தினுற்பற்றிக்கொள்வதாய்க்
கங்குலிற்பகலினிற்கனவிற்காணுமே
லங்கண்மாஞாலமெண்ணரசனுவனே. (௭அ)

மன்னியவலப்புயமலையைவெள்ளையாம்
பன்னகந்தீண்டினும்பகர்கனவிலே
தன்னுடைச்சென்னிதான்றடிந்துதின்னினு
மன்னவனேத்துசீர்மன்னனவனே. (எகூ)

சுரபியுமமரரும்வெற்புஞ்சோலையு, மிரவியுந்திங்களுமேறுவேழமும்
புரவியுமாதரும்பொன்னுந்தீபமுந், திருவுறுங்கனவினிற்சிறந்துகாணவே. ()

வெண்டொடைவெண்டுகில்விளங்குமேனியோ
ரொண்டொடிதன்னகத்துட்புகுந்திட
வெண்டகுதன்மனையெரிந்துதோன்றிடக்
கண்டிடின்வாழ்வுறுங்கனவிலென்பரே. (அக)

வேறு.

சங்குதீபநிறைகுடஞ்சாமரை, பங்கசாதம்பலமணிவெண்குடை
கங்கைவேலைகனவினிற்கண்டிடிற், பொங்குசெல்வம்புகழ்படவெய்துமே. ()

வேறு.

சுரராடலோடல்கருநாகநீசர்துணைவீயுமாதர்மறவோர்
கருநாய்குரங்குநரிபேயரக்கர்கழுகோடுகோகமிவையும்
வருவாசிதேனுமதயானைதேவர்மறையோர்கற்றிமொழியுங்
கரிதானயாவுமிகவேகனவினிடைகாணநன்மையிலையே. (அங)

வேறு.

ஓடிடல்சிரித்திடலும்பரானவ, ராடிடலழுதிடலங்கைகொட்டிட
வீடியகனவினினிகழ்ந்துதோன்றுமேற்,கேடுவந்துலகினிற்கிளருமென்பவே

கனவிலோர்பாத்திரங்கன்னியேந்தியே நினைவரும்விசும்பினினின்றுவீழினும்
பனிமதிபரிதியைப்பணிகடீண்டினும், வனிதையேமன்னவர்மரணமாவரே. ()

காகமுமுவணமுங்கழுகுங்கார்நிற,நாகமுங்கழுதையுநரியும்பன்றியு
மூகமுங்கனவினிலுணரக்காண்பரேற், சோகமும்வறுமையுந்துயருமெய்துமே.

தென்றிசைவருபவளொருத்திசெம்மலர், துன்றியயாக்கையடொடர்ந்து சென்றிடக், கன்றியசிந்தையாற்கனவிற்காண்பரேன், மன்றலங்குழலினாய் மரணமாவரே. (அஎ)

ஒண்கதிரம்புலியுடுக்கள்கோபுரம்,வண்கொடிமேருமாமலைகள்வீழ்ந்திடக்
கண்கெடமுடிவிழக்கனவிற்காண்பரேன்,மண்கெடத்தக்கவர்மரணமாவரே.()

வேறு.

நீறுமோரும்பருத்தியுநீணதிச், சேறுமென்புமவிறகுசெம்பூக்களுங்
காறிலாதகனவிடைக்கண்டிடிற், கூறுநோயும்வறுமையுங்கூடுமே. (அகூ)

வேறு.

வங்கமதிலேறிநடுக்கடலிற்சேரமன்னுகரையதிற்சேரக்குடைவாளாதி, தங்கியவாயுதமிறைச்சிசாலியுப்புத் தயிர்பானெய்மிதியடிதண்கனிதாடாங்கும், பொங்கமுறு செருப்பிவைகள்காணப்பூணப்புசித்திடமெய்க் கனவினிடைவருமேயாகி, லங்கமுறுபிணிதீர்ந்துசுகமுண்டாகியரும்பொருளும்வருமெனவேயறைந்திடாயே. (கூ0)

கள்ளுதிரமறையவர்களருந்தத்தீயகட்டமதைச்சுட்டுமெய்யிற்பூசவன்னப், புள்ளரசொடன்றில்கொக்குமயூரங்காணப் பொற்சிவிகைமுதலானயானமேற, விள்ளரியகையிணையைக்கட்டக்காலில்விலங்கிடநற் கன்னியரைக்கூடமாந்தர், தெள்ளுதமிழ்பாடியும்பர்பூசைசெய்யத்திகழ்கனவுவரிற்பவன்கள்சேருமன்றே. (௧௧)

செருக்கானமழைவரவேபுதியகூறைசேர்த்துநதிநீந்திடமெய்ப்பிணிகடரு, மருக்காலுங்குழல்வனிதைதன்னைக்காண மனுடர்தசைபொன்னிறமாச்சுட்டுமாந்தத், திருக்காணுங்காலருந்தநூறைஞ்ஞூறு செழுந்தனமாம் புயநூறுபத்தாஞ்சென்னி, விருப்பாரத்தின்பரெனில் வேந்தராவார் வியாழனுரைத்திடுகனவின்விதியதன்றே. (௧௨)

அத்திபுளிசூதமுதற்றழைத்ததாரு வதிலேறப்பான்மரங்களேறவட்டை, குத்திடுதேள்வெம்பாம்புதன்னைக்காணக் குலமிகுத்துப்பலமேறுமெறும்புக்கூட்ட, மெத்திடவேயுடலூரச்சுகமாமெய்யில்விடுமலத்தைக்காணவிருகரங்களாலு, முய்த்திடவேபூசவுண்ணக்கனவிற்காணிலொன்றினுக்கொன்றதிகபலமுரைப்பர்மாதோ. (௧௩)

ஆனினிரைபுத்தகங்கள்காணக்கல்வியருமலையாலயமேறப்பசுக்களேழு
வீனமறவோடிமுயற்சொரூபமாகியேறிமதினின் றுவிழப்பிணிகடரும்
பீனமுறுமுலைவேசிதன்னைக்காணப்பீதகமாந்துகிலுடுத்துப்பீதச்சாந்து
மேனிதனிலணிந்தவளைக்காணப்பேசவீடகத்தினுட்புகுதமிகுமேசெல்வம். ()

தினைகடுகுமிளகெள்ளுச்சாமையுள்ளிசெழுமுதிரைகேழ்வரகுதீயபிண்ணாக்கினிமையுறுபலாக்கனிகொள்வரகொடெண்ணெயிவைகாணிற்பலபிணியுமெய்துமென்க, பனிகொள் சுரைக்காய்பாகல் பூசினிக்காய்பன்றி முயல்முதலைகடாப்படுவரீனர், கனவதனிற்காணவரிற்றுக்கங்கேடுகோவலராற் பயஞ்சேதங்காட்டுமாதோ. (௧௫)

மரமுறிந்துவிளக்கயிற்றூலுரைச்சூழமன்னருக்கேகேடாகும்பன்றியாதி, மிருகமதுநலியமன்னர்பயமாமெச்சில்விழைந்தருந்தமேனியினெய்தன்னைப்பூசவருவருக்குமழுக்காடையுடுக்கச்சென்னியழகுறுகேசங்களையக்கழுதைமேதி, யுருவுயரொட்டகமேறிவீழக்காணிலுறுமரணஞ்சிலநாளென்றுரைக்கலாமே.

கைகாலற்றிடமுரியப்பற்கள்வீழக்கந்தரமுமுடியுமறக்கண்டாற்பெண்டிர், மெய்யுறுமித்திரர் கிளைஞர்சாவாஞ்சேற்றில்வீழ்ந்தெழவாழ்புனனீந்தமதிவெய்யோனை, வையமதில்வீழ்த்தவிறையாலயத்தின்மன்னுசிகரக்கொடிகள்வீழவேலை, வெய்தெனவேயூர்வளையக்கனவுகாணில் வேந்தர்பயநகர்க்கேடுமேவுமன்றே. (௧௭)

சென்னியதுமுண்டிதமாய்க்காவியாடை திகழவுடுத்தருந்தவத்தோன்சேரநீசன், றுன்னிமயிர்பிடித்தேகக்கழுதையோரிசோகுகுறட்பூதமிராக்கதர்நாய்காக, மின்னுமெயிறுறுகரடிகுரங்குவேங்கை விறற்பருந்தோடசுரர்தமைத்தினமுங்காணத், தன்னுயிரையுடனீக்கிவருடமொன்றிற்சமன்றூதர்கொடுபோவர்தயவிலாதே. (௧௮)

செய்யகலையுடுத்துமெய்யிற்சிவந்தசாந்துசெம்மாலையணிந்திட்டமுட்காட்டிற்புற்றில். வெய்யவுடற்குறையதனிலேறமாது மிகுகுறட்கார் நிறத்தவளைக்கூடமேனி, துய்யகருநிறத்தொருவனிரும்பாற்செய்த தூயகலன்பூண்டுகருந்துகிலும்வீக்கி, மெய்யதனிற்கருநிறப்பூச்சூடக்காணமிகுநோய்வந்துடறுனும்வீயுமன்றே. (௧௯)

வானரத்திலேறிமுதற் றிசையிற்போக மயிர்குறைக்கத்தலையதனி லெண்ணெய்வார்க்க, வீனமுறுகரத்தேறவிறந்தார்மேலி லேறிடப்புல்விறகுசுமந்திடத்தென் றிக்கி, லூனமுறவொருவனழைத்திடவேபோகவொழியாத பிணியதனுன்மெலிந்துதிங்க, ளானவைக்குளிறந்திடுவனென்பர்தொன்மையாரணநூன்முழுதுணர்ந்தவறிவின்மிக்கோர். (கOO)

படுகுழியின்விழுந்து வழிகாணுதேங்கப் பாடிநடமாடியுச்சி விரித்துத்தெற்கே, நடைபொருந்தப்பரிகழுதைவீக்குந்தேரி னமன்றிசையிற் சென்றிட நன்னெற்றிவெண்டே. ளிடநதிகள்கடல்கள்வற்றப்பாம்புக்கூட்டம்ருந்திடக்கல்லாற்கறுத்தோனெறியக்கண்டால், விடவமுதங்கலந்தவிழிமின்னேபொன்னேவெண்மதியொன் றளவதனில்வீவர்தாமே. (கOக)

மலமதனைவாயதனுல்வெள்ளிபொன்போல்வாந்திக்கக் கரடிகுரங்கிழுக்குந்தேரி, னலமுறத்தெற்கேகவொருகறுப்பிதெற்கேய்ங்கைபிடித்தீர்க்க வுடல்கறுப்பதாகக், கலைகருமையாயுடுத்தேயிருக்கும்வேளைக்கலையகலு நக்கன்முனைய்வந்துநிற்கக், கொலையுறுவர்சிலநாளிற்பூமிவாழ்வுகூடாதென் றமரர்குருக்கூறினனே. (கOஉ)

வேறு.

தீட்டுபாசுரஞ்செங்கையிற்றந்திடல், கோட்டெருமையுளியங்குரங்குநாய்,
வாட்டமுற்றிடவந்துகறித்திட, லீட்டுதெண்டினிலேறலுந்துன்பமே. (கOங)

பெற்றம்வீழ்ந்திடப்பேசரும்பாதகன், பற்றிவாழ்கொடுபோகப்பகலிர
வுற்றவேளையிலிக்கனவுள்ளதேற், சுற்றமோடுதெம்மாவிதுறப்பரே. (கOச)

மேகந்தூற்றிடவேண்டுசிற்றுண்டிகள், பாகமாகப்புசிக்கப்பலன்பெறு, மாகமீதினணிசிலர்கைக்கொளத், தோகைகைம்பெணைத்தோய்ந்திடத்துன்பமே. ()

தூரதேசங்கள்போனவர்தாலமா, யீரமேனியிருக்கிலிறப்பதாஞ்
சீருடன்மணஞ்செய்திடக்காண்பரே, லூரினல்லவர்சாவென்றுரைப்பரே. ()

கரும்பின்கட்டிதேந்தாய் † முருகின்கனி, விரும்புமாங்கனிவெண்ணெய்மஞ்சட்டிர, ளரும்புபூவெழுத்தாணிநிறைகுடங், குரும்பைதான்பெறிற்கூறுங்குழலியே. (கOஎ)

வேறு. பன்னிரண்டாறுமூன்றுபகருமொன் றரைமாதத்தான்
முன்னுறும்யாமமாதிமுறையினுல்வரும்யாமங்கண்
மன்னியவெழுநாளென்னவைகறைப்பொழுதுதன்னிற்
பன்னியகனுக்கண்டார்க்குப்பலாபலன்பலிக்குமன்றே. (கOஅ)

**கனவின்றேஷநிவிர்த்தி.**

அரசுறுபூசைசெய்யவந்தணர்க்கமுதுநல்கக்
கருதியதானம்பண்ணக்கங்கைநீராதியாட
வரமுறுசுரபிதொட்டுவணங்கிடப்புராணங்கேட்கப்
புரையுறுகனுவிற்குற்றம்போமெனமொழிவரன்றே. (கOகூ)

**சுபாசுபப்படலம் முற்றிற்று.**

ஆ. செய்யுள் கூகக.

---

† முருகு - எலுமிச்சை.

பத்தாவது

# நாழிகைப்படலம்.

### இராசிநாழிகை.

வேறு.

கொடிமீன்மேடநாலேகால்குடமேறைந்திற்கால்குறையு
மடவாள்கோலுக்கைந்தாகுமகரமிதுனந்தேளுடனே
யடலார்சிங்கமைந்தேகாலலவன்சிலையுமைந்தரையா
மிடையேயுதயமுதலோராறெண்ணப்பகலின்மானமதே. (க)

### உதயாற்பரப்.

வேறு.

தக்கவோர்மாதத்துள்ளதிகதிக்கவ்வுதயந்தன்னை
யொக்கவேயீந்தபேறேயொவ்வொருதிகதிநீக்க
மிக்கெழுவுதயராசியளவெனவிளம்பினோரா
லக்கதிர்மாதங்காலையிராசியுமஃதாமன்றே. (உ)

### அவச்சாயை.

மூந்துமூன்றிரண்டுமூன்றுமூன்றுநான்கைந்துதானுந்
தந்தவைந்தாறுடைந்துந்தக்கவைந்தொருநான்மூன்று
மூந்துமூன்றிரண்டுமூன்றுமூன்றுநான்கைந்துதானும்
வந்தவைந்தாறுடேழுமருவுமேழெட்டொன்பானும். (ங)

ஒன்பதோடொன்பானென்பானென்பதெட்டோதுமேழும்
பின்பகரேழாறைந்தும்பேசுமைந்தொருநான்மூன்று
மென்பதிற்பாதிகொண்டேயெண்ணிடுமேடமாதி
முன்பிடைகடையில்வைத்தான்மொழியுச்சிச்சாயையாமே. (ச)

வேறு.

நல்லேறிரண்டுமெடியேறுநண்டோடிரண்டுமெடிகுறையுஞ்
சொல்லாயிழைநாலடியேறுஞ்சுறவோடொருநாலடிகுறையும்
பல்லோர்புகழுமோரடிக்கேபதினேந்தாகுமங்குலந்தா
னெல்லாநாளுங்குறைவதுவுமேறுவதுந்தானரைவிரலே. (ரு)

வேறு. கொச்சைபிற்கூறதாதிகோளரிமுற்கூறந்த
முச்சியிற்சாயைதென்பாலுரைத்தபிற்கூறதாதி
மெச்சியமேடமாதம்விளம்புமுற்பாதியந்த
நிச்சயம்வடக்கேநிற்குமென்றனர்நீதிவல்லோர். (சு)

### நாழிகைக்குஅடி.

கடிகைக்குப்பகன்மானத்தைக்கருதுமேழ்பெருக்கிக்கண்ட
முடிவைத்தானீந்துசாயைமுன்னுறக்கூட்டித்தள்ளித்
திடமிக்கமனுவைநின்றசேடமும்பாதிசெய்தால்
வடமொய்க்குந்தனத்துமாதேமண்மிசையடிகளாமே. (எ)

## அடிக்குநாழிகை.

கண்டதாளிரட்டிசெய்துகருதியமனுவுங்கூட்டி
யெண்டருசாயைநீத்தடுதாகையினுக்கியம்புமேழாற்
கொண்டதோர்பகன்மானத்தைக்குணித்ததையீந்தபேறு
பண்டறிவாளரோதும்பகல்வருகடிகையாமே. (அ)

## நக்ஷத்திர உச்சம்.

மறியிரண்டாறுகுண்டைவான்மறைவிடைகண்பூதம்
பிறைவிழிவீணைநால்விண்பேசியாழ்நண்டொன்றேர்வா
னறைவிழிமதிநண்டைந்தொன்றலவனென்றுன்றுசிங்கஞ்
செறிதமிழிரண்டுசேயஞ்சேயிழைவானமொன்றே. (கூ)

மகன்மதியாறுகோல்வான்வண்டமிழ்துலைகண்பூத
மகன்மறையெரிகோறேளொன்றருந்தமிழ்தேடியாறு
தகுசிலைவிண்கார்ச்சாபந்தமிழ்தமிழ்விற்காக்கண்கண்
மகரமொன்றைந்துமானுன்மகரஞ்சான்மாகநாலே. (க0)

பாடுமொன்றேழ்சாறீயேழ்பகர்குடமதிநான்மீன
நீடுதீயேழ்மீனுகநிகழ்ந்தவிவ்விருபத்தேழு
நாமொலாதிமுன்பினுழிகையரைக்காலாகக்
கூடியவுதயநண்ணிக்கூறிடக்கடிகையாமே. (கக)

## வேறு.

தந்தகேட்டையாதியொன்பதானநாட்கள்சாயமு
னந்தநாளொடாறுநாட்களற்பமுச்சமெய்தவு
யிந்துசூடிநாளொடாறிரண்டுநேரதாய்க்கொளில்
வந்தகன்னலொக்குமென்றுவாலியோர்கள்சொல்வரே. (கஉ)

## நிலவுநாழிகை.

## வேறு.

ஏறுபக்கத்திற்கண்டதிதியினையிரட்டிசெய்து
கூறுமாறைந்துநீத்தகுறையினைச்சாயையெண்ணி
வீறுறக்கண்டகன்னறன்னிலேவிட்டசேட
நாறுபூங்குழலினுளேநிலவுநாழிகையதாமே. (கங)

தேய்ந்தெழுபக்கத்துற்றதிதியினையிரட்டிசெய்து
வாய்ந்தநாழிகைதன்னேடேகூட்டவேயமையுங்கண்டாய்
வாய்ந்தநாட்டிதிகளெண்ணிவரையறுத்துணரும்போது
காய்ந்தவேல்விழியினுளேகடிகையுந்தூயதாமே. (கச)

## நாழிகைப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் கூஉ௫.

---

## பதினோராவது
# சாதகப்படலம்.

திருவெழுஞ்சிறப்பினானைச்செகமெலாந்தொழுதுபோற்று
மருவெழுங்கமலமீதுநடந்தருண்மகிமையானைக்
கருவெழுபிறப்பிலானைக்கருணையுமறிவுமொன்றா
யுருவெழுகாட்சியானையுத்தமர்பணிவர்தாமே. (௧)

செந்திருவாழுமார்பன்சினவரன்பாதபத்தன்
சுந்தரத்தருமநூலுஞ்சோதிடநூலுஞ்செய்தோன்
புந்தியிற்றெளிந்தகல்விச்சரசோதிபோசராசன்
பைந்தமிழ்விருத்தப்பாவாலோரைநூல்பகரலுற்றான். (௨)

பொங்குமாதவத்தின்மிக்கபுராதனமுனிவரானோர்
தங்கள்பேரறிவினாலேசாற்றியவோரைநூலி
லிங்குளதுணர்ந்துபுன்சொல்யானுமஃதுரைக்கலுற்றேன்
சிங்கமதெதிரின்கண்ணுஞ்சிறுமுயல்செல்வதுண்டோ. (௩)

தொக்கபுன்சொற்களாலேசொற்றிடுங்கவிதையேனு
மிக்கதின்பொருணலத்தால்விரும்புவர்மேதைவல்லோர்
தக்கதோர்தேவரூபந்தாருவாலமைந்ததேனு
மிக்கடல்வையத்துள்ளோரியாரவரென்பதுண்டோ. (௪)

மாதவமுனிவர்கூறும்வடமொழிவாரியென்னுஞ்
சாதகபலன்கடம்மைத்தமிழினாற்சாற்றவேண்டிற்
பூதலந்தன்னில்யாவர்வல்லவர்குகனைப்போற்றுந்
தீதறுமுனிவனல்லாற்செப்புதலரிதுமாதோ. (௫)

வேண்டிமுற்பிறப்பிற்செய்தவினைகளின்பயனையெல்லாங்
காண்டகுமிந்நூல்கொண்டுகாணலாந்தீபமொத்துப்
பூண்டமாதவத்தோர்தங்கள்புலனைத்துப்புகழ்தற்கொத்த
வாண்டபேரோரைநூலினளவையாரறியவல்லார். (௬)

ஆதிநான்மறைநோக்காகியம்புயன்விதியைப்பார்க்கச்
சோதிசேரடியதாகுஞ்சோதிடகலைமூன்றென்ப
ரேதெனிற்கணிதமோரையிரண்டுநான்மறையினோக்காம்
வேயதிர்முகூர்த்தம்பார்க்கவிளம்புசங்கிதைதானொன்றே. (௭)

உரைத்திடுங்கணிதமோரையுலகினுக்கொன்றாய்மேவுந்
தரித்தசங்கிதைகள்தேசந்தனக்கொருபேதமாகுங்
கருத்துறுசிந்தைநட்டமுட்டிசாதகத்திற்பாவம்
விரித்திடுமிராசிமாதேயீராறின்மேவுமன்றே. (௮)

### இராசி அங்கம்.

மன்னுகாலங்கஞ்சென்னிவதனமார்பிதயந்துத்தந்
துன்னிடைதுத்தியோனிதொடைசானுகணைக்கால்பாதம்
பன்னியமேடமாதிமுதலவொன்பதுபாதத்தி
லுன்னுசக்கரத்தினிற்குமிராசிகளொழுங்கின்மாதோ. (௯)

## இராசிவடிவம்.

வேறு.

மீனமெதிர்மீனிரண்டுகுடந்தரித்தோன் மேவுகும்பமகர நவ்விமுகத்துமீ ஞ, மானநிறைவலக்கரத்திற் பிடிப்பான்கோலாமங்கியொடுநெற்றரித்துவங் கஞ்சேர்ந்த, மானினிநற்கன்னிவிழவியாழ்தண்டேந்துமகனரிவைபுரவியுடற் புருடன்சாப, மீனமிலாவெருதுகொறி சியஞெண்டுவெய்திடுதேடத்தம்வடிவு டையவாமே. (கo)

## இ ரா சி நி ற ம்.

வேறு.

செம்மைபாண்டுசிதஞ்செக்கர்சீரார்தூமந்தவளமொடு
மம்மரைம்பொன்காளமிமங்குராலேகருமையிளஞ்சிவப்பு
வம்மகொச்சைமுதனிறமாமாண்பெண்சரமேதிரமுபயங்
கொம்மைமுலையாய்கொடிதினிதுங்குறித்துநிரலேகொள்ளுவரால். (கக)

## இலக்கினநாமம்.

வேறு.

ஓரையுடற்குணமுதயமுரைக்குமொன்றுவுயர்குடும்பம்வித்தையிரண்டுற் றமூன்று, வீரமுடன்பிறப்பணிகஞன்குமாதாவித்தையைந்துமகவாறுபிணிக டெவ்வர், தேருமில்லாணட்புரைகளேழுவாயுள் செலவெட்டுத்தாதைகுருத்த ன்மமொன்பான், சேருமதிசீவனம்பத்திலாபஞ்சேதஞ்செப்படைவிற்பத்துட ஞென்றிரண்டுமாதோ. (கஉ)

## கேந்திரமுதலியன.

மூன்றுடனுறையிரண்டுபத்தோடொன்றுமொழிந்திடு நல்லுபசெயமாமொ ன்றுநாலு, வான்றிடுமீரைந்துகண்டஞ் சதுட்டயந்தானறைந்திடுமுக்கோண மதுவைந்தொன்பானுந், தோன்றுதயமுதலடைவால்ராசியெல்லாந்துதிகேந் த்ரம்பணபரமாபோகிலீபஞ், சான்றகருமுகிலனையகூந்தற் செவ்வாய்ச் சசி யொடசிமுகவிழியாய்சாற்றிக்கொள்ளே. (கந)

## இராசிக்கால்கள்.

வேறு. கன்னிகுடங்கோல்யாழிருகால்கருதுமிறகுமீன்மகர
மின்னுங்கடகந்தேள்பல்கால்வில்லாடரியேறிவைநாற்கா
லுன்னுமுதயநாலேழ்பத்தொழுங்கினுறினும்பல்காலா
மன்னுமாலையிரவிடத்துமரபின்வலியர்மடமாதே. (கச)

## பிருட்டோதயசிரோதயம்.

ஏருடலவன்சிலைமகரம்புறத்தாலுதிப்பவிராவலியாங்
கூருயிழைதேளரிமிதுனங்குடங்கோறலையாலுதிப்பவிவை
வீரூர்மிதுனமொன்ருெழியவிளங்கும்பகலின்வலியனவா
மாருவுபயோதயமீனமொன்றேமலர்ப்பூங்குழன்மயிலே. (கரு)

## உ ச் ச நீ சு ம்.

வேறு. தகர்விடைமகரமங்கைநண்டுமீன்றருங்கோலேழும்
பகலவன்முதலோர்க்குச்சம்பத்துமூன்றெழுநால்பக்க
மிகழிலைந்தொடுமூவொன்பானிருபதத்துச்சமாகு
நிகழ்தருமவைக்கோரேழுநீசங்களாகுமாதோ. (கசு)

## மூலத்திரிகோணம்.

உத்தமஞ்சிங்கமேரூடொண்ணுதல்சிலைகோல்கும்ப
மொய்த்தவெங்கதிரோனுதிமூலத்ரிகோணமாகுந்
தத்தையங்குதலைகேளாய்சரந்திரமுபயத்தாதி
மத்தியமீறுவர்க்கோத்தமநவாங்கிசத்தின்மன்னும். (கஎ)

## சட்டுவர்க்கம்.

வேறு.

உதயமோரைதிரேக்காணமொன்பதிராறையாறுந்
துதையவங்க்சமறுவர்க்கஞ்சொல்லுமிராசியங்கிசத்துக்
கதிபர்செவ்வாய்புகர்புந்தியாலோனிரவிபுதன்புகர்பூ
மதலைவியாழன்சனிமந்தன்மறையோனெழுங்கின்மன்னுவரே. (கஅ)

ஒற்றையிராசிகதிர்மதியாமுடுக்கோனிரவியிரட்டையிலா
மற்றவ்விராசிமுக்கூற்றிற்றூனஞ்சொன்பானதிபருபமா
மூற்றுமறிமான்றுலாங்கடகமுதலாய்முன்ஞன்கிராசிக்கும்
பெற்றமுறையேபிரித்தெண்ணப்பெறுமாலொழுங்கினவாங்கிசமே. ()

வேறு.

மேதினிமகன்புகர்புதன்மதியம்வெய்யோன்மேதைபுகர்சேய்பொனெடுகொ
ரிசனிசெம்பொ, னேதுமிறையோர்களொருராசிதனைநேரேயொன்பதுபகுத்
திடவங்கிசமதாகுங், கோதின்மறிமான்வணிகனண்டுமுதலாகக் கொள்ளுதய
நால்வகையின்மூவகையதாக, வாதிமுதலந்தமளவாடுகயலாக வானவுடுவத்த
னையுநாலடியிலெண்ணே. (உ0)

வேறு. ஏய்ந்தமுப்பதுகூறிட்டோரிலக்கினந்தனைச்சேய்மந்த
னய்ந்தபொன்புந்திவெள்ளியைந்தைந்தெட்டோரேழைந்தா
யேய்ந்தகூறெய்துமொற்றைக்கிரட்டைக்குவெள்ளிமேதை
வாய்ந்தபொன்சனிசேய்தத்தங்கூற்றெருமருவுமன்றே. (உக)

வேறு. பன்னிரண்டங்கிசம்பகரிலக்கின
முன்னுகோளாதியாய்முற்றுஞ்செல்லுமா
லன்னமென்னடையினுயறைந்தகோளினுக்
குன்னியவர்க்கங்களாறுமோதினேம். (உஉ)

## இராசித்திக்கு.

வேறு.

குணக்குமுதனுற்றிசைகளுக்குங்கொறிசேமிதுனநண்டடைவே
கணக்கிலெண்ணவதிபதியாங்கடகந்தேண்மீன்சந்திகளா
மிணக்குங்கதிர்சேரிராசிக்கோரிரண்டாமிராசிவர்ச்சியமாம்
வணக்குமிறைவருறைதிசையேமரபின்மேலாய்மருவிடுமே. (உங)

## அரவாதிகளினட்புமுதலியன.

அரவுக்கரிவையாழ்மான்கோலருமீன்சிலைநட்பாட்சிகுடம்
பரவுச்சந்தேள்விடைநீசம்பகையாடலவன்கோளரியா
மரபிற்கேதுபுகைவட்டம்வான்விலென்னுங்கோணுவின்
விரவுச்சங்கள்குடஞ்சிங்கம்விளங்குமிதுனஞ்சிலையாமே. (உச)

### சலராசி அனலிராசி.

வேறு.

கூறியமகரமீன்கும்பங்கோலுட, னேறலவன்சலராசியென்பராற்
சீறுதேள்கன்னியாழ்சிங்கம்விற்கொறி, யாறுமோதியவனலிராசியாகுமே. ()

### கோளியல்பு.

வேறு.

காலமேவடிவருக்கன்கருத்திந்துவலிதுசெவ்வாய்
கோல்வரக்கற்றோன்ஞானங்குருவெள்ளியின்பந்துன்ப
நீலனுமிரவிதிங்கணிருபர்சேயதிகாரத்தோர்
மால்சிறார்வியாழன்வெள்ளிமந்திரிசனிதொண்டாமே. (உசு)

### கிரகரத்தினம் அதிதேவர்திக்கு.

வேறு.

செம்புதரளந்துகிர்பச்சைசெழும்பொன்வைரநீலங்கள்
வெம்புமெரிநீர்குகன்மாயோன்விண்கோன்றேவிநமனிறைவர்
பம்புகதிரோன்முதலோர்க்காம்பானுபுகர்சேய்பணிகாரி
யும்பர்மதிமால்பொன்னிறைவரொழுங்காலெட்டுத்திசைகளுக்கே. ( )

### கிரகலோகம் தானியம்.

வேறு.

பித்தளைகஞ்சஞ்செம்புபிறங்கியதராப்பொன்வெள்ளி
கைத்திடுமிரும்புநாகங்காந்தமேகோளுலோகம்
வைத்தநெற்கோதிமாடம்வருமுற்கங்கடலைசிம்பை
யுய்த்தவெள்ளுழுந்துகொள்ளாமொன்பதுகோளுண்மாதே. (உஅ)

### சத்துரு மித்துரு சமன்.

வேறு.

புகர்நீள்சனிபகைமால்பொதுக்கதிர்க்கேனையர்நட்பாம்புதனுதவனுறவன்
னியர்பொதுவம்புலிதனக்காம், பகைமால்பொதுச்சனிபார்க்கவன்பிறர்பெள
மனுக்குறவாம்பகலோன்புகருறவிந்தரிபொதுவே பிறர்புதனுக், கிகன்மால்க
விபொதுச்சுன்குருவினுக்கேனையர்நட்பா மெரிபொன்பொதுச்சனிமாலுறவி
கலோர்பிறர்புகர்க்கா, நிகழ்பொன் பொதுப்புலவன் புகர்நட்பேனையர்பகை
யாநீலற்கவரவரிற்கெழுநெறியித்திறமாமே. (உகூ)

### கிரகநட்புமுதலியன.

வேறு. கனகனுஞ்செம்பொன்மாலுங்கதிபெறுபுகருந்தக்க
தினகரனொழிந்துளோருஞ்சேயொழிந்தவரும்பானு
பனிமதியொழிந்துளோரும்பகன்மதிசெவ்வாய்நீத்த
வனைவருநட்போர்வெய்யோனுதியோர்க்கடைவின்மாதே. (௩௦)

வேறு.

மூலத்ரிகோணத்தவர்க்கிரண்டுமொழியஞ்சொன்பதீராறு
நாலெட்டிராசித்தலைவருந்தமுச்சத்திறையுநட்பினராஞ்
சாலப்பதினொன்றீரைந்துமூன்றுநேழிற்றலைவரெலாங்
காலப்பகைவிருதிறத்துங்கலந்துநின்றோர்மத்திமரே. (௩௧)

ஒருவர்க்கொருவரிரண்டீராறுயம்வலியினுறவுற்றுற்
றருதற்காலமித்திரராந்தன்னுச்சத்துஞ்சிலர்மொழிந்தார்
கருதிற்பிறரேமருவலர்தற்காலஞ்சுபர்வந்துடனிசைந்தா
லரிதிற்புகலுமதிமித்ரரதிசத்துருக்களாவர்களே. (௩௨)

சிங்கமுதலாறிரவியின்கூறலவனுதிதிங்களின்கூ
றங்குமேதைபுகர்சேய்பொன்மந்தற்கிரவியகமளித்தான்
றுங்கப்புந்திபுகர்சேய்பொன்சன்னுக்கிந்துவீடளித்தா
னெங்கும்வீடாயிடம்வருவாரிராகுக்கேதென்றியம்பினரே. (௩௩)

## கிரக சாதி குணம்.

வேறு.

பார்த்திவரேயினன்செவ்வாய்மறையவன்பொன்புகர்வணிகன்பரவுசோமன்
சூத்திரனேபுதனீனப்பிறப்பினனுஞ்சூரியன்சேய்சொல்லுங்காலை
யேத்தருக்கன்மதிபொன்னும்புகர்புதனுமிரவியின்சேய்வனிசேயுஞ்
சாத்திகமுமிராசதமுந்தாமதமுமெனுங்குணங்கள்சார்ந்துளோரே. (௩௪)

## ஆண்பெண்அலிராசிமுதலியன.

வேறு.

அந்தணன்குசனுதபனுண்புக, ரிந்துபெண்சனிமாலலியென்பராற்
புந்திவெள்ளிகுசன்சனிபொன்னவ, னைந்துபூதத்ததிபர்களாவரே. (௩௫)

வேறு.

உச்சநட்பாட்சிதத்தமொன்பதங்கிசத்திற்காணின்
மெச்சிடுவலியர்நான்கில்விதுப்புகருதயந்தன்னிற்
பச்சைமால்செம்பொன்கூறுபத்தினிற்பானுசெவ்வாய்
நச்சிடுஞ்சனியோரேழினனிதிகழ்வலியராமே. (௩௬)

## சிட்டவீரியம்.

வேறு.

உடுபதியருக்கனுக்குத்தராயணம், வடுவறுசமரகம்வக்கிரங்கதிர்
விடுமொளிவென்றியேசிட்டவீரிய, மடுதிறலவனிசேயாதியோர்க்கரோ. ()

## தூரக்கிரகம்.

வேறு.

நீடுமாதவன்மந்தனிலமகன், பாடுதேய்பிறைபாவிகளாவரா
லோடுவெய்யவனேடொரிராசியிற், கூடுமாலுங்கொடியவனாவனே. (௩௮)

## நிஷேகம்.

வேறு. சேயம்புலிகாரணமாகத்திங்கடோறுமங்கையர்பூத்
தேயும்பீடவிராசியினிலிந்துவெய்தும்பொழுததனாற்
றூயபுமானுஞ்சுபக்கோட்கள்சொல்லுமேழாமிடநோக்கின்
மேயதலைவரோடணுகிவிரும்பிப்புல்லுமெல்லியலே. (௩௯)

வேறு.

சீருறுமாதரார்சென்மராசிக்கங், கீரிரண்டோரிரண்டேழெட்டொன்பதோ
டாருமஞ்சாறிரண்டானராசிகள், பேரறிவாளரெண்பீடராசியே. (௪௦)

வேறு.

இனன்மதிபுகர்சேய்தத்தமங்கிசத்தெய்திநிற்பக்
கனகன்முக்கோணமோரையெய்தினுங்கருப்பமுண்டா
நனிபுகழினையயோகநலந்தருகண்ணிலோர்க்குப்
பனிமதிக்கிரணம்போலமலட்டினிற்பலியாதன்றே. (சக)

மதியிலக்கினத்தினற்கோண்மருவிநான்கிரண்டேழ்பத்திற்
றுதிசெய்முக்கோணமேவச்சொல்லுமூன்றுயமாறின்
முதிர்பலதீக்கோண்மேவின்முந்தியகதிரோனேக்கிற்
பதிவுறுகருப்பநன்மைபகுதியாயடையுமாதோ. (சஉ)

வேறு. ஒற்றையிராசியாண்கூற்றிலோரையருக்கன்மதிசெம்பொ
னற்றைவலியராய்நிற்பிலாண்பாலாகுங்கருவென்பர்
மற்றையிராசிபெண்கூற்றின்மருவினனையோர்பெண்ணகுங்
கற்றையளகக்கயல்விழியாய்க்ருப்பாதானத்தியம்பினரே. (சங)

வேறு. அந்தணன்கதிரொற்றையிலடையினணகு
மிந்துவெள்ளிசேயிரட்டையிலெய்துமேற்பெண்ணு
முந்தநின்றுளோருபயமாமிராசியின்முடுகப்
புந்திநோக்கினுமிரட்டையாம்புகன்றுளோர்திறத்தால். (சச)

வேறு.

எதிரதாகமதிபானுநோக்கிடினுமிந்தினைப்புதனுமந்தனு
மதிரநோக்கிடினுமிரட்டைராசியினிலருக்கனைப்பௌமனேக்கினு
மதியமொற்றையினிலுதிக்கினும்புதனுமதியுமொற்றையொடிரட்டையுற்
றுதிரநோக்கிடினுமோரைவெள்ளிமதியுறினுமாணிலலியாகுமே. (சரு)

நல்லகோள்களுடையங்கிசத்தவனிமைந்தன்மந்தன்மதிநண்ணுமேற்
பல்லுடன்பெறுவரிந்துநண்டிலெழமந்தனீள்பௌமனேக்கிடிற்
சொல்வர்கூன்மதிசுணரனேக்கமுறுசொன்னமீனெழுகின்வான்முட
மில்விடக்கண்மதிதீயகோண்மருவியேனைநோக்கினிமையின்றெனில். (சசு)

## அரிட்டம்.

வேறு. தீயகோட்களிந்துடன்செயிர்த்துநிற்றல்செய்துசீ
ராயபௌமனெட்டின்மேவியாயகோட்கனேக்குருத்
தீயவோரைதன்னிலேயிலங்குபானுநிற்பனேற்
றுயினேடுசேயும்வெய்யசத்திரத்தில்வீயுமே. (சஎ)

வேறு. திங்கள்வெங்கோளிணப்பட்சேர்ந்துநாலேழிலெட்டிற்
றங்கினுமோரைவெங்கோளிடைப்படத்தங்குதீயோர்
துங்கவேழெட்டினிற்பச்சுபர்நிலைநோக்கமற்று
லங்கையிற்சேயுந்தாயுமழிவதுதிண்ணமாமே. (சஅ)

வேறு.

எட்டினேழினுறுதீயகோளுறினுமீரிரண்டினிணையாறினின்
விட்டசேயிரவிநிற்கவெண்மதிமெலிந்துதன்கலையிழப்பினுந்
துட்டர்தம்மிடையருக்கனுதலுயர்சோமனுதல்சுபர்நோக்கறக்
கிட்டினுங்கடிதுகேள்புலம்பவருகெற்பமோடழியுமன்னையே. (சகூ)

ஒரையேழினிலமைந்தன்வெம்பரிதியுற்றடைந்திடினும்வெய்யகோ
ணேருமோரையிருபாலுநிற்கவனையோர்கள்காணநெறிநல்லகோட்
பார்வையற்றிடினுநாகமுண்டசசிபானுபாவியொடுதிக்கநீ
ளாரலெட்டுறினுமன்னைகெற்பமரிசத்திரத்தினழிவெய்துமே. (ருo)

வேறு. அந்தியிலிந்துவோரையுதித்திடவறைந்தராசிச்
சந்தியில்வெங்கோணிற்கத்தனித்தனிமதியைத்தீக்கோள்
வந்துகேந்திரத்திருதன்மருவிடப்பிறந்தபாலன்
வெந்திறற்காலன்றன்னைவினவிடச்செல்லுமன்றே. (ருக)

வேறு. அறுமதிபன்னிரண்டணுகிப்பாவிகள்
வறியவெட்டோரையின்மருவிக்கேந்திரத்
துறுசுபரின்றியேயுலகிற்றேன்றிய
சிறுவனக்கணந்தனின்மரித்தறிண்ணமே. (ருஉ)

வேறு.

உதயமேழில்வெங்கோட்களுற்றிட, மதியமன்னகோண்மருவிநிற்கவே
சிதைவினல்லகோட்டெரிசியாவிடிற், புதியபாலனப்பொழுதில்வீயுமே. ( )

அந்தமேழெட்டுதயத்திலம்புலி, வெந்திறற்கோளொடுமேவிக்கேந்திரத்
துந்துநல்லோர்நிலைநோக்கொழிந்திடிற், றந்தசேயக்கணந்தன்னில்வீயுமே.

குறைந்தவெண்மதியோரையிற்கூடியே, செறிந்தபாவிகள்கேந்திரஞ்செப்புமெட், டுறைந்துநின்றிடவோங்குமிப்பார்மிசைப், பிறந்தசேய்நமன்பின்னடையாகுமே. (ருரு)

வேறு.

இந்துராசியந்தமெய்தியெண்ணுமொன்பதைந்தினில்
வந்துவெய்யகோட்கணின்றுவண்மையானநல்லகோட்
சந்திராவிலோசனந்தனைச்செயாதிருக்குமே
னைந்துதந்தைதாய்புலம்பநொய்தின்மைந்தன்வீயுமே. (ருசு)

வேறு.

காரார்சனிமதியம்புவிமகனுயிரங்கதிரோ
னீராறுடனுதயம்புகவெட்டொன்பதுமருவச்
சீரார்வலிநெறியிற்குருதெரிசிப்பதுமிலையே
லேரார்புவிவருபாலகன்யமன்வாயணுகிடுமே. (ருஎ)

ஏழஞ்சிருநாலொன்பதொடீராறுதயத்திற்
சூழுஞ்சசிதீயோரொடுதுன்னுமிகுவலிசால்
வாழுங்குருப்புகர்மால்விழிவையாதகன்றிடச்சே
யாழம்புதிலமேல்வரினுடனேயழிந்திடுமே. (ருஅ)

வேறு.

நீலனோரையங்கிசத்துநிற்பினு, மாலுமோரிரண்டாயத்தினெய்தினும்
பாலகன்றனையன்றுபயந்ததாய், சாலநீக்குதல்சத்தியமென்பரே. (ருகூ)

பன்னுமூன்றினிற்பாபக்கோளுறத், துன்னுமாறினிற்சுபர்செறிந்துறத்
துன்னுதேளுதயத்திற்றேன்றிடி, லன்னசேய்சமற்கறுதியாகுமே. (சுo)

இந்துவோரையிலெய்துமாலையில், வந்ததீயகோள்வருமிராசியிற்
சந்திமேவிடத்தரைப்பிறந்தசே, யந்தகன்புரமடையுமென்பரே. (சுக)

வேறு.

அம்புலிபாவிகளரியகேந்திரம், பம்பினும்பாவிகளிடையிற்பான்மதி
நம்புமேழெட்டுநாலுதயநண்ணினு, மிம்பரிற்பிறந்தசேயிறுதியெய்துமே. ( )

எட்டுதயங்கடையேழில்வெண்மதி, துட்டரோடெய்திநற்சுபத்திஞேக்கறச், சி
ட்டர்கேந்திரங்களினீங்கிற்சேயினைக், கட்டியேதாயழக்காலன்கொள்வனே.

எட்டினிற்கேந்திரத்தெய்தப்பாவிக, ணட்டசந்திரனுதித்திடினுநாண்மதி, துட்
டரோடுற்றிடுமுதயஞ்சொல்லுமேழ், கிட்டினும்பிறந்தசேய்கெடுதறிண்ணமே

நல்லவர்தனமாறேடுமுன்ஞன்குற, வல்லவர்கேந்திரமஞ்சொன்பானுற, வெ
ல்லவனுதித்திடவிம்பர்தோன்றுசே, யில்லினிலடைந்தவர்க்கிழவுசெய்யுமே.

படுகலைதேய்மதிபன்னிரண்டுற, முடுகியெட்டிலக்கினமூரிக்கோளுறத்
தொடுவலிகண்டகஞ்சுபரொழிந்திடிற், சடுதியிற்சேயமபுரத்தைச்சாருமே. ( )

இலக்கினமொன்பதுமுடிவொரெட்டினிற், கலைக்கிராதவன்காரிசேயுறக், கு
லக்கண்கன்விழிக்கொண்டுநோக்கறி, லலக்கணுற்றிடக்கிளையழியுஞ்சேயரோ

தீயவரொன்பதஞ்செட்டிற்சேர்ந்தொளி, தோயிருசுடரிலோர்சுடருதித்திடத்
தூயவர்நோக்குதறன்னலற்றிடிற், றூயவர்புலம்பிடத்தனயன்றுஞ்சுமே. ( )

கேந்திரம்பொன்ஞெழிந்துதயங்கேழ்சனி, யேந்திரவியினுறுமொருவரெய்த
வார்ந்திடுபாவிகளட்டமத்துறச், சாந்திரமாகவேதனயனென்பரே. (௬௯)

நீளுறுகேந்திரம்வெள்ளிநின்றுசேய், கோளறவிலக்கினங்கூடிநல்லவன்
மீளவந்தோரையின்மேவுநாளினின், மாளுதனியமமாமைந்தனென்பரே. ( )

நீண்டசேயினனிடைநின்றதிங்களு, மாண்டிறலிராசியினமைந்தபாவிக
டீண்டிடநோக்குறவுதித்ததிங்களு, மீண்டுவந்தோரையின்மேவிற்றுஞ்சுமே. ()

அஞ்சிலொன்பதிற்குருவமையவாங்கவ, ரெஞ்சலில்கேந்திரத்தியைந்தபௌ
மனர், விஞ்சிலக்கினத்தினைமேவின்மேன்மையோர், துஞ்சிடுஞ்சேயெனச்
சொல்லினரரோ. (௭௨)

வேறு.

ஆதியந்தமெட்டேழொன்பதைந்தினிற், சீதவெண்மதிதீயவரோடுற
வோதுநல்லவர்நோக்கமொழிந்திடிற், சாதறிண்ணமென்றூர்தவத்தோர்களே

வேறு.

பக்கநாளிராசியந்தம்பகலிராவந்தந்தன்னின்
மிக்ககோளுேக்குருமற்பிறப்பினும்வெய்யகோளாற்
றொக்கபேருரகந்தோய்ந்தசோமனைநோக்கும்யோக
மொக்கவேபிறப்பினுஞ்சேயுயிர்க்கழிவாகுமாதோ. (௭௪)

திங்களுக்கொன்பதெட்டிற்றீயகோட்சேருமேனு
மங்கவரேழெட்டிராறென்றினிலமைவரேனுந்
தங்கியசேயோடன்னைசாமிணையாறிலாறில்
வெங்கொடுங்கோளேநிற்கிற்புதல்வனுநாசமாமே. (௭௫)

ஆளியின் முற்பிற்கூற்றிலசுபருஞ்சுபருநின்று
வாளுதயந்தேளாகில்வக்கிரமெய்திவெங்கோ
ளேழுதயத்தையெட்டோடிரண்டுறச்செல்லநோக்கிற்
சூழ்கடற்புவியில்வந்துதோன்றுமுன்மகவுசாமே. (எசு)

சனியிலக்கினந்த்ரேக்காணமங்கிசத்தலைவரெட்டா
றினிதுறின்மேடமாதியெய்திநின்றளவுமெண்ணி
கனிவருமாண்டுமாதநாளிற்சேய்துஞ்சுமென்று
முனிவரர்மொழிந்தாரன்னமுறையினுலுணர்ந்துகொள்ளே. ( )

வேறு.

செப்புதிரேக்காணராசிக்கோரேழினில், வெப்புறுகோளுறவிதுவுதிக்கினுந்
தப்பில்பல்கோளெலாமெட்டிற்றங்கினு, மப்பொழுதிற்சிலநாளிற்சாகுமே.

வேறு.

ஆன்றமீனமுதிக்கவருக்கனு, மேன்றதிங்களுமூன்றினிலெய்திடத்
தோன்றுசேய்மிகுநோயினிற்றுன்னியே, மூன்றுநாளின்முடிந்திடுமென்பரே

சூழுமம்புலிக்கேழினிற்சொல்லிய, வாழிவெய்யவன்மண்மகன்சேர்வனேற்
றுளுநோயிற்றளர்ந்துழிமைந்தனு, மேழுநாளிலிறந்திடுமென்பரே. (அ0)

வேறு.

மெய்த்தமேடாதியின்மேவுநான்கினில், வைத்தகோலாதியுள்வந்தவெட்டி
னின், மொய்த்தவெங்கோளுறின்முழுதுநோயினுற், பத்துநாளையிற்சிறுபால
ன்வீயுமே. (அக)

வேறு.

உன்னுமேடமாதியாறிலொன்பதெட்டில்வெய்யவன்
றுன்னுநற்றுலாதியாறில்வந்துசோமனிற்கவே
நன்னிலத்துதித்தமைந்தனுசமெய்தன்மேன்மையோர்
பன்னிரண்டுநாளிலென்பர்பாரிலுண்மையாகவே. (அஉ)

வேறு.

சூரன்புகராறுதுலங்கிடநான், கீரந்தருமாமதியெய்திடவே
பாரின்கணுதித்திடுபாலகனு, மீரொன்பதுநாளினிலீறுறுமே. (அ௩)

வேறு.

அருமதிராசிக்கோரைந்திலொன்பதிற், பரிதிவந்தெய்தவேபிறந்தபாலக
னிருபதுநாளினிலிறுதியெய்துமென், றுரைமுனிவோர்நனியோதினர்களே.

வெங்கொடுங்கோளொருமூவர்வெள்ளிதன், றங்கியமனைதனிற்சார்ந்த
வெட்டினி, லங்கவரணுகவேயவதரித்துளோன், றிங்களோரொன்றினிற்சாத
றிண்ணமே. (அ௫)

வேறு.

ஓரைவெம்மைகொள்கேதுவுதித்திடப், பேருநன்னிலமீதுபிறந்தசேய்
மாரனும்பணிதென்மறைமாமுனி, யேரொர்திங்களிலீறுறுமென்பனே. (அசு)

வேறு.

ஓரைநாதனெடுங்கியவெட்டுறக். கோரமானவெங்கோள்கொடுநோக்குறப்
பாரின்மீதுபிறந்திடுபாலக, னீரிரண்டெனுந்திங்களிறப்பனே. (அஎ)

இட்டபன்னிரண்டெய்துமிரண்டினி, லட்டமந்தனிலாறினிற்பாவிகள்
சிட்டர்நோக்கறச்செனித்திடுமைந்தனுக், கெட்டுமோதத்திறுதிவந்தெய்துமே.

வேறு.

சீருறும்விடையினிற்சேய்செறிந்தொரு, கோரவெங்கோளொடுகூடியட்டமம்
பேருறுபாவிகள்பெருகநோக்கிடி, ஞேர்வருடத்தின்மேலுய்வதில்லையே. ( )

வேறு.

பங்குநின்றுதிக்கப்பலபாவிக, ளங்குநோக்கமருவியமர்ந்திடிற்
றங்குமீரெட்டுநாட்டனின்மாதமாண், டங்குமாளுமென்றாருஞ்சேயரோ. ()

வேறு.

வக்கிரமெய்தியமந்தன்சோமனைப்,புக்குறுகேந்திரம்புகவெட்டாறினிற்
சிக்கெனநிற்கவன்சேயுநோக்குமேன்,மிக்கவாண்டிரண்டினில்வீயுமைந்தனே

அந்தணன்சோமனையணுகியெட்டுற, விந்துவெங்கோளினேக்கெய்திப்பார்க்கவன், றந்தநோக்கற்றிடத்தலத்துதித்தசேய், முந்தியவாண்டொருமூன்றில்வீயுமே. (கஉ)

ஓரையிலிறைவனுக்கோதுமெட்டினிற், சீருறுதேய்மதிசேர்ந்துநல்லவர், பார்வையற்றல்லவர்பார்வையெய்திடிற், பேர்கொண்மூவாண்டினிற்பிள்ளை வீயுமே. (கங)

நிலமகன்சனியுடனிற்கநோக்கவே, கலையறுகுறைமதிகண்டகந்தனின்
மலைவறநிற்கவேபிறந்தமைந்தனன், னலமறவாண்டொருநாலில்வீயுமே. ( )

வேறு.

சந்திரன்பொனுதபன்றலத்தின்மைந்தனுதலு
மந்தனோடுதிங்கள்பானுபௌமனுதன்மாசற
விந்துபங்குபௌமனுதலேகராசியெய்திடி
னைந்துவற்சரத்தின்மைந்தனுவிவீயுமென்பரே. (கரு)

வேறு.

சீறரிநண்டினிற்சேர்ந்துபார்க்கவ, னேறுமெட்டாறுபன்னிரண்டிற்சேர்வுறக்
கூறியநல்லகோட்குறித்துநோக்குறி, லாறுவற்சரத்தினிலாயுள்வீயுமே.(கசு)

வேறு.

திறமுறுவோரைதன்னிற்றிரேக்காணநிகளஞ்சர்ப்பம்
பறவையேபாசமாகவோரேசன்பாசநீங்கச்
செறிதருபாவக்கோட்கள்சேர்ந்திடப்பிறந்தபிள்ளை
யறிஞர்கூறேழாமாண்டிலழிவதுதிண்ணமாமே. (கஎ)

நட்டமாமதியமோரைநண்ணிடத்தீயகோட்க
ளெட்டினினுவினுதலெய்தினுமதிசேய்தம்முட்
பட்டவங்கொருவரோரைபயிலவேபரிதியேழிற்
கிட்டினுமேழாமாண்டிற்கேடுறுமரணமாமே. (கஅ)

வேறு.

ஆரலாதலகன்மதியாகுத, லோரையெய்தவுரைக்திரேழுற
வாரிஞாலமிசைவருமைந்தனுக், கோரிலாவயதெட்டென்றுசொல்வரே. ( )

தன்பெரும்புதல்வன்மனைசார்மதி, யன்பில்பார்மகனுதவனேக்கவே
யின்பநல்லகோட்பார்வையிழக்குமே, லொன்பதாண்டிலுயிர்க்கழிவெய்துமே

வேறு.

குறைதிங்கண்மேவிவருநாலொடாறுகொடியோர்கள்பார்வையுறவே
பெறுமுன்னர்வீயுமினியோர்கள்பார்வைபெறுமாகிலெட்டுவயதாஞ்
செறிகின்றபார்வையெனிலைதென்பர்தெரிசித்துவெய்யசுபரை
யுறுமோரையாளிதனையேழின்மேவிலொருமாதமென்பர்வயதே. (கoக)

வேறு.

உதயனுதனுபெதியங்கிசத், ததிகபாவிகளாகவிராறினில்
விதுவுறைந்திடவெய்யவர்நோக்குறின், மதலையொன்பதுவற்சரம்வாழுமே. ()

சுத்தகேந்திரந்துன்னுமிராகுவை, வைத்தபாவிகளேவந்துநோக்குமேற்
பத்திறுதல்பதினென்றினுகுத, லொத்தவாண்டிலுயிர்க்கழிவாகுமே. (கoரு)

வேறு.

துத்தியாடரவைநோக்கவேசுபர்கடுன்னுகேந்திரமடைந்திடிற்
பத்தினுதல்வருமாண்டுசொன்னபதினுறினுதல்பகர்சேய்கெடு
மெய்த்திவாகரனுடுங்குதிங்களொடுமேதைசேர்ந்தினியநோக்குறி
னெத்தவாண்டுபதினுறின்வீயுமெனவோதினர்முனிவருண்மையே. ( )

வேறு.

உன்னியேயேழினிலுறைந்தராகுவைத், துன்னியமதிபுதனேக்கவேசுபர் [மே
தன்னிறைநோக்கறிற்சார்ந்திடாவிடிற், பன்னிரண்டாண்டினிற்பாலன்வீயு

வேறு.

எட்டொன்பதொடிருபத்திரண்டிருபத்துடனேந்தொன்றிருநான்கிருபதி னேடொருமூன்றொன்பதிரண்டு, கிட்டும்மிருபதுபின்னுரைமூவேழொருபத் தாய்க்கிளருந்தகர்முதல்ராசிகொள்பாதங்களினடைவே, வட்டந்தருமதிநின் றிடவலிதாகிய வெங்கோள்வந்தொன்றுதல்விழிநோக்குதல்செய்தால்வருசே ய்க்கு, நட்டம்புகலுவ ரெய்தியபாகத்தளவாண்டி ன்றகோளிடைநோக்காவி டினண்ணுவிடின்மாதே. (கoசு)

வேறு.

இருவரோரைராசிநாதரீற்றிலாறிலெட்டினின்
மருவியத்தமத்தைமேவிமன்னிநிற்கவன்னவர்
வருமிராசியளவதாய்வகுத்தவற்சரங்களிற்
கருதுமாயுண்முடியுமென்பர்கற்றறிந்தமுனிவரே. (கoஎ)

வேறு.

மூலத்தினென்றிரண்டுமூன்றெனுங்காலிற்பாம்பி
னுலொத்தவொன்றிரண்டுமூன்றெனவறையுநேரே
கோலச்சேய்தோன்றிற்றந்தைகொண்டதாய்பொருட்குச்சேத
நூலுற்றுக்கொள்ளாண்டெட்டுநோக்கிடிற்றந்தைசாமே. (கoஅ)

பூசத்திலுதிக்குநண்டிற்பூராடத்துதிக்கும்வில்லிற்
பேசிற்ருய்தந்தைசாவாமடைவினிற்பெண்ணுண்டோன்றில்
வீசுற்றபூசநாளில்விதிமுறைமுதற்காலாதி
மாசற்றதந்தைதாய்சேய்மாதுலற்கழிவதாமே. (கoகூ)

அத்தநாட்பரணிநாளிலறைந்திடூமூன்றுங்காலிற்
புத்திரனுதிக்கிற்சாவாம்புகழ்ந்ததாய்தந்தைக்கென்பர்
சித்திரைநாளிற்காலோரிரண்டினிற்செறிந்தகன்னி
யொத்தவோரையினிற்றந்தைதாய்க்கழிவொழுங்கிலாமே. (கக௦)

வேறு.

உத்தரத்திலுறுமுதற்காலிரண், டத்தநாளின்மூன்றுயிலீயத்துநான்
கொத்தகாலினிற்றுயுரைதந்தைசேய்,வைத்தமுன்னவன்மாளுமொழுங்கிலே

## கேண்டாந்தம்.

புரவிமூலம்புகழ்மகத்தாதியி, லரவிரேவதிகேட்டையந்தத்தினிற்
கருதிரண்டுகேடிகைகெண்டாந்தமா, மருவுலாவுமலர்க்குழன்மங்கையே. ( )

பக்கமைந்தினிற்பத்துமூவைந்தினிற், ளுக்கவீற்றினிற்சொல்லியநாழிகை
யொக்கவிவ்விரண்டோதுகெண்டாந்தமாந், தக்கதந்தைதாய்தானழிவிருமே.

வேறு.

சிலையரிதகர்முற்கூறுதேள்குளிர்கயல்பிற்கூறு
விலகுமங்கிசங்கடாமேயிராசிக்கெண்டாந்தமென்பர்
நலமுறுமோரைக்குற்றநாட்களுமுகூர்த்தநாளுங்
கலைமதிசேர்நாட்போலக்கெண்டாந்தங்கண்டுகொள்ளே. (ககச)

வேறு.

உரகமுகூர்த்தஞ்சாமுகூர்த்தமுற்பாதங்களிடிவிழுதல்
பரவும்வாயுப்புகைகேதுப்பகலிலந்தமிராவந்தம்
விரவுபக்கநாளோரைமேவங்கிசத்தின்விளம்பந்தத்
துரியசேய்தோன்றிடிற்சாவாமுயர்நற்கோளினோக்கறிலே. (ககரு)

வேறு.

இட்டநல்விராசயோகத்தேதுவிற்பிள்ளைதோன்றில்
வட்டநீர்வையமீதுமரணமேயடையுமென்பர்
கிட்டுகெண்டாந்தமெய்திக்கேடறவளர்ந்தமைந்தன்
மட்டறவாழ்வுஞ்சீருமகிமையுமெய்துமாதோ. (ககசு)

வேறு.

செங்கதிர்க்கெட்டினின்மந்தன்சேயுறி
லங்குநற்கோளினோக்கறினுமல்லிடை
மங்கலன்சனியிடையிரவியன்னினுந்
தங்கொருவருடனற்றந்தைதுஞ்சுமே. (ககஎ)

வேறு.

தீயகோளுடனேபானுச்செழுஞ்சரராசிமேவி
லாயுதமுதகஞ்சாலழிந்திடுந்தந்தையென்ப
ரேயுரைமந்தன்கூடியிராச்சரராசிமேவி
லாயதேசாந்தரத்திலழிந்திடுந்தந்தைதானே. (ககஅ)

வேறு.

அந்தநற்கோட்களாலகன்றபானுவை, மந்தனங்காரகன்மருவுயோகத்தி
லுந்துநீருலகமேலுதித்தசேயினற், றந்தையும்பேரனுஞ்சாதறிண்ணமே. ( )

நாலினிலொன்பதிலிராகுநண்ணிடிற், கோலமைந்தன்பிதாக்குன்றுங்கேதுவுஞ், சாலவெண்ணேழினிற்சடுதியிற்கெடு, நூலிடைத்தீயகோளேக்குமேவிலே. (கஉ0)

ஆறிரண்டிரவிசுனடையத்தேய்மதி, வீறினேழெய்திடிற் றந்தைவீயுமான், மாறிலாநல்லகோளேக்கின்மண்மிசை, யீறின்மூவாண்டளவிருக்குந்தந்தையே. (கஉக)

வேறு.

உதயநாலேழெட்டீராறுரைத்திடுமிராசிதன்னின்
முதிர்விலாப்பௌமனிற்கின்முகிண்மூலையன்னைகேடாம்
பிதிர்நிலையொன்பான்றன்னிற்பிறங்குகோடனுக்குநாலிற்
கதிர்மிகுமிராகுநிற்கிற்கருவியாற்றந்தைசாமே. (கஉஉ)
